සියලුහිමිකම් ඇවිරිණි]
(முழுப்பதிப்புரிமையுடையது)
All rights Reserved]

ஆசிரியர்: எம்.ஏ. அபுதாஹிர்

Q First கல்வி நிறுவகம்
முன்னோடி வினாப்பத்திரம் 1

5

மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சைக்கான முன்னோடி வினாப்பத்திரம் 2024

வினாத்தாள் I

ஒரு மணித்தியாலம்

சுட்டெண்: .....

பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள் :

* உமது **சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.
* **மூன்றாம் பக்கத்தில்** குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக.
* இவ்வினாத்தாளில் **40** வினாக்கள் உள்ளன. எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை **இவ்வினாத்தாளிலேயே எழுதுக.**
* ஒவ்வொரு வினாவிற்கும் **மூன்று** விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றிடையே ஒவ்வொரு வினாவிற்கும் உரிய **சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**
* செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

பக்க இலக்கம்	பெற்ற புள்ளிகள்
2	
3	
4	
5	
6	
7	
8	
மொத்தம் இலக்கத்தில்	
மொத்தம் எழுத்தில்	

	முதலெழுத்தொப்பமும் குறியீட்டு எண்ணும்
முதலாவது பரீட்சகர் புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப் பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன்.	V/I/T
இரண்டாவது பரீட்சகர் முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	V/I/T
மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பிட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	V/I/T/EMF
பிரதான பரீட்சகர் மேற்பார்வை செய்தேன் இறுதிப்புள்ளிகள் சரியாகும்	V/I/T/CH

www.ikedu.lk

[பக். 2 ஐப் பார்க்க

மாதத்தின் முதல் வாரம் தரம் 06 தொடக்கம் 11 வரையான
தமிழ் மீடியம் வகுப்புக்கள் இலவசம்
விரும்பியவர்கள் பங்குபற்றலாம்

இதோ உங்களுக்கான அரிய சந்தர்ப்பம்

LEARN EASY

- KNOWLEDGE IS POWER -

www.learneasy.lk || www.lkedu.lk

76667-4945

Learn Easy கல்வி நிலையத்தில் நிகழ்நிலையாக

zoom Online class

76667-4945

அனைத்து வகுப்புகளுக்குமான அனுமதிக்கட்டணம் இலவசம்

Mobile	076667-4945
WhatsApp	+94 76667-4945
Viber	+94 76667-4945
Email	learneasy.lk@gmail.com
Web	www.learneasy.lk

Face book - https://www.facebook.com/learneasylk

வகுப்புக்கள் தொடர்பான மேலதிக தகவல்களை
மேலுள்ள இலக்கத்திற்கு
WhatsApp செய்வதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்

1. பின்வரும் உருவை அவதானிக்க. அதனைப் பற்றிய சரியான கூற்றைத் தெரிவு செய்க.




(1) தலைப்பாகை அணிந்துள்ளவர்களில் இருவர் மண்வெட்டி கொண்டு வேலை செய்கின்றனர்.

(2) கத்தியால் மரக்கிளைகளை வெட்டும் வேலையில் மூவர் ஈடுபட்டுள்ளனர்.

(3) நான்கு ஆண்களும் மூன்று பெண்களும் உள்ளனர்.

2. கீழே உள்ள A, B, C, D ஆகிய உருக்களில் ஒத்த இரண்டு உருக்களும் யாவை?



A B C D

(1) A உம் D உம் (2) B உம் C உம் (3) A உம் C உம்

3. பின்வரும் உருவில் உள்ள வெற்றிடத்துக்குப் பொருத்தமான உருப் பகுதி எது?




(1) (2) (3)

4. பின்வரும் கவிதையில் உள்ள வெற்றிடங்களுக்குப் பொருத்தமான சொற்கள் முறையே இடம்பெறும் விடையைத் தெரிவு செய்க.

பறவைகள் பாடிப் பறந்து வரும்
தென்றல் ..... குளிர்ச்சி தரும்
மலர்கள் மலர்ந்து மணம் .....
அதிகாலைப் பொழுதோ ..... ஊட்டும்

(1) அசைந்து காட்டும் அழகு
(2) காற்றும் சிந்தும் விழிப்பு
(3) காற்றும் பரப்பும் இன்பம்

5. முதலில் தரப்பட்ட கட்டத்தினுள் உள்ள மூன்று உருத் துண்டுகளையும் ஒன்றுபடச் சேர்த்து அமைக்கக் கூடிய தனி உரு எது?




(1) (2) (3)

www.ikeduk


சுட்டெண்:.....

6. கீழே தரப்பட்டுள்ள உருக்களை அவதானியுங்கள்.

 ஆகும் எனின்  ..... ஆகும்.


வெற்றிடத்துக்குப் பொருத்தமான உரு எது?



(1)



(2)



(3)

7. கோலத்துக்கு ஏற்ப ? குறியீட்டுக்குப் பொருத்தமான உரு எது?


 .....?.....


(1)


(2)



(3)

8. பின்வரும் உருவில் உள்ள முக்கோணிகளின் எண்ணிக்கை யாது?




(1) 12 (2) 16 (3) 18


9. வெறுமையாய் உள்ள அடைப்புகளுக்குப் பொருத்தமான உருக்களைக் கொண்ட விடையைத் தெரிவு செய்க.




(1)


(2)


(3)

10. 

உருவில் காணப்படும் கனவுரு வடிவமுள்ள மரக்குற்றி, முறிந்த கோடு வழியே இரண்டு பகுதிகளாக வெட்டப்படுகின்றது. இரண்டு பகுதிகளிலும் இருக்கும் முகங்களின் எண்ணிக்கை யாது?

(1) 10 (2) 12 (3) 16

www.ikedu.lk

11. முதலில் தரப்பட்டுள்ள எழுத்துக்கள் உள்ள உருவை முகம் பார்க்கும் கண்ணாடியில் பார்க்கும் போது அது தோற்றும் விதத்தைத் தெரிவு செய்க.

A	F	I
C	D	B

I	ꟻ	A
ꓭ	ꓷ	Ↄ

(1)

I	F	A
ꓭ	ꓷ	Ↄ

(2)


I	ꟻ	A
ꓭ	D	Ↄ

(3)

12. 25 தொடக்கம் 75 வரையுள்ள எண்ணும் எண்களை எழுதும் போது இலக்கம் 5 ஐ எழுத வேண்டிய தடவைகளின் எண்ணிக்கை யாது?


(1) 16 (2) 15 (3) 14

13. சைக்கிள் பந்தயம் ஒன்று இடம்பெறவுள்ள பாதையின் படம் கீழே தரப்பட்டுள்ளது. பந்தயப் பாதையின் மொத்தத் தூரம் யாது?



(1) 14 km 200m
(2) 17 km 200m
(3) 17 km 400m

14. கீழே தரப்பட்டுள்ள இரு உருக்களுக்கும் ஏற்ப (A) அளவுள்ள ஓர் அட்டைத்தாளில் இருந்து (B) அளவுள்ள எத்தனை அரை வட்டங்களை உயர்ந்த பட்சம் வெட்டலாம்?



(1) 10
(2) 20
(3) 30

15. ஒன்று 35 ரூபாய் விலையுள்ள 4 சொக்கலேட்டுக்களை வாங்கும் ஒருவருக்கு 1 சொக்கலேட் இலவசமாக வழங்கப்படும். 12 சொக்கலேட்டுக்களை வாங்கியுள்ள ஒருவர் செலுத்த வேண்டிய மொத்தப் பணம் எவ்வளவு?

(1) 350 ரூபாய் (2) 385 ரூபாய் (3) 420 ரூபாய்

16. ஒரு நிரையில் மதுசா தொடக்கத்திலிருந்து 8 ஆவதாகவும் கடைசியில் இருந்து 18 ஆவதாகவும் நிற்கிறாள். இதன்படி நிரையின் நடுவில் நிற்பவருக்கும் மதுசாவிற்கும் இடையில் நிற்பவர்களின் எண்ணிக்கை யாது?

(1) 3 (2) 4 (3) 5

17. சோதியிடம் இருந்த பென்சில்களின் எண்ணிகையை விட சீதாவிடம் 3 பென்சில்கள் கூடுதலாக இருந்தது. சீதாவிடம் இருந்த பென்சில்களின் எண்ணிக்கையை விட மீனாவிடம் 2 பென்சில்கள் குறைவாக இருந்தது. மூவரிடமும் இருந்த பென்சில்களின் மொத்த எண்ணிக்கையாக இருக்கக் கூடியது பின்வருவனவற்றுள் எது?

(1) 12 (2) 15 (3) 16

www.ikedu.lk


18. வெற்றிடத்துக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

ஞாயிறு, திங்கள், புதன், சனி, புதன், ...

(1) ஞாயிறு (2) திங்கள் (3) புதன்


● கோலத்திற்கேற்ப 19, 20 ஆகிய வினாக்களின் வெற்றிடத்திற்குப் பொருத்தமான எண்ணைத் தெரிவு செய்க.

19.




(1) 5 (2) 9 (3) 14

20.




(1) 10 (2) 12 (3) 24

21. கடதாசி A இல் இருந்து B அளவுடைய 7 கடதாசித் துண்டுகளையும் கடதாசி X இல் இருந்து Y அளவுடைய 5 கடதாசித் துண்டுகளையும் பெற்றுக் கொள்ள A, X ஆகிய இரு கடதாசிகளையும் வெட்ட வேண்டிய தடவைகளின் குறைந்தபட்ச எண்ணிக்கை யாது?



(1) 10 (2) 11 (3) 12

22.



இங்கு  எனும் உருவினை ஒத்த உருக்கள் எத்தனை உள்ளன?

(1) 2 (2) 3 (3) 5

23. வளர்மதி தனது வீட்டிலிருந்து 15 மீற்றர் கிழக்கு நோக்கிச் சென்று அங்கிருந்து இடப்பக்கம் திரும்பி 10 மீற்றர் சென்று மீண்டும் வலப்பக்கமாகத் திரும்பி 20 மீற்றரும் அதன்பின் மீண்டும் வலப்பக்கமாகத் திரும்பி 10 மீற்றரும் சென்று பயணத்தை முடித்தாள். இப்போது வளர்மதி நிற்கும் இடத்திலிருந்து அவளது வீட்டிற்கு உள்ள மிகக் குறுகிய தூரம் யாது?

(1) 55 மீற்றர் (2) 45 மீற்றர் (3) 35 மீற்றர்

www.ikedu.lk

24. பின்வரும் ஐந்து உருச்சட்டங்களில் ஒரு நிகழ்வின் ஐந்து சந்தர்ப்பங்கள் காட்டப்பட்டுள்ளன.




A B C D E

அச்சந்தர்ப்பங்களின் அர்த்தமுள்ள ஒழுங்குமுறை யாது?

(1) DAEBC (2) DAECB (3) CADBE

25. முதலில் தரப்பட்டுள்ள அடைப்புக்குள் உள்ள எழுத்துக்கள் முழுவதையும் கொண்டுள்ள அடைப்பைத் தெரிவு செய்க.



(1) (2) (3)


26. 2014 ஆம் வருடம் சரிகா தனது 12 ஆவது பிறந்த நாளையும் அனிகா தனது மூன்றாவது பிறந்த நாளையும் கொண்டாடினர். பின்வரும் எந்த வருடத்தில் சரிகாவின் வயது அனிகாவின் வயதின் இருமடங்காக இருந்தது?

(1) 2017 (2) 2020 (3) 2021

27. சாந்தி ஒரு பெண் பிள்ளையாவாள். அவளுக்கு உள்ள சகோதரர்களின் எண்ணிக்கை அவளது சகோதரிகளின் எண்ணிக்கையை விட 1 குறைவானதாகும். சாந்தியின் குடும்பத்தில் உள்ள ஆண், பெண் பிள்ளைகளின் மொத்த எண்ணிக்கை 4 எனின், சாந்தியின் அண்ணனுக்கு எத்தனை சகோதரிகள் உள்ளனர்?

(1) 1 (2) 2 (3) 3

28.



இந்த உருவில் காணப்படும் முக்கோணிகளின் எண்ணிக்கை 18 ஆகும். உருவில் உள்ள கோடு ஒன்றை நீக்கும் போது முக்கோணிகளின் எண்ணிக்கை 14 ஆகக் குறைவடையும். அக்கோடு எது?

(1) கோடு AD (2) கோடு AC (3) கோடு AB

29. 500 ரூபாய், 50 ரூபாய், 20 ரூபாய் ஆகிய மூன்று வகையான நாணயத்தாள்களைப் பயன்படுத்தி 730 ரூபாயைச் செலுத்துவதற்குத் தேவையான நாணயத் தாள்களின் குறைந்த பட்ச எண்ணிக்கை யாது?

(1) 7 (2) 8 (3) 11

www.ikeou.lk

30. சம அளவான கயிற்றுத் துண்டுகள் சிலவற்றைப் பெறுவதற்காக, கயிறு ஒன்றில் மூன்று வெட்டுக்கள் இடப்பட்டன. அவ்வாறு வெட்டிப் பெறப்பட்ட கயிற்றுத் துண்டு ஒன்றின் நீளம் 3 மீற்றர் எனின், ஆரம்பத்தில் வெட்டுவதற்குப் பயன்படுத்தப்பட்ட கயிற்றின் நீளம் யாது?

(1) 9 மீற்றர் (2) 12 மீற்றர் (3) 15 மீற்றர்

31. ஒரு வேலைக்காக காலை 7.00 மணிக்கு வீட்டிலிருந்து புறப்பட்ட சீலன், குறித்த ஓர் இடத்தில் அவனது நிழல் அவனின் வலப்பக்கமாக விழுவதைக் கண்டான். மாலை 4.00 மணிக்கு வேலையை முடித்த சீலன், அதே பாதை வழியாக மீண்டும் வீடு திரும்பினான். காலையில் தனது நிழலை அவதானித்த குறித்த அதே இடத்தில் இப்போது சீலன் தனது நிழலைக் காண்பது

(1) அவனது வலப்பக்கமாக
(2) அவனுக்கு முன்னால்
(3) அவனது இடப்பக்கமாக

32. ஓர் எண்ணை 5 ஆல் வகுக்கும் போது மீதியாகக் கிடைக்கக் கூடிய எண்களில் இரண்டு எவை?

(1) 1 உம் 4 உம் (2) 3 உம் 5 உம் (3) 1 உம் 7 உம்

● கீழே தரப்பட்டுள்ள 1, 2, 3, 4, 5 ஆகிய நிரல்களிலும் A,B,C,D ஆகிய நிரைகளிலும் உருக்கள் இடம்பெற்றுள்ள விதத்தினை விளங்கி 33, 34 ஆகிய வினாக்களுக்கு விடை தருக.

	1	2	3	4	5
A	⊣	⊤	⊢	⊥	⊣
B	⊥	⊣	⊤	⊢	⊥
C	⊢	⊥	⊣	⊤	⊢
D	⊤	⊢	⊥	⊣	⊤

33. B, 5 = [⊥] உம் D, 2 = [⊢] உம் ஆகும் எனின், [⊤] இற்குச் சமானவது,

(1) B, 2 (2) C, 4 (3) A, 3

34. உருவில், நிரை E ஐ இடம்பெறச் செய்தால் E, 1 இற்கும் E, 4 இற்கும் சமனாக இருக்கும் உருக்கள் முறையே எவை?

(1) [⊤] , [⊣] (2) [⊣] , [⊥] (3) [⊣] , [⊢]

35. [P x 2 = Q] [100 - Q = R] [R ÷ 5 = 6, மீதி 2]


மேலே உள்ள தொடர்புகளின்படி P இன் பெறுமானம் யாது?

(1) 34 (2) 32 (3) 28

www.lkedu.lk


● 36, 37 ஆகிய வினாக்களில் ? குறியிடப்பட்ட இடத்திற்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

36.




(1) 19 kg (2) 20 kg (3) 21 kg

37.



(1) 30 g (2) 40 g (3) 45 g


38. ஒரு கடதாசியை நான்காக மடித்து அதிலிருந்து ஒரு முக்கோணப் பகுதி வெட்டி நீக்கப்பட்டுள்ளதை முதலில் உள்ள உரு காட்டுகிறது. கடதாசியை மீண்டும் விரிக்கும் போது அது காணப்படும் விதத்தினைத் தெரிவு செய்க.



(1) (2) (3)

39. PQRSR என்னும் இரகசியக் குறியீட்டினால் காட்டப்படும் எண்ணாக இருப்பது எது?

(1) 43665 (2) 97646 (3) 64732

40. 

ஒத்த மரக்குற்றிகளைப் பயன்படுத்தி ஆக்கப்பட்ட ஓர் அமைப்பு உருவில் தரப்பட்டுள்ளது. பெரிய சதுர மரக்குற்றியொன்று கிடைக்குமாறு இந்த அமைப்பைப் பூரணப்படுத்துவதற்கு மேலும் எத்தனை சிறிய மரக்குற்றிகள் தேவை?

(1) 6 (2) 8 (3) 11

***

www.ikeou.lk

©[illegible]
(முழுப்பதிப்புரிமையுடையது)
All rights Reserved]

ஆசிரியர்: எம்.ஏ. அபுதாஹிர்

Q First கல்வி நிறுவகம்

முன்னோடி வினாப்பத்திரம் 1 **5**

மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சைக்கான
முன்னோடி வினாப்பத்திரம் 2024

வினாத்தாள் II

1 மணித்தியாலம் 15 நிமிடம்

சுட்டெண்: .....

பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்

* உமது சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.
* மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக.
* இவ்வினாத்தாளில் **60** வினாக்கள் உள்ளன. சில வினாக்களில் உபபகுதிகளும் உள்ளன.
* எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை **இவ்வினாத்தாளிலேயே** எழுதுக.
* விடைகள் எழுதப்பட வேண்டிய வினாக்களின் விடைகளைப் **புள்ளிக் கோட்டின் மீது** எழுதுக.
* விடையின் கீழே கோடிடுமாறு கேட்கப்பட்டிருக்கும்போது சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழே கோடிடுக.
* செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

பக்க இலக்கம்	பெற்ற புள்ளிகள்
2	
3	
4	
5	
6	
7	
8	
மொத்தம் இலக்கத்தில்	
மொத்தம் எழுத்தில்	

	முதலெழுத்தொப்பமும் குறியீட்டு எண்ணும்
முதலாவது பரீட்சகர் புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப் பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன்.	V/I/T
இரண்டாவது பரீட்சகர் முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	V/I/T
மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பிட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	V/I/T/EMF
பிரதான பரீட்சகர் மேற்பார்வை செய்தேன் இறுதிப்புள்ளிகள் சரியாகும்	V/I/T/CH

[பக். 2 ஐப் பார்க்க

www.ikeou.lk

1. பின்வரும் பந்தியை வாசியுங்கள்

வாணியின் கிராமத்திலிருந்து தெற்கே நூற்று இருபது கிலோமீற்றர் தொலைவில் ஓர் அழகிய நீர்வீழ்ச்சி அமைந்துள்ளது. அதனைப் பார்ப்பதற்காக வாணியும் அவளது குடும்பத்தினரும் இன்று அதிகாலை புறப்பட்டனர். புறப்பட்டு, அரை மணி நேரத்தில் அவர்களது வாகனம், அடர்ந்த வனப்பகுதியை ஊடறுத்துச் செல்லும் வளைவுகளை உடைய ஒரு பாதை வழியாகப் பயணிக்கத் தொடங்கியது. வழியில் பல இடங்களில் மான்களும், முயல்களும் வீதியைக் குறுக்கறுத்துச் சென்றன. வீதியோரங்களில் துதிக்கையை அசைத்தபடி யானைகள் சில நின்றன. திடீரென ஓரிடத்தில் காட்டுக் கோழி ஒன்று செல்வதை வாணியின் அப்பா, பிள்ளைகளுக்குக் காட்டினார். "இதுதான் நமது நாட்டின் தேசியப் பறவை" என்று வாணி சத்தமிட்டுக் கூறினாள். இரண்டு மணி நேரப் பயணத்திற்குப் பின் வாகனம், நீர்வீழ்ச்சி இருக்கும் இடத்தைப் போய்ச் சேர்ந்தது.

● பந்தியைத் துணையாகக் கொண்டு விடை எழுதுக.

(i) வாணியின் கிராமத்திலிருந்து நீர்வீழ்ச்சி காணப்படும் திசையையும் தொலைவையும் எழுதுக.

.....

(ii) பயணம் புறப்பட்டு அரைமணி நேரத்தில், எதனை ஊடறுத்துச் செல்லும் பாதை வழியாக வாகனம் பயணிக்கத் தொடங்கியது?

.....

(iii) பயணத்தின் வழியில் பல இடங்களில் வீதியைக் குறுக்கறுத்துச் சென்றவை எவை?

.....

(iv) யானைகள் வீதியோரங்களில் எவ்வாறு நின்றன?

.....

(v) அப்பா, காட்டுக் கோழியைக் காட்டியதும் வாணி சத்தமிட்டுக் கூறியது யாது?

.....

(vi) 'முடிந்தது' என்பதன் எதிர்க்கருத்துச் சொல் பந்தியில் இடம்பெற்றுள்ளது. அச்சொல்லை எழுதுக

.....

2. பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் எழுவாய் பயனிலைத் தொடர்பு சரியாயின் ✓ எனவும் பிழையாயின் ✗ எனவும் எதிரே உள்ள அடைப்புக் குறிக்குள் அடையாளம் இடுக.

(i) தாத்தா எதுவும் பேசாமல் அமைதியாக இருந்தார்கள். (.....)

(ii) மேசையில் புத்தகமும் பூச்சாடியும் இருந்தது. (.....)

(iii) தருமனின் பொறுமையான ஒழுக்கமே தருமத்தைக் காத்தன. (.....)

(iv) அதீத பொலித்தீன் பாவனையால் நிலம், நீர், வளி போன்ற அனைத்துமே பாதிப்படைகின்றன. (.....)

(v) பதினான்கு ஆண்டுகளும் பதினான்கு நாட்கள் போலக் கழிந்தன. (.....)

3. எதிர்கால பன்மை வினைச் சொல்லைத் தெரிவு செய்து அதன் கீழே கோடிடுக.

(1) பாடினார்கள் (2) பாடுவார்கள் (3) பாடுவார்

www.ikeau.lk

சுட்டெண்:.....

4. கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு வினாவிலும் சரியாக எழுத்துக் கூட்டப்பட்ட சொல்லைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

(i) (1) முயர்ச்சி (2) முயற்ச்சி (3) முயற்சி

(ii) (1) நாகரிகம் (2) நாகரீகம் (3) நாகறிகம்

(iii) (1) வறலாறு (2) வரலாரு (3) வரலாறு

5. பின்வரும் வாக்கியத்தை நிகழ்கால ஒருமை வாக்கியமாக மாற்றி எழுதுக.

ஆட்காட்டிக் குருவிகள் வானில் தாழ்வாகப் பறந்து சென்றன.

.....

6. பின்வரும் வாக்கியங்கள் ஒவ்வொன்றிலும் தடித்த எழுத்தில் தரப்பட்ட சொல்லுக்குப் பொருத்தமான ஒத்தகருத்துச் சொல் ஒன்றை எதிரே உள்ள புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

(i) நாம் **கோபம்** ஏற்படும் போது பொறுமை காக்க வேண்டும். :.....

(ii) அந்த ஓவியத்தின் **அழகு** எல்லோரையும் கவர்ந்தது. :.....

7. பின்வரும் தொடர்கள் குறிக்கும் தனிச் சொல்லை எழுதுக

(i) நம்ப முடியாத கதை :.....

(ii) தேர்தல் ஒன்றில் போட்டியிடுபவர் :.....

8. பின்வரும் கருத்துக்களுக்குப் பொருத்தமான பழமொழிகளை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

(i) ஒருவரின் சிறுவயதுப் பழக்கத்தை வைத்து அவரைப்பற்றி மதிப்பிடலாம்

.....

(ii) வெளித் தோற்றத்தைக் கண்டு ஒன்றைச் சிறந்ததென எண்ணி ஏமாந்துவிடக் கூடாது

.....

(ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா? / மின்னுவதெல்லாம் பொன் அல்ல / கந்தையானாலும் கசக்கிக் கட்டு / விளையும் பயிரை முளையில் தெரியும் / காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு)

9. பொருத்தமான நிறுத்தக் குறிகளை இடுக

கல்விக்கு அழகு கசடற மொழிதல் என்றனர் எம்முன்னோர்கள்

10. கீழே தரப்பட்டுள்ள சொற்களைச் சரியாக ஒழுங்குபடுத்தி, கருத்துள்ள வாக்கியங்களாக்கி எழுதுக.

(i) me / of / Please / chalk / a / piece / give

:.....

(ii) your / down / Put / arms :.....

11. ஒவ்வொரு ஆங்கிலச் சொல்லுக்கும் உரிய தமிழ்ச் சொல்லை எழுதுக

(i) dirty:..... (ii) playground:.....

www.ikedu.lk

12. பின்வரும் ஒவ்வொரு படத்திற்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை தரப்பட்டுள்ள கட்டத்தினுள் ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.

(i) 

b				

(ii) 


m	o		n	t	a		

13. 'கொள பා(ட්)ட (කොළ පාට)' என்ற சிங்களச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொற்களை எழுதுக.

.....

14. பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் சொல்லப்படும் விதத்தைத் தமிழில் எழுதுக.

ஆசிரியர் எங்கே ? : .....


15. 

இந்த எண் சட்டத்தில் கோல் B இல் உள்ள மணிகளினால் வகை குறிக்கப்படும் பெறுமானம் யாது?

: .....

16. சிறிய எண்ணைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

21406 , 20060, 23515, 20676, 32006

17. 

உருவில் நிழற்றப்பட்டுள்ள பகுதி எத்தனை நான்கின் பங்கு ஆகும்?

: .....

18. பின்வரும் எண்கோலத்தில் அடுத்து வரவேண்டிய இரண்டு எண்களையும் எழுதுக.

18, 25, 32, 39, 46, ..., ...,

19. ஆறு தொடக்கம் பதினைந்து வரையுள்ள உரோமன் எண்கள் எழுதப்பட்டுள்ள வரிசையின் வெற்றிடங்களை நிரப்புக.

vi , vii , viii, ..., x , xi, ..., xiii, ..., xv

20. 26040 எனும் எண்ணை எழுத்தில் எழுதுக.

.....

21. 372 மாம்பழங்களை ஒன்றில் 6 மாம்பழங்கள் வீதம் எத்தனை பைகளில் இடலாம்?

: .....

22. ஒரு சுற்றுலாவிற்காக 63 மாணவர்களுக்கு ஒரு பேருந்து வீதம் 5 பேருந்துகள் ஈடுபடுத்தப்பட்டன. சுற்றுலாவில் பங்குபற்றிய மாணவர்களின் மொத்த எண்ணிக்கை யாது?

: .....


www.lkedu.lk

23. A, B, C ஆகிய மூன்று பாடசாலைகளில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கைகள் கீழே தரப்பட்டுள்ளன.

A	B	C
439	726	145

பாடசாலை B இல் உள்ள மாணவர்களின் எண்ணிக்கையானது A, C ஆகிய பாடசாலைகளில் உள்ள மாணவர்களின் மொத்த எண்ணிக்கையை விட எவ்வளவு கூடுதலானது?

: .....

24. 

இந்தத் திண்மப் பொருளுக்கு எத்தனை முகங்கள் உள்ளன?

: .....

25. ஒரு கட்டடத்தில் தீந்தையைப் பூசுவதற்கு $6l\ 740ml$ வெள்ளை நிறத் தீந்தையும் $12l\ 450\ ml$ பச்சை நிறத் தீந்தையும் கொண்டு வரப்பட்டன. வெள்ளை நிறத் தீந்தையின் அளவிலும் பார்க்க பச்சை நிறத் தீந்தையின் அளவு எவ்வளவினால் கூடியது?

: .....*l*.....*ml*

26. கம்பி வேலி ஒன்றை அமைப்பதற்குக் கொண்டுவரப்பட்ட இரண்டு கம்பிச் சுருள்கள் முறையே 34m 80cm, 45m 60 cm நீளமுள்ளன. இரண்டு கம்பிச் சுருள்களின்தும் மொத்த நீளம் யாது?

: .....*m*.....*cm*


27. அப்பா, தோட்டத்திற்குப் பசளையிடும் வேலையை மு.ப. 6.45 இற்குத் தொடங்கி மு.ப. 9.30 இற்கு முடித்தார். அப்பா பசளையிடுவதற்குச் செலவிட்ட நேரம் யாது?

: ..... மணித்தியாலம் ..... நிமிடம்

28. ஒன்று 165 ரூபாய் வீதம் இரண்டு பப்பாசிப் பழங்களையும் ஒன்று 12 ரூபாய் வீதம் ஐந்து கொய்யாப் பழங்களையும் வாங்கிய பின்னர் 500 ரூபாய்த் தாளினைக் கொடுக்கும் போது கிடைக்கும் மீதி யாது?

ரூபாய் .....

29. காலையில் தோட்டத்திற்கு வந்த பறவைகள் பற்றிய தகவல்கள் பின்வரும் வரைபில் காட்டப்பட்டுள்ளன.



(i) காலையில் தோட்டத்திற்கு மிகக் குறைவாக வந்த பறவை வகை எது?

: .....

(ii) சமனான எண்ணிக்கையில் காலையில் தோட்டத்திற்கு வந்த இருவகைப் பறவைகளும் எவை?

: ....., ...

www.ikeduk

● 30 தொடக்கம் 59 வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையைத் தரப்பட்டுள்ள விடைகளில் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

30. சூரிய நமஸ்கார சந்தர்ப்பங்களில் ஒரே வகை மெய்ந்நிலையைக் **கொண்டிராத** இரண்டு சந்தர்ப்பங்கள் எவை?

(1) 3 உம் 10 உம் (2) 5 உம் 9 உம் (3) 2 உம் 11 உம்

31. உடல், உள சுகத்திற்காகச் செய்யப்படும் மனதை ஒருநிலைப்படுத்தும் செயற்பாடுகளில் மனவுறுதி, மலர்வு என்பன முறையே,

(1) மூன்றாம் ஐந்தாம் படிமுறைகளாகும்.
(2) மூன்றாம் நான்காம் படிமுறைகளாகும்.
(3) நான்காம் ஐந்தாம் படிமுறைகளாகும்.

32. தினமும் போதிய அளவு நீர் அருந்தாத ஒருவருக்கு ஏற்படக் கூடியவை

(1) உதடுகள் உலர்தல், சிறுநீர்கழித்தலில் அசௌகரியம்.
(2) உடற்கொழுப்பு குறைவடைதல், தோல் பூரிப்பாதல்.
(3) சரும நோய்களுக்கு ஆளாவது குறைவடைதல், உடற்கொழுப்பு குறைவடைதல்.

33. தாவீது (டேவிட்) எனும் இயற்பெயரைக் கொண்டவரும் இலங்கை சுதந்திரப் போராட்டத்தின் பிரதான தளபதியாகவும் விளங்கியவர்

(1) மொனரவில கெப்பெட்டிப்பொல திசாவ
(2) வண.எஸ். மஹிந்த
(3) கொங்காலேகொட பண்டா

34. அசுத்தமான உணவு, நீர் ஆகியவற்றை உட்கொள்வதால் ஏற்படத்தக்க நோய் **அல்லாதது**

(1) வாந்திபேதி (2) சீதபேதி (3) சின்னமுத்து

35. ஒருவர் தனது வதிவிடச் சான்றிதழைப் பெறுவதற்குச் சந்திக்க வேண்டியவர்

(1) சமுர்த்தி அலுவலர் (2) அதிபர் (3) கிராம அதிகாரி

36. குறித்த வேளையில் உணவு உண்ணாதிருக்கும் ஒருவருக்கு ஏற்படக்கூடிய நோய்

(1) நீரிழிவு (2) இரைப்பையழற்சி (3) உயர்குருதியமுக்கம்

37. இரக்கம், காருண்யம், திருப்தி, பற்றின்மை ஆகிய நான்கு பண்புகளையும் குறிக்கும் வகையில் தேசியக் கொடியில் இடம்பெற்றிருப்பன எவை?

(1) நான்கு நிறங்கள்
(2) கொடியைச் சுற்றிவர நான்கு பக்கமும் உள்ள மஞ்சள் நிறப்பட்டி
(3) கொடியின் உள்ளே உள்ள நான்கு அரச இலைகள்

38. இலங்கையின் தேசிய மரம் எது?

(1) நாகமரம் (2) அரசமரம் (3) கொன்றைமரம்

39. ஒரே வடிவத்தில் இலைகள் காணப்படும் தாவரங்கள்

(1) வேம்பு, அகத்தி (2) பலா, ஆமணக்கு (3) புளி, அகத்தி


40. தாவர இலைகளை வளைத்துச் சுருட்டிக் கூடு அமைப்பது

(1) செவ்வெறும்பு (2) கரப்பான் (3) சிலந்தி

www.ikedu.lk

41. துத்திரி வித்துப் பரம்பல் அடைவது

(1) காற்றின் மூலம் (2) வெடிப்பதன் மூலம் (3) விலங்குகள் மூலம்

42. 

இந்தத் தையல் முறைக்கு வழங்கப்படும் பெயர் யாது?

(1) நரம்புத் தையல்
(2) கம்பளித் தையல்
(3) சங்கிலித் தையல்

43. பின்வருவனவற்றில் சமையலறையில் பயன்படுத்தப்படும் உபகரணம் எது?

(1) துருவலகு (2) அரிவாள் (3) உளி

44. 

இந்த வீதிக்குறியீட்டின் மூலம் கூறப்படும் தகவல் யாது?

(1) ஒடுங்கிய பாலம் முன்னால்
(2) சாய்வான பாதை முன்னால்
(3) வீதி, முன்னால் ஒடுங்குகிறது

45. "புறப்படுவோமே மச்சான் புறப்படுவோமே - கட்டுவலை எடுத்துக்கிட்டுப் புறப்படுவோமே" எனும் பாடல்

(1) அரிவிவெட்டுப் பாடல் (2) கும்மிப் பாடல் (3) மீனவர் பாடல்

46. தாங்கும் வேர்களைக் கொண்டுள்ள தாவரத்திற்கு உதாரணமாக அமைவது

(1) தாழை (2) ஆல் (3) வாழை

47. தும்பி, நாய் ஆகியன முறையே

(1) ஓர் ஊன் உண்ணியும் ஓர் இலையுண்ணியும் ஆகும்.
(2) ஓர் ஊன் உண்ணியும் ஓர் அனைத்துமுண்ணியும் ஆகும்.
(3) ஓர் அனைத்துமுண்ணியும் ஓர் இலையுண்ணியும் ஆகும்.

48. இரையைக் கண்டறிவதற்கான மீசையைக் கொண்டுள்ள பிராணி

(1) பல்லி (2) சிலந்தி (3) பூனை

49. வீட்டில் நாம் தனிப்பட்ட வகையில் பயன்படுத்தும் ஒரு பொருள்

(1) தலையணை (2) குடை (3) தொலைக்காட்சி

50. பாத்திரமொன்றில் உணவு அல்லது பானத்தை இடுவதற்கு முன் செய்ய வேண்டியது யாது?

(1) பாத்திரத்தை நன்றாகக் கழுவ வேண்டும்
(2) பாத்திரத்தை நன்றாகத் துடைக்க வேண்டும்
(3) பாத்திரத்தை நன்றாகக் கழுவி ஈரலிப்பு நீங்கக் கூடியவாறு நன்கு துடைக்க வேண்டும்.

51. கொல்லர் பயன்படுத்துவது

(1) வாள் (2) துறப்பணம் (3) உலைத்துருத்தி

52. இலங்கையில் இயற்கைத் துறைமுகம் காணப்படுவது

(1) கொழும்பில் (2) திருகோணமலையில் (3) அம்பாந்தோட்டையில்

53. அனல் மின் உற்பத்திக்குப் பயன்படுத்தப்படுவது

(1) சூரிய ஒளி (2) நீர் (3) நிலக்கரி

www.ikedu.lk

54. புகையூட்டுவதன் மூலம் நீண்ட நாட்களுக்குப் பேணப்படும் ஓர் உணவு

(1) கருவாடு (2) ஈரப்பலாக்காய் (3) மாங்காய்

55. உடலுக்குச் சக்தியைத் தரும் ஓர் உணவையும், உடல் வளர்ச்சிக்கு உதவும் ஓர் உணவையும் குறிக்கும் விடை

(1) பலாக்காய், பருப்பு (2) தோடை, பப்பாசி (3) பசளி, மீன்

56. சதுப்பு நிலங்களில் கட்டுமான வேலைகளைச் செய்வதால் ஏற்படத்தக்க அனர்த்தம்

(1) நிலநடுக்கம் (2) வெள்ளப்பெருக்கு (3) சுனாமி

57. மென்பானப் போத்தல்களின் சுட்டுத்தாளில், பானத்தில் உள்ளடங்கும் சீனியின் அளவு **அதிகமானது** என்பதைக் காட்ட இடப்பட்டிருக்கும் வட்ட வடிவக் குறியீட்டின் நிறம் யாது?

(1) பச்சை (2) சிவப்பு (3) மஞ்சள்

58. தீப்பற்றியதன் காரணமாக உடலின் ஒரு பகுதி எரிந்த நபர் ஒருவருக்கு முதலுதவி பெற்றுக் கொடுக்கையில் முதலில் செய்ய வேண்டியது

(1) சுத்தமான குளிர்நீரால் எரிந்த பகுதியைக் குளிர்மையாக்கல்
(2) எரிந்த பகுதியின் மீது எண்ணெய் வகை ஒன்றைப் பூசுதல்
(3) எரிந்த பகுதியில் ஒட்டிக் கொண்டிருக்கும் ஆடைகளை அகற்றுதல்

59. வீதித் தேசப்படத்தில் அதிவேகப் பாதையைக் காட்டுவதற்குப் பயன்படுத்தப்படும் குறியீடு



(1) (2) (3)

60. பாடசாலைக்குக் கொண்டுவந்த பணத்தை, காலையில் மைதானத்தில் தொலைத்துவிட்டு இடைவேளையின் போது சிற்றுண்டிச்சாலைக்குச் செல்லாமல் கவலையுடனும் பசியுடனும் வகுப்பறைக்கு வெளியே நிற்கும் உங்கள் நண்பன் குமாரை நீங்கள் காண்கிறீர்கள். இதனை அடுத்து நீங்கள் செய்யப்போவது யாது என்பதைக் தலைப்பாகக் கொண்டு மூன்று வாக்கியங்கள் எழுதுக
(ஒவ்வொரு வாக்கியமும் **ஐந்து** சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும். எழுவாய் பயனிலைத் தொடர்பு, எழுத்துக் கூட்டல் என்பவையும் சரியாக இருத்தல் வேண்டும்)

1. .....
.....
.....

2 .....
.....
.....

3 .....
.....
.....

***

www.ikeou.lk

இயலுமிலிகை ஏடிடிகி]
முழுப்பதிப்புரிமையுடையது)
All rights Reserved]

ஆசிரியர்: எம்.ஏ. அபுதாஹிர்

Q First கல்வி நிறுவகம்

முன்னோடி வினாப்பத்திரம் 2

5

மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சைக்கான முன்னோடி வினாப்பத்திரம் 2024

வினாத்தாள் I

ஒரு மணித்தியாலம்

சுட்டெண்: .....

பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள் :

* உமது சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.
* மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக.
* இவ்வினாத்தாளில் **40** வினாக்கள் உள்ளன. எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை **இவ்வினாத்தாளிலேயே எழுதுக.**
* ஒவ்வொரு வினாவிற்கும் **மூன்று** விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றிடையே ஒவ்வொரு வினாவிற்கும் உரிய **சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**
* செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

பக்க இலக்கம்	பெற்ற புள்ளிகள்
2	
3	
4	
5	
6	
7	
8	
மொத்தம் இலக்கத்தில்	
மொத்தம் எழுத்தில்	

	முதலெழுத்தொப்பமும் குறியீட்டு எண்ணும்
முதலாவது பரீட்சகர் புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப் பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன்.	V/I/T
இரண்டாவது பரீட்சகர் முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	V/I/T
மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பிட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	V/I/T/EMF
பிரதான பரீட்சகர் மேற்பார்வை செய்தேன் இறுதிப்புள்ளிகள் சரியாகும்	V/I/T/CH

www.ikedu.lk

[பக். 2 ஐப் பார்க்க

LEARN EASY

- KNOWLEDGE IS POWER -

www.learneasy.lk || www.lkedu.lk

76667-4945

zoom

Online classes

பாலர் வகுப்புக்கள்

4+ & 5+

மாணவர்களுக்கானது



திங்கள்
செவ்வாய்
வியாழன்
வெள்ளி

5.00 pm

கட்டணம்
1500/=

மேலதிக தகவலுக்கு

76667-4945

1. பின்வரும் உருவை அவதானிக்க. அதனைப் பற்றிய சரியான கூற்றைத் தெரிவு செய்க.




(1) ஐந்து பிள்ளைகளில் நான்கு பிள்ளைகள் பட்டம் விடுகின்றன.

(2) பூனைக்கும் வாகனத்துக்குமிடையே ஒரு பந்து உள்ளது.

(3) இரண்டு பிள்ளைகள் தொப்பியும் கண்ணாடியும் அணிந்துள்ளன.

2. நான்கு பிராணிகள் வீதம் இடம்பெறும் A,B,C,D,E எனும் ஐந்து உருக்கள் கீழே தரப்பட்டுள்ளன.



A B C D E

, ஆகியன இடம்பெறும், ஆனால்  இடம்பெறாத உருக்கள் எவை?


(1) B உம் E உம் (2) A உம் D உம் (3) B உம் C உம்

3. பின்வரும் மூன்று உருக்களில் ஒன்றில் வேறுபாடு உள்ளது. அதனைத் தெரிவு செய்க.




(1) (2) (3)

4. பின்வருவம் எந்த மூன்று வடிவங்களை இணைப்பதால் செவ்வகம் ஒன்றைப் பெற முடியும்?



(1) C,D,E (2) D,E,B (3) A,B,C

5. பின்வரும் உருவில் உள்ள வெற்றிடத்துக்குப் பொருத்தமான உருப் பகுதி எது?




(1) (2) (3)

www.ikeot.lk

சுட்டெண்: .....


6. உரு A இல் காட்டப்பட்டுள்ள வடிவத்தைக் கொண்ட ஒரு தாள், முறிந்த கோடு வழியே மடிக்கப்பட்டு உரு B இல் காட்டப்பட்டுள்ள வடிவத்தைப் பெற்று, அதில் காட்டப்பட்டுள்ள முறிந்த கோடு வழியே வெட்டித் துண்டுகளாக்கப்பட்டது. கிடைத்த முக்கோணித் துண்டுகளின் எண்ணிக்கை யாது?




உரு A உரு B

(1) 2
(2) 4
(3) 6

7. கீழே தரப்பட்டுள்ள உருக்களை அவதானியுங்கள்.



வெற்றிடத்துக்குப் பொருத்தமான உரு எது?




(1) (2) (3)

8. கோலத்திற்கேற்ப அடுத்துவரவேண்டிய உருவைத் தெரிவு செய்க.



.....



(1) (2) (3)

9. இரு பகுதிகளையும் சரியாக இணைத்து முழு உருவை ஆக்க முடியாத பகுதிகளைக் கொண்டுள்ள விடை எது?



(1) (2) (3)

10. இந்த உருவைச் சரியாகப் பூர்த்தி செய்யப் பொருத்தமான உருவின் மறுபகுதி எது?



(1) (2) (3)

[பக். 4 ஐப் பார்க்க

www.lkedu.lk

11. பின்வரும் உரைப்பகுதியின் வெற்றிடங்களுக்குப் பொருத்தமான சொற்கள் இடம்பெறும் பகுதியைத் தெரிவு செய்க.

நாட்டார் பாடல்கள் மக்கள் வாழ்வைப் பிரதிபலிப்பனவாகவும் அவர்களது வாழ்வோடு கலந்தவையாகவும் விளங்குகின்றன. இவை ..... வேலைகளைச் செய்யும் போது, வேலையில் களைப்புத் தன்மை ..... இருப்பதற்காகப் பாடப்படுகின்றன. மேலும் இவை கவலைகளை மறக்கச் செய்யவும் மன ..... வெளிப்படுத்தவும் வலிகளைக் கூறவும் சிறந்த கருவியாக விளங்குகின்றன.

(1) சுகமான / நீங்காமல் / கோபங்களை


(2) இலகுவான / மாறாமல் / பண்புகளை

(3) கடினமான / தெரியாமல் / உணர்வுகளை


12. போதுமான தூக்கம் இல்லாதவர்கள் பல்வேறு நோய்களால் பாதிக்கப்படுவதற்குச் சாத்தியம் அதிகம் உண்டு. காலையில் நினைத்த நேரத்திற்கு எழுந்து கொள்ள முடியாமல் தொடர்ச்சியாக ஒருவர் சிரமப்பட்டால் அவருக்குக் கூடுதல் தூக்கம் தேவைப்படுகிறது என்று அர்த்தம். தூங்குவதற்கான நேரத்தை ஒழுங்குபடுத்துவதும் அன்றாடம் ஒரே நேரத்தில் தூங்கி ஒரே நேரத்தில் எழுந்து கொள்வதும் ஆரோக்கியமானதாகும்.

மேலே தரப்பட்டுள்ள கூற்றுக்களினால் உணர்த்தப்படுவது

(1) தூக்கமின்மையால் பலர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதாகும்
(2) ஆரோக்கியமான வாழ்வுக்கு, போதுமான தூக்கம் அவசியம் என்பதாகும்.
(3) போதுமான தூக்கம் இல்லாதவர்கள் காலையில் எழுவதற்குச் சிரமப்படுவார்கள் என்பதாகும்.

13. 


இந்த உருவில் உள்ளவாறான ஒரு வடிவத்தை, கோடு AB வழியே இரண்டாக மடிக்கும் போது கிடைக்கும் உரு யாது?




(1) (2) (3)

14. மரக்குற்றிகளால் ஆக்கப்பட்டுள்ள பின்வரும் அமைப்பை மேலிருந்து நேராகப் பார்க்கும் போது அது தோற்றும் விதத்தைத் தெரிவு செய்க.





(1) (2) (3)

15. 

உருவில் ? குறியினால் காட்டப்படும் முக்கோணியினுள் இருக்க வேண்டிய விடையைத் தெரிவு செய்க.



(1) (2) (3)

16. கீழுள்ள எழுத்துக்களின் வரிசை ஓர் ஒழுங்கான கோலமாக அமைய ஒவ்வொரு வெற்றிடத்திலும் ஒவ்வோர் எழுத்து இடப்பட வேண்டும். ஒவ்வொரு வெற்றிடத்திலும் வர வேண்டிய எழுத்துக்கள் முறையே எவை?


n__ mn __ mm __ nm __n

(1) nmmn (2) mnnm (3) nnmm

17. 6 குரங்குகள் 6 வாழைப்பழங்களை 6 நிமிடங்களில் உண்ணும். 3 குரங்குகள் 3 வாழைப்பழங்களை உண்பதற்கு எத்தனை நிமிடங்கள் எடுக்கும்?


(1) 3 (2) 4 (3) 6

18. அடைப்புக்குள் உள்ள உருக்களில் சமனான எண்ணிக்கையில் சமச்சீர் கோடுகள் வரையத்தக்க உருக்கள் இரண்டும் எவை?



(1) D உம் E உம்
(2) B உம் F உம்
(3) E உம் F உம்

19. இவ்வுருவை மடித்து ஒரு பெட்டியைச் செய்யும் போது அது தோற்றும் விதம் யாது?



(1) (2) (3)

20. வானதி, வளர்மதி ஆகிய இருவருக்கும் ஒருநாள் விட்டு ஒருநாள் விடுமுறை கிடைக்கும். இருவருக்கும் ஒரே நாளில் விடுமுறை கிடைப்பதில்லை. இன்று திங்கட்கிழமை வானதிக்கு விடுமுறை கிடைத்துள்ளது. இவற்றிற்கு அமைய, பின்வரும் கூற்றுக்களில் சரியானதைத் தெரிவு செய்க.

(1) வானதிக்கு அடுத்த திங்கட்கிழமையும் விடுமுறை கிடைக்கும்
(2) வளர்மதிக்கு கடந்த வாரம் திங்கட்கிழமையும் வெள்ளிக்கிழமையும் விடுமுறை கிடைத்தது
(3) அடுத்த வியாழக்கிழமையும் ஞாயிற்றுக்கிழமையும் வளர்மதிக்கு விடுமுறை கிடைக்கும்.

21. தரப்பட்டுள்ளவற்றிடையே மூன்றை ஒரு கூட்டமாகவும் இரண்டை வேறொரு கூட்டமாகவும் ஆக்கலாம். அவற்றில் இரண்டு இருக்கும் கூட்டத்திற்கு உரியவை யாவை?

வடமத்தி	கிழக்கு	சப்ரகமுவ	வடகிழக்கு	ஊவா

(1) வடமத்தி, சப்ரகமுவ (2) வடகிழக்கு, ஊவா (3) கிழக்கு, வடகிழக்கு

www.lkedu.lk

22. 5 தொடக்கம் 350 வரையான ஐந்தின் மடங்குகள் எழுதப்பட்டுள்ள கடதாசி ஒன்றின் ஆரம்பப் பகுதி கீழே தரப்பட்டுள்ளது.

5	10	15	20	25	30	35	40	45	50
55	60	65	70	75	80	85	90	95	100
105	110	115	120	125	130	135	140	145	150

பின்வருவனவற்றில் எது அக்கடதாசியில் இருந்து பிரித்தெடுக்கப்பட்ட பகுதியாகும்?

	195	200
230	235	

(1)

	290	295
335	340	

(2)

210	215	
	255	260

(3)

23. 1 மீற்றர் உயரமும் 5 மீற்றர் நீளமும் உள்ள சுவருக்குப் பூச 1 லீற்றர் பூச்சு தேவைப்படுகின்றது. 3 மீற்றர் உயரமும் 10 மீற்றர் நீளமும் உள்ள அத்தகைய ஒரு சுவருக்குப் பூச எத்தனை லீற்றர் பூச்சு தேவைப்படும்?

(1) 3 (2) 5 (3) 6

24. மகேசன் ஒவ்வொரு புதன்கிழமையும் தவறாமல் நூலகத்திற்குச் செல்வான். கடந்த 2020 ஜனவரி 1ஆம் நாள் புதன்கிழமை ஆகும். 2020 இல் மகேசன் நூலகத்திற்குச் சென்ற நாட்களின் எண்ணிக்கை யாது?

(1) 51 (2) 52 (3) 53


25. அண்ணன் தம்பியை விட 6 வருடங்கள் மூத்தவன் ஆவான். தம்பியின் வயதை இரண்டால் வகுத்து மூன்றால் பெருக்கினால் அண்ணனின் வயதைப் பெறலாம். அண்ணனினதும் தம்பியினதும் வயதுகளின் கூட்டுத்தொகை எத்தனை வருடங்களாகும்?


(1) 22 (2) 30 (3) 34

● 26, 27 ஆகிய வினாக்களில் தரப்பட்ட உருக்களில் உள்ள எண் கோலத்திற்கேற்ப வெற்றிடத்தில் இருக்க வேண்டிய எண்ணைத் தெரிவு செய்க.

26.










(1) 24 (2) 18 (3) 15

27.








(1) 30 (2) 50 (3) 100

www.ikedu.lk

28. முகம் பார்க்கும் கண்ணாடிக்கு முன்னால் பிடிக்கும் போது மாற்றமின்றி அதே மாதிரி தெரியக்கூடிய ஆங்கில எழுத்துக்களைக் கொண்டுள்ள விடை எது?

(1) MLT (2) WEX (3) OMX

29. முதலில் தரப்பட்டுள்ள வடிவத்தைப் பெறுவதற்கு நான்காக மடிக்கப்பட்ட கடதாசித் துண்டைச் சரியாக வெட்ட வேண்டிய விதத்தைத் தெரிவு செய்க.





(1)



(2)



(3)

30. பாத்திரம் ஒன்றைப் பூரணமாக நீரினால் நிரப்பி நிறுத்த போது அதன் நிறை 1kg 250g ஆகவும் அதே பாத்திரத்தின் $\frac{1}{4}$ இற்கு மீண்டும் நீரை ஊற்றி நிறுத்த போது அதன் நிறை 500g ஆகவும் இருந்தது. இதன்படி பாத்திரத்தின் நிறை யாது?


(1) 750g (2) 500g (3) 250g

31. 

இந்த உருவில் காணப்படும் முக்கோணிகளின் எண்ணிக்கை யாது?

(1) 6 (2) 8 (3) 10

32. போக்குவரத்து சாதனங்கள், நீர்வழிப் போக்குவரத்து சாதனங்கள், விமானம், கப்பல் ஆகியவற்றுக்கிடையே உள்ள தொடர்பு பின்வரும் உருவில் வகை குறிக்கப்பட்டுள்ளது.




○,○ ஆகியவற்றின் மூலம் வகை குறிக்கப்படுவன முறையே எவை?

(1) நீர்வழிப் போக்குவரத்து சாதனங்கள், கப்பல் ஆகியன
(2) போக்குவரத்து சாதனங்கள், விமானம் ஆகியன
(3) விமானம், கப்பல் ஆகியன.

33. குறித்த ஓர் எண்ணை 7 ஆல் பெருக்கி வரும் விடையும் குறித்த இன்னுமோர் எண்ணிலிருந்து 7 ஐக் கழித்து வரும் விடையும் சமமாகும். அவ்விரு எண்களும் முறையே எவை?


(1) 8 உம் 52 உம் (2) 5 உம் 42 உம் (3) 7 உம் 35 உம்

34. தரப்பட்டுள்ள உருவில் எழுத்து A இனால் காட்டப்படும் பகுதிக்கு உரிய எண்களைக் குறிக்கும் விடை எது?



(1) 12, 36, 48 (2) 24, 30, 44 (3) 21, 44, 60

www.ikeduk.lk

35. 

இந்த உருவில் நிறந்தீட்டப்பட்டுள்ள பகுதி முழு உருவத்தின்

(1) $\frac{1}{4}$ இலும் கூடியதாகும்

(2) $\frac{1}{4}$ இலும் குறைவாகும்

(3) $\frac{1}{4}$ இற்குச் சமமாகும்

36. விளையாட்டுப் பயிற்சி ஒன்றில் ஈடுபட்ட மாணவர் குழுவில் இருந்த அனைவரும் பயிற்சி முடிவின் போது தமக்கிடையே கைகுலுக்கிக் கொண்டு விடைபெற்றனர். அங்கு இடம்பெற்ற கைகுலுக்கல்களின் எண்ணிக்கை 15 எனின், பயிற்சியில் ஈடுபட்ட மாணவர் குழுவில் எத்தனை பேர் இருந்தனர்?

(1) 5 (2) 6 (3) 7

37. தரப்பட்ட பிராணிகளில் A, C ஆகியவற்றில் காணப்படும், ஆனால் B, D ஆகியவற்றில் இல்லாத இயல்பு யாது?



A B C D

(1) நீரிலும் நிலத்திலும் வாழ்தல்
(2) தாவர உணவுகளை உண்ணுதல்
(3) பால் குடித்து வளர்தல்

38. பின்வரும் உருச்சட்டங்கள் ஒரு செயன்முறையின் ஐந்து சந்தர்ப்பங்களைக் காட்டுகின்றன.



A B C D E

அச்சந்தர்ப்பங்களின் அர்த்தமுள்ள ஒழுங்குமுறை யாது?

(1) BEDAC (2) AECDB (3) DCBAE

39. ○ x ○ x ○ = 27 உம் ○ x △ = 12 உம் △ x □ = 20 உம் ஆகும் எனின், ○ x △ x □ சமன்,

(1) 60 ஆகும் (2) 45 ஆகும் (3) 12 ஆகும்.

40. கலாவின் அக்கா கோமதி ஆவாள். அவளுக்கு முரளி எனும் ஓர் அண்ணனும் சதீஷ் எனும் ஒரு தம்பியும் இரண்டு தங்கையர்களும் உள்ளனர். இதன்படி, பின்வரும் கூற்றுக்களில் எது சரியானது?

(1) முரளிக்கு 2 தங்கையர்களும் 1 தம்பியும் உள்ளனர்.
(2) கலாவுக்கு 2 சகோதரர்களும் 2 சகோதரிகளும் உள்ளனர்.
(3) சதீஷிற்கு 1 அண்ணனும் 3 தங்கையர்களும் உள்ளனர்.

***

www.ikeau.lk

[முழுப்பதிப்புரிமையுடையது)
All rights Reserved]

ஆசிரியர்: எம்.ஏ. அபுதாஹிர்

Q First கல்வி நிறுவகம்

முன்னோடி வினாப்பத்திரம் 2 5

மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சைக்கான
முன்னோடி வினாப்பத்திரம் 2024

வினாத்தாள் II

1 மணித்தியாலம் 15 நிமிடம்

சுட்டெண்: .....

பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்

* உமது சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.
* **முன்றாம் பக்கத்தில்** குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக.
* இவ்வினாத்தாளில் **60** வினாக்கள் உள்ளன. சில வினாக்களில் உபபகுதிகளும் உள்ளன.
* எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை **இவ்வினாத்தாளிலேயே** எழுதுக.
* விடைகள் எழுதப்பட வேண்டிய வினாக்களின் விடைகளைப் **புள்ளிக் கோட்டின் மீது** எழுதுக.
* விடையின் கீழே கோடிடுமாறு கேட்கப்பட்டிருக்கும்போது சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழே கோடிடுக.
* செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

பக்க இலக்கம்	பெற்ற புள்ளிகள்
2	
3	
4	
5	
6	
7	
8	
மொத்தம் இலக்கத்தில்	
மொத்தம் எழுத்தில்	

	முதலெழுத்தொப்பமும் குறியீட்டு எண்ணும்
முதலாவது பரீட்சகர் புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப் பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன்.	V/I/T
இரண்டாவது பரீட்சகர் முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	V/I/T
மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பிட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	V/I/T/EMF
பிரதான பரீட்சகர் மேற்பார்வை செய்தேன் இறுதிப்புள்ளிகள் சரியாகும்	V/I/T/CH

www.ikeou.lk

[பக். 2 ஐப் பார்க்க

1. பின்வரும் பந்தியை வாசியுங்கள்

இன்று புதன்கிழமை. இன்றைய நாளில் வகுப்பறையைச் சுத்தம் செய்து ஒழுங்குபடுத்தும் பொறுப்பு 'மல்லிகை' என்ற குழுவுக்கு உரியதாகும். மல்லிகைக் குழுவின் இந்த மாதத்துக்கான தலைவராக வகுப்பாசிரியர் கோபியை நியமித்திருந்தார். தனது கடமைகளைச் சிறப்பாகச் செய்ய வேண்டும் என்பது கோபியின் நோக்கமாகும். அதற்காக அவன் இன்று காலையில் நேரத்தோடு பாடசாலைக்கு வந்திருந்தான். அவனைத் தொடர்ந்து குழுவில் இடம்பெறும் ஏனைய நான்கு உறுப்பினர்களும் வந்திருந்தனர். தாமதம் இன்றி எல்லோரும் வேலைகளில் ஈடுபட்டனர். இடையே, வகுப்பறைகள் உரிய நேரத்திற்கு சுத்தம் செய்யப்படுவதைப் பரிசீலிப்பதற்காக மாணவத் தலைவர்களில் ஒருவர் வகுப்பறைக்கு வந்திருந்தார். அவர் வகுப்பறையைப் பார்வையிட்ட பின் "மல்லிகைக் குழு சிறப்பாகச் செயற்படுகிறது" என்று கூறி, குழுவில் உள்ள எல்லோரையும் பாராட்டி விட்டுச் சென்றார்.

● பந்தியைத் துணையாகக் கொண்டு விடை எழுதுக.

(i) வாரத்தின் எத்தினத்தில் வகுப்பறையைச் சுத்தம் செய்து ஒழுங்குபடுத்தும் பொறுப்பு 'மல்லிகை' என்ற குழுவுக்கு உரியது?

.....

(ii) கோபியை 'மல்லிகை' என்ற குழுவின் இந்த மாதத்துக்கான தலைவராக நியமித்தவர் யார்?

.....

(iii) கோபி இன்று காலையில் நேரத்துடன் பாடசாலைக்கு வந்திருந்ததன் நோக்கம் யாது?

.....

(iv) 'விரைவு' என்பதன் எதிர்க்கருத்துச்சொல் பந்தியில் இடம்பெற்றுள்ளது. அச்சொல்லை எழுதுக

.....

(v) மாணவத் தலைவர் வகுப்பறைக்கு வந்தது எதற்காக?

.....

.....

(vi) வகுப்பறையைப் பார்வையிட்ட பின் மாணவத் தலைவர் கூறியது யாது?

.....

2. உயர்திணை இறந்தகால பன்மை வினைச் சொல்லைத் தெரிவு செய்து அதன் கீழே கோடிடுக.

(1) நடந்தன (2) சிரித்தார்கள் (3) ஓடுகின்றனர்

3. தரப்பட்ட சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியமாக எழுதுக.

பயன்படுகிறது / மேற்பட்ட / மருந்தாகப் / தேன் / நோய்களுக்கு / நூற்றுக்கு

.....

.....

4. பொருத்தமான நிறுத்தக் குறிகளை இடுக

எல்லோரும் காரியாலயத்திற்கு வாருங்கள் என்று அதிபர் அழைத்தார்

5. பின்வரும் வாக்கியத்தை, பெண்பால் ஒருமை நிகழ்கால வாக்கியமாக மாற்றி எழுதுக.

அரசன் நகரைச் சுற்றிப் பார்க்கப் புறப்பட்டான்

.....

www.ikedu.lk

கட்டெண்:.....

6. ஒவ்வொரு வாக்கியத்திலும் உள்ள சரியான எழுத்துக் கூட்டல் உள்ள சொல்லை அடைப்புக் குறியினுள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

(i) வீதியின் இரு (மறுங்கிலும் / மருங்கிலும்) நிழல் மரங்கள் நடப்பட்டிருந்தன.

(ii) இது இருபத்தோராம் (நூற்றாண்டின் / நூற்றாண்டின்) மூன்றாம் தசாப்தமாகும்.

7. பின்வரும் ஒவ்வொரு மரபுத் தொடரும் வெளிப்படுத்தும் கருத்தை, கட்டத்திற்குள் இருந்து தெரிவு செய்து புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

(i) வாயூறுதல் :.....

(ii) தலை கவிழ்தல் :.....

பேச்சை விரித்தல் / வெட்கமடைதல் / ஆசைப்படுதல் / சொன்ன சொல் தவறுதல்

8. பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் எழுவாய் பயனிலைத் தொடர்பு சரியாயின் ✓ எனவும் பிழையாயின் × எனவும் எதிரே உள்ள அடைப்புக் குறிக்குள் அடையாளம் இடுக.

(i) குயில்கள் கூவும் சத்தம் எங்கும் கேட்டது. (.....)

(ii) குருவிகள் கூட்டமாகப் பறந்தது. (.....)

(iii) நட்சத்திரங்கள் நிறைந்த இரவு வானம் அழகாகக் காட்சி அளித்தது. (.....)

(iv) காற்று வீசியதும் மரங்கள் அசைந்தது. (.....)

9. பின்வரும் இணைமொழிகளில் மிகப் பொருத்தமானதைத் தெரிவு செய்து வாக்கியங்களைப் பூரணப்படுத்துக.

மலையும் மடுவும், கரடு முரடு, உயர்வு தாழ்வு, அருமை பெருமை, மூலை முடுக்கு

(i) பயிற்சிக் கொப்பியைத் தொலைத்த மாதவி, அதனை வீட்டின் ..... எங்கும் தேடினாள்.

(ii) நாம் ஒருபோதும் ..... பார்க்கக் கூடாது.


10. ஒவ்வொரு படத்திற்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை தரப்பட்டுள்ள கட்டத்தினுள் **ஆங்கில** எழுத்துக்களில் எழுதுக.

(i)



M			h	r	o		m	s

(ii)



L		d		e	

11. கீழே தரப்பட்டுள்ள சொற்களைச் சரியாக ஒழுங்குபடுத்தி, கருத்துள்ள வாக்கியங்களாக்கி எழுதுக.

(i) canteen / are / the / They / in :.....

(ii) I / May / out? / go :.....

www.ikeduLK

12. ஒவ்வோர் ஆங்கிலச் சொல்லுக்கும் உரிய தமிழ்ச் சொல்லை எழுதுக

(i) Newspaper :..... (ii) Classroom:.....

13. 'அடிகோதுவ (අඩිකෝදුව) ' என்ற சிங்களச் சொல்லுக்குரிய **தமிழ்ச்** சொல்லை எழுதுக.

.....

14. பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் சொல்லப்படும் விதத்தைத் **தமிழில்** எழுதுக.

வாய்ப் கழுவுங்கள் : .....

15. 21540 எனும் எண்ணுக்கு முன்னால் வரும் எண்ணை எழுத்தில் எழுதுக.

:.....

16.

306	110
268	248

பெட்டியினுள்ளே உள்ள எண்களில் இரண்டு எண்களைக் கூட்டினால் 416 கிடைக்கும். அவ்விரண்டு எண்களையும் தெரிவு செய்து எழுதுக.

: ..... , ...

17. பின்வரும் எண்களை ஏறுவரிசையில் எழுதுக.

6098 , 6089, 8069, 8096, : .....

18. 16427 எனும் எண்ணில்

(i) இலக்கம் 4 இனால் வகைகுறிக்கப்படும் பெறுமானம் யாது? :.....

(ii) இலக்கம் 6 அமைந்துள்ள இடம் எது? :.....

19. பின்வரும் வினாக்களுக்குப் பொருத்தமான விடையை, சதுரமுகி, உருளை, நான்முகி, கனவுரு என்னும் திண்மங்களில் இருந்து தெரிந்தெடுத்து எழுதுக.

(i) முக்கோணி முகங்கள் மாத்திரம் உள்ள திண்மம் யாது? :.....


(ii) 8 உச்சிகளும் 12 விளிம்புகளும் உள்ள திண்மங்கள் யாவை?

: ..... , ...

20. பின்வரும் எண்கோலத்தில் அடுத்துவரவேண்டிய இரண்டு எண்களையும் எழுதுக.

131 , 138, 145 : ..... , ...

21. இந்த உருவின் $\frac{3}{4}$ ஐ (பென்சிலால் அல்லது பேனையால்) நிறந்தீட்டுக.



22. 24 மணித்தியாலக் கடிகாரம் 14:25 எனக் காட்டும் நேரத்தை 12 மணித்தியாலக் கடிகார நேரமாக எழுதுக.

: .....

23. ஒரு கொடிச்சரத்தில் 6 கொடிகள் வீதம் 786 கொடிகளைக் கொண்டு எத்தனை சரங்களைத் தயாரிக்கலாம்?

: .....

24. மாதவனின் நிறை 52kg 250g ஆகும். அவனது தம்பியின் நிறை 43kg 500g ஆகும். மாதவன் அவனது தம்பியிலும் பார்க்க எவ்வளவு நிறையால் கூடியவன்?

: .....kg.....g

www.ikedu.lk

25. ஒரு வியாபாரி முதல்நாளில் 10*l* 350 *ml* தேங்காய் எண்ணெய்யையும் இரண்டாம் நாளில் 8*l* 750*ml* தேங்காய் எண்ணெய்யையும் விற்றார். வியாபாரி இரண்டு நாட்களிலும் விற்ற தேங்காய் எண்ணெய்யின் மொத்த அளவு யாது?

: .....*l*.....*ml*

26. 60m நீளமுள்ள ஒரு நாடாவில் இருந்து 32m 60cm நீளமுள்ள ஒரு பகுதி வெட்டி எடுக்கப்பட்டது. நாடாவில் எஞ்சியுள்ள நீளம் யாது?

: .....m.....cm


27. ஒரு மாலையைச் செய்வதற்கு 86 பவளங்கள் தேவை. அத்தகைய 6 மாலைகளைச் செய்வதற்குத் தேவையான பவளங்களின் எண்ணிக்கை யாது?

: .....

28. பின்வரும் சிட்டையைப் பூரணப்படுத்துக

பொருள்	வாங்கிய அளவு	1kg இன் விலை		பெறுமதி	
		ரூபாய்	சதம்	ரூபாய்	சதம்
வாழைப்பழம்	750g	180	00	(i).....	.....
அன்னாசிப்பழம்	1kg 500g	(ii).....	.....	360	00
			மொத்தம்	495	00

29. ஒரு குறித்த மாணவர் குழுவிடம் அவர்கள் விரும்பும் பூக்கள் பற்றிப் பெறப்பட்ட தகவல்கள் பின்வரும் வரைபில் காட்டப்பட்டுள்ளன.



(i) குறைந்தளவு மாணவர்கள் விரும்பும் பூ எது?

: .....

(ii) ரோசாவையும் வெட்சியையும் விரும்பும் மாணவர்களின் மொத்த எண்ணிக்கை மல்லிகையை விரும்பும் மாணவர்களின் எண்ணிக்கையைக் காட்டிலும் எவ்வளவு அதிகமானது?

: .....

● 30 தொடக்கம் 59 வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையைத் தரப்பட்டுள்ள விடைகளில் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

30. வித்துக்களின் மூலமும், கிளைகளின் மூலமும் முளைக்கச் செய்யப்படும் தாவரம்

(1) புடோல் (2) கங்குன் (3) பசளி

31. பயிர்ச் செய்கைக்கு நன்மையளிக்கும் பிராணிகள்

(1) தேனீ, ஆந்தை (2) நத்தை, வண்டு (3) சிற்றுண்ணி, ஓணான்

32. காற்றின் மூலம் பரம்பலடையும் வித்துக்களிலும் பழங்களிலும் காணமுடியாத ஓர் அம்சம் எது?

(1) பாரமற்றதாகக் காணப்படுதல்
(2) பறப்பதற்கு உதவும் சிறகுகள் போன்ற கட்டமைப்பு காணப்படுதல்
(3) ஆடைகளில், அல்லது விலங்குகளில் ஒட்டும் தன்மை காணப்படுதல்

www.ikeduk

33. பின்வருவனவற்றில் ஊனுண்ணி விலங்கு எது?

(1) நரி (2) கோழி (3) முயல்

34. இலங்கைத் தேசிய இலச்சினையில் உள்ள நெற்கதிரினால் குறிக்கப்படுவது யாது?

(1) சௌபாக்கியமும் பொலிவும்
(2) தன்னிறைவும் செழிப்பும்
(3) நித்திய நிலைத்திருப்பு

35. பின்வரும் எந்த விற்றமின், உடலுக்குத் தேவையான அளவு கிடைக்காத போது பசியின்மையும், வயிற்றில் எரிச்சலும் ஏற்படுகின்றன?

(1) விற்றமின் A (2) விற்றமின் B (3) விற்றமின் C

36. இலங்கைக்கே உரித்தான தாவரம்

(1) பலா (2) வேம்பு (3) எண்ணை

37. நுளம்புகள் மூலம் பரவும் நோய்கள்

(1) சின்னமுத்து, சீதபேதி (2) டெங்கு, மலேரியா (3) கழிச்சல், கொப்பளிப்பான்

38. நுகத்தடி பயன்படுத்தப்படுவது

(1) வயல் வேலையில் (2) தச்சு வேலையில் (3) மேசன் வேலையில்

39. கைக்குட்டையின் கரையைத் தைப்பதற்கு மிகப் பொருத்தமான தையல் முறை

(1) கம்பளித் தையல் (2) சங்கிலித் தையல் (3) நரம்புத் தையல்

40. சந்திரனின் தாக்கம் காரணமாக கடல் நீர் மட்டம் குறைவது

(1) சுனாமி எனப்படும் (2) வற்று எனப்படும் (3) பெருக்கு எனப்படும்

41. நெத்தலியில் அதிகம் காணப்படும் போசணை

(1) விற்றமின் C (2) கல்சியம் (3) அயடின்

42. ஈரலழற்சி (மஞ்சள் காய்ச்சல்) நோய் ஏற்படக் காரணமாக அமைவது

(1) விசர்நாய்க் கடிக்கு ஆளாதல்
(2) துப்புரவற்ற நீரைப் பருகுதல்
(3) பழுதடைந்த உணவை உண்ணுதல்

43.  இக்குறியீடு உணர்த்தும் கருத்து யாது?

(1) கவனமாகக் கையாள வேண்டும் என்பதை
(2) மீள் சூழற்சிக்கு உட்படுத்தலாம் என்பதை
(3) வலமாகத் திரும்ப வேண்டும் என்பதை.

44. காந்தங்கள் இரண்டும் ஒன்றையொன்று தள்ளும் சந்தர்ப்பம் பின்வருவனவற்றில் எது?

(1) 

(2) 


(3) 

45. வீதித் தேசப்படமொன்றில் அதிவேகப்பாதை குறிப்பிடப்பட்டுள்ள நிறம்,

(1) மஞ்சள் (2) சிவப்பு (3) ஊதா

www.ikedu.lk

46. உலர் கலத்துடன் இணைக்கும் கம்பிகளினால் மின்குமிழ்கள் இணைக்கப்பட்டுள்ள மூன்று சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன. மின்குமிழ் ஒளிரும் சந்தர்ப்பம் எது?



(1) (2) (3)


47. ஒருவர் மயக்கமடைந்ததும் உடனடியாகச் செய்ய வேண்டியது

(1) குளிர் நீர் பருகக் கொடுத்தல்
(2) நன்கு காற்றோட்டம் கிடைக்கச் செய்தல்
(3) உடலை நன்கு போர்த்துதல்

48. வரலாற்று முக்கியத்துவம் உள்ள இடங்களைப் பார்வையிடச் செல்லும் ஒருவர் செய்யக்கூடாத ஒரு செயல்

(1) குப்பை கூளங்களை சூழலில் இடுவதைத் தவிர்த்தல்
(2) சிலைகளின் மீது அமர்தல்
(3) அறிவித்தற் பலகையில் உள்ளவற்றை அனுசரித்தல்

49. பெரிய நீர்த்தேக்கம் ஒன்றின் அணைக்கட்டு காணப்படவேண்டிய முறை எது?



(1) (2) (3)

50.  உருவில் உள்ளவர்

(1) ஆனந்த சமரக்கோன்
(2) கலாநிதி ஆனந்த குமார சுவாமி
(3) F.R. சேனநாயக்க

51. நாய் கடித்த ஒருவருக்கு உடனடியாகச் செய்ய வேண்டியது

(1) கைம்மருந்து இடல்
(2) கடித்த இடத்தைத் தூய தண்ணீரால் சவர்க்காரம் இட்டுக் கழுவுதல்
(3) கடித்த இடத்தைத் துணிக் கீலங்களினால் கட்டுதல்

52. பானப் போத்தலின் மேலுறையில் பச்சை நிற வட்ட வடிவக் குறியீடு உள்ள பானத்தைத் தெரிவு செய்தல் உடலாரோக்கியத்துக்கு நல்லது எனக் கூறப்படுவதற்கான காரணம், பானத்தில் அடங்கியுள்ள சீனியின் மட்டம்

(1) குறைவாக உள்ளமை (2) அதிகம் உள்ளமை (3) மத்திமமாக உள்ளமை

53. உணவு உண்ணும் போது கடைப்பிடிக்க வேண்டிய நற்பழக்கங்களில் ஒன்று எது?

(1) உதடுகளை அதிகமாகத் திறந்தவாறு உணவை உட்கொள்ளல்
(2) உணவை விழுங்குவதற்கு முன்னர் போதிய அளவு அதனை மெல்லுதல்
(3) மற்றையவர்களின் உணவுப் பாத்திரங்களை எட்டிப் பார்த்தல்

www.moedu.lk

54. நீரில் கரையாத பொருள்

(1) உப்பு (2) கொண்டிசுத்தூள் (3) தேங்காய் எண்ணெய்

55. வீதியில் உள்ள மின்சைகை (ஒளிச்சமிக்ஞை)ப் பலகையில் பச்சை நிறம் ஒளிர்வதால் குறிப்பிடப்படுவது

(1) வாகனத்தை நிறுத்துக என்பது
(2) வாகனத்தைச் செலுத்த ஆயத்தமாகுக என்பது
(3) வாகனத்தைச் செலுத்துக என்பது

56. கடதாசிகளைக் கிழித்து ஒட்டிச் செய்யப்படும் ஆக்கம்

(1) அச்சுப்பதித்தல் (2) ஒரிகாமி (3) கொலாஜ்

57. காந்தத்தினால் கவரப்படும் பொருள்கள் மாத்திரம் அடங்கிய விடை

(1) சவரஅலகு, பித்தளைக்கரண்டி
(2) குண்டூசி, சவரஅலகு
(3) செப்புநாணயம், சவரஅலகு

58. 

காட்டப்பட்டுள்ள உடுக்கோலம்

(1) பெருங்கரடி
(2) தேள்
(3) வேட்டைக்காரன் (ஓராயன்)

59. மரச்செதுக்கல் வேலைகளுக்குப் பிரசித்தி பெற்ற இடம்,

(1) கடலாதெனிய (2) லங்காதிலக (3) எம்பக்கத் தேவாலயம்

60. கூட்டிலே அடைத்து வைத்து சில நாட்களாய் நான் ஒரு பறவையை வளர்த்து வருகிறேன். இதனை அறிந்த எனது ஆசிரியர் அப்பறவையைக் கூட்டிலிருந்து விடுவித்து விடுமாறு என்னை அன்பாகக் கேட்டுக் கொண்டார். பறவையை ஏன் விடுவிக்க வேண்டும் என்பதற்கு ஆசிரியர் என்னிடம் கூறியவை என்பதைத் தலைப்பாகக் கொண்டு மூன்று வாக்கியங்கள் எழுதுக.

(ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும். எழுவாய் பயனிலைத் தொடர்பு, எழுத்துக் கூட்டல் என்பவையும் சரியாக இருத்தல் வேண்டும்)

1. .....
.....
.....

2 .....
.....
.....

3 .....
.....
.....

***

www.ikedu.lk

இலவசமானது]
(முழுப்பதிப்புரிமையுடையது)
All rights Reserved]

ஆசிரியர்: எம்.ஏ. அபுதாஹிர்

Q First கல்வி நிறுவகம்

5 முன்னோடி வினாப்பத்திரம் 3

மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சைக்கான முன்னோடி வினாப்பத்திரம் 2024

வினாத்தாள் I

ஒரு மணித்தியாலம்

சுட்டெண்: .....

பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள் :

* உமது **சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.
* **மூன்றாம் பக்கத்தில்** குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக.
* இவ்வினாத்தாளில் **40** வினாக்கள் உள்ளன. எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை **இவ்வினாத்தாளிலேயே எழுதுக.**
* ஒவ்வொரு வினாவிற்கும் **மூன்று** விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றிடையே ஒவ்வொரு வினாவிற்கும் உரிய **சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**
* செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

பக்க இலக்கம்	பெற்ற புள்ளிகள்
2	
3	
4	
5	
6	
7	
8	
மொத்தம் இலக்கத்தில்	
மொத்தம் எழுத்தில்	

	முதலெழுத்தொப்பமும் குறியீட்டு எண்ணும்
முதலாவது பரீட்சகர் புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப் பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன்.	V/I/T
இரண்டாவது பரீட்சகர் முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	V/I/T
மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பிட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	V/I/T/EMF
பிரதான பரீட்சகர் மேற்பார்வை செய்தேன் இறுதிப்புள்ளிகள் சரியாகும்	V/I/T/CH

[பக். 2 ஐப் பார்க்க

www.lkedu.lk

LEARN EASY

- KNOWLEDGE IS POWER -

www.learneasy.lk || www.lkedu.lk

76667-4945

தரம்
01

தமிழ்	புதன் மற்றும் வியாழன் 6.00 - 7.00 pm
கணிதம்	சனி 9.00 - 10.00 am
சுற்றாடல்	செவ்வாய் மற்றும் வெள்ளி 6.00 - 7.00 pm
ஆங்கிலம்	ஞாயிறு 9.00 - 10.00 am
Spoken English	திங்கள் 6.00 - 7.00 pm

76667-4945

1. பின்வரும் உருவை அவதானிக்க. அதனைப் பற்றிய சரியான கூற்றைத் தெரிவு செய்க.




(1) மூன்று குரங்குகளும் இரண்டு யானைகளும் உள்ளன.


(2) குரங்குக் கூட்டம் மரக்கிளைகளில் தாவித்திரி கின்றன.

(3) இரண்டு மான்கள், நீர் அருந்திக் கொண்டிருக் கின்றன.


2. பின்வரும் உருவில் A எனவும் B எனவும் குறிக்கப்பட்டுள்ள வெற்றிடங்களுக்கு முறையே பொருத்தமான இரு உருப்பகுதிகளும் யாவை?



(1)
(2)
(3)



3. பின்வரும் வரிப்படத்தில் உள்ள வெறும் அடைப்புக்குப் பொருத்தமான உரு யாது?






(1) (2) (3)


● 4,5 ஆகிய வினாக்களில் முதலில் தரப்பட்டுள்ள உருவினை ஒத்த உருவைத் தெரிவு செய்க.

4.



(1) (2) (3)

5.




(1) (2) (3)

www.ikedu.lk

சுட்டெண்:.....

6. கீழே அடைப்பினுள் தரப்பட்ட உருவினை அவதானியுங்கள்



இந்த உருவினைப் பெறுவதற்கு, பின்வரும் உருத்துண்டுகளில் எந்த இரண்டை இணைக்க வேண்டும்?


A


B


C


D


(1) A உம் C உம் (2) B உம் D உம் (3) A உம் D உம்

7. படத்தில் உள்ள நாயை அதன் பின்பக்கத்தில் இருந்து பார்க்கும் போது அது காணப்படும் விதம் எது?




(1)



(2)


(3)

8. பின்வரும் கவிதையில் உள்ள வெற்றிடங்களுக்குப் பொருத்தமான சொற்கள் முறையே இடம்பெறும் விடையைத் தெரிவு செய்க.

பட்சிகளின் பாடல் திசை முழுதும் கேட்க
..... தேனை வண்டுகள் பருக
செக்கச் சிவந்த கீழ்த்திசை .....
செங்கதிர்ச் சூரியன் .....எழுந்தது

(1) மரங்களில், பக்கம், தூங்கி
(2) பூக்களில், ஓரம், விழுந்து
(3) பூக்களில், வானில், உதித்து


9. 

இந்த உருவில் உள்ள முக்கோணிகளின் எண்ணிக்கை யாது?

(1) 6 (2) 7 (3) 8

www.ikedu.lk

10. ஓர் ஆடியில் விம்பமாகக் காட்சி தருகையில் அதே மாதிரித் தெரியும் உருக்கள் உள்ள விடை எது?



(1)



(2)



(3)

11. வெற்றிடத்திற்குப் பொருத்தமான எண்ணைத் தெரிவு செய்க.

2 8 4 3 ⟶ 1612
5 2 6 4 ⟶ 1024
4 4 3 5 ⟶ .....

(1) 2012 (2) 1615 (3) 1215


12. வரிசை ஒன்றில் 86 பிள்ளைகள் நின்றனர். இவர்களில் 14 ஆவதாக நிற்கும் பிள்ளையில் இருந்து 68 ஆவதாக நிற்கும் பிள்ளை வரை வேறாக்கப்பட்டு இன்னொரு தனிவரிசையில் நிறுத்தப்பட்டனர். அவ்வாறு உருவாக்கப்பட்ட வரிசையின் நடுவில் நிற்பவர் அவ்வரிசையின் எத்தனையாவது ஆளாவார்?


(1) 27 (2) 28 (3) 34


13. ஒரே அளவான 10 புத்தகப் பொதிகளை, குறிப்பிட்ட ஓர் இடத்திற்கு ஒரே தடவையில் கொண்டு செல்ல வேண்டி இருந்தது. ஒரு முச்சக்கரவண்டியில் ஒரு தடவையில் 3 பொதிகளை மாத்திரமே கொண்டு செல்லலாம். 10 பொதிகளையும் ஒரே தடவையில் கொண்டு செல்ல குறைந்தபட்சம் எத்தனை முச்சக்கர வண்டிகள் தேவைப்படும்?

(1) 1 (2) 3 (3) 4

14. வட்டங்களுக்குள் எண்கள் இடப்பட்டுள்ள முறைக்கு ஏற்ப, மூன்றாவது வட்டத்தில் உள்ள A,B ஆகிய இடங்களுக்கு முறையே பொருத்தமான எண்கள் இரண்டையும் தெரிவு செய்க








(1) 1, 5
(2) 4, 3
(3) 3, 1

15. A, B, C, D, E, F எனப் பெயரிடப்பட்ட ஆறு அட்டைத்துண்டுகள் மேசை ஒன்றின் மீது வைக்கப்பட்டுள்ள முறை கீழே தரப்பட்டுள்ளது.



இரண்டு அட்டைத் துண்டுகளுக்குக் கீழாகவும் ஒரு அட்டைத்துண்டுக்கு மேலாகவும் வைக்கப்பட்டிருக்கும் அட்டைத்துண்டு எது?

(1) B (2) E (3) F

www.ikeduk

16. இந்தப் பெண் தலையில் வைத்துச் சுமந்து வருகின்ற மரக்கறிகளின் நிறை, பின்வருவனவற்றில் எதுவாக இருக்கலாம்?



(1) 500g (2) 18kg (3) 100kg

17. கோலத்திற்கேற்ப வெற்று அடைப்புக்குப் பொருத்தமான எண் யாது?

720 → 120 → 24 → 6 → 2 → .....


(1) 4 (2) 2 (3) 1

18. கோலத்திற்கேற்ப C இற்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க


A	B	C	D
9 | 12 - 5	7 | 19 - 8	.... |	13 | 14 - 4

11 | 17 - 8 (1) 16 | 15 - 5 (2) 11 | 18 - 5 (3)


19. கீழே தரப்பட்ட கடதாசி P, Q, R என மூன்று பகுதிகளைக் கொண்டுள்ளது.




கடதாசியின் பகுதி P இலும் பகுதி R இலும் இரு எண்கள் எழுதப்பட்டு அவ்வெண்களின் மீது மையைப் பூசி, அவ்விரு பகுதிகளும் புள்ளிக் கோடுகள் வழியே மடிக்கப்பட்டு, பகுதி Q இல் பட வைக்கப்படுவதன் மூலம் 2890 எனும் எண் அச்சிடப்பட்டது. பகுதி P இலும் பகுதி R இலும் எண்கள் எழுதப்பட்ட விதத்தைக் காட்டும் விடை எது?



(1)




(2)



(3)

20. மாலா, சீதா, ராதா ஆகிய மூன்று பிள்ளைகள் பயணித்த பாதைகள் கீழுள்ள நெய்யரியில் காட்டப்பட்டுள்ளன.



இம்மூவரில் அதிக தூரம் பயணித்தவர் யார்?


(1) மாலா (2) சீதா (3) ராதா

21. சரவணன் ஓர்ஆண் பிள்ளை ஆவான். சரவணணின் அக்காவுக்கு இரண்டு சகோதரர்களும் இரண்டு சகோதரிகளும் உள்ளனர். இதன்படி, சரவணனுக்கு உள்ள சகோதரர்களினதும் சகோதரிகளினதும் எண்ணிக்கைகள் முறையே எவை?

(1) 1, 3 (2) 2, 2 (3) 3, 1

www.ikedu.lk

22. உருவில் தரப்பட்டுள்ள வடிவத்தைப் பெறுவதற்கு நான்காக மடிக்கப்பட்ட வட்ட வடிவக் கடதாசியைச் சரியாக வெட்ட வேண்டிய விதத்தைத் தெரிவு செய்க.





(1)



(2)



(3)

23. ரமணி, கவிதாவின் மகள். ரமணியின் தகப்பன் வரதன். சந்திரா வரதனின் சகோதரி. சந்திராவின் தாய் ராதா. இதற்கேற்ப ரமணி ராதாவிற்கு என்ன உறவு?

(1) மருமகள் (2) மகள் (3) பேர்த்தி

24. பின்வரும் உருக்கோலத்தில் ? உள்ள இடத்தில் வரவேண்டிய உரு யாது?



? .....



(1)




(2)




(3)


25. பின்வரும் உருக்கோலத்தில் ? உள்ள இடத்தில் வரவேண்டிய உரு யாது?




? .....



(1)



(2)



(3)

26. பின்வரும் நான்கு உருச்சட்டங்களில் ஒரு நிகழ்வின் நான்கு சந்தர்ப்பங்கள் காட்டப்பட்டுள்ளன




A



B



C



D

அச்சந்தர்ப்பங்களின் அர்த்தமுள்ள ஒழுங்குமுறை யாது?

(1) CADB (2) BDAC (3) BDCA

27. மூன்று அப்பியாசப் புத்தகங்களினதும் ஒரு பேனையினதும் விலை 220 ரூபாய் ஆகும். ஒரு அப்பியாசப் புத்தகத்தினதும் ஒரு பேனையினதும் விலை 90 ரூபாய் ஆகும். ஒரு அப்பியாசப் புத்தகத்தின் விலையையும் ஒரு பேனையின் விலையையும் முறையே காட்டும் விடை எது?

(1) 60 ரூபாய் 30 ரூபாய் (2) 55 ரூபாய் 35 ரூபாய் (3) 65 ரூபாய் 25 ரூபாய்

www.ikedul.lk


28. ஒரு மண்டபத்தில் 6 கதிரைகள் வீதம் 30 வரிசைகளிலும் 5 கதிரைகள் வீதம் 20 வரிசைகளிலும் 4 கதிரைகள் வீதம் 10 வரிசைகளிலும் கதிரைகள் வைக்கப்பட்டிருந்தன. மண்டபத்தில் வைக்கப்பட்டிருந்த கதிரைகள் எத்தனை?

(1) 240 (2) 280 (3) 320

29. கங்காவின் வயது யமுனாவின் வயதின் மூன்று மடங்கு ஆகும். இன்னும் 12 வருடங்களில் கங்காவின் வயது யமுனாவின் வயதின் இருமடங்காக இருக்குமெனின் கங்காவின் தற்போதைய வயது யாது?

(1) 27 வருடங்கள் (2) 30 வருடங்கள் (3) 36 வருடங்கள்

30. பூக்கள், மாலையில் மலரும் பூக்கள், இரவில் மலரும் பூக்கள், கடுபுல் மலர் ஆகியவற்றுக்கு இடையே உள்ள தொடர்பு இந்த உருவில் வகை குறிக்கப்பட்டுள்ளது. அதன்படி எழுத்து C இனால் வகை குறிக்கப்படுவது யாது?



(1) இரவில் மலரும் பூக்கள்
(2) மாலையில் மலரும் பூக்கள்
(3) கடுபுல் மலர்

31. வகுப்பு ஒன்றில் உள்ள ஆண் பிள்ளைகளின் எண்ணிக்கை பெண் பிள்ளைகளின் எண்ணிக்கையின் மூன்று மடங்காகும். இன்னும் 8 பெண் பிள்ளைகள் வகுப்பில் சேர்ந்தனர். அதன்பின்னர், ஆண் பிள்ளைகளின் எண்ணிக்கையும் பெண் பிள்ளைகளின் எண்ணிக்கையும் சமமாகியது. இப்போது வகுப்பில் உள்ள மொத்தப் பிள்ளைகள் எத்தனை?

(1) 24 (2) 28 (3) 30

32. நீளம், அகலம், உயரம் ஆகியன 6cm வீதம் உள்ள ஒரு மரச்சதுரமுகியில் இருந்து நீளம், அகலம், உயரம் ஆகியன 2cm வீதம் உள்ள எத்தனை சிறிய சதுரமுகிகளை வெட்டி எடுக்கலாம்?

(1) 9 (2) 27 (3) 36

33. ஒரு சுவரில் தொங்கவிடப்பட்டுள்ள ஐந்து பலகைகள் கீழே காட்டப்பட்டுள்ளன. அவை எல்லாவற்றையும் பயன்படுத்தி மிகவும் சரியான ஒரு வாக்கியத்தைப் பெறுவதற்குக் குறைந்த பட்சம் எத்தனை பலகைகளின் அவை மாற்றுதல் வேண்டும்?



(1) இரண்டின் (2) மூன்றின் (3) நான்கின்

34. கீழே தரப்பட்டுள்ள சொற்சோடிகளில் ஒன்று ஏனைய இரு சொற்சோடிகளிலும் இருந்து வேறுபட்டது. வேறுபட்ட அச்சோடி எது?

(1) நத்தை ஓடு (2) சிலந்தி - வலை (3) கறையான் - புற்று

www.ikeau.lk

35. 30 நாட்களில் முடிவடையும் ஒரு மாதத்தின் முதலாம் நாள் வெள்ளிக்கிழமையாகும். அந்த மாதத்தில் எத்தனை வியாழக்கிழமைகள் உள்ளன?

(1) 3 (2) 4 (3) 5

36. 

இவ்வுருவின் $\frac{3}{4}$ பகுதியை நிழற்றுவதற்காக நிறந்தீட்டப்பட்டுள்ள கட்டங்களுக்கு மேலதிகமாக இன்னும் எத்தனை கட்டங்களை நிறந்தீட்ட வேண்டும்?

(1) 1 (2) 2 (3) 3

37. கீழே தரப்பட்டுள்ள சொல் வரிசையில் ஏனைய சொற்களுடன் பொருந்தாத சொல் இடம்பெறும் சொல் வரிசையைத் தெரிவு செய்க.

(1) கண், காது, கால், கை

(2) சிங்கம், கரடி, நரி, புலி

(3) பீற்றூட், கரட், கோவா, மரக்கறி

38. வெற்றிடத்துக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

தென்னைக்கும் பனைக்கும் ஓலை போல நெல்லுக்கும் புல்லுக்கும் ..... ஆகும்.

(1) இலை (2) தாள் (3) குலை

39. பெறுமானம் கூடிச் செல்லும் வகையில் எண்களை ஒழுங்குபடுத்தினால் எழுத்துக்கள் அமையும் ஒழுங்கு எது?

P	90909	Q	99009	R	90990	S	99900	T	90099

(1) TPRQS (2) TPSQR (3) TPQRS

40. மூன்று நபர்களின் பெயர்கள் ஆங்கில எழுத்துக்களைப் பயன்படுத்திக் குறியீட்டு முறையாக MSPC, VSPC, KSPC என எழுதப்பட்டிருந்தன. இம்மூன்று நபர்களினதும் பெயர்கள் சரியாக எழுதப்பட்டுள்ள விடை யாது?

(1) நகுலன், கமலன், அசேலன்

(2) ஆதவன், மாதவன், கேசவன்

(3) நிமலன், கமலன், அமலன்

***

www.lkedu.lk

සියලුම හිමිකම් ඇවිරිණි]
(முழுப்பதிப்புரிமையுடையது)
All rights Reserved]

ஆசிரியர்: எம்.ஏ. அபுதாஹிர்

Q First கல்வி நிறுவகம்

5

3

முன்னோடி வினாப்பத்திரம்

மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சைக்கான முன்னோடி வினாப்பத்திரம் 2024

வினாத்தாள் II

1 மணித்தியாலம் 15 நிமிடம்

சுட்டெண்: .....

பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்

* உமது **சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.
* **மூன்றாம் பக்கத்தில்** குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக.
* இவ்வினாத்தாளில் **60** வினாக்கள் உள்ளன. சில வினாக்களில் உபபகுதிகளும் உள்ளன.
* எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை **இவ்வினாத்தாளிலேயே** எழுதுக.
* விடைகள் எழுதப்பட வேண்டிய வினாக்களின் விடைகளைப் **புள்ளிக் கோட்டின் மீது** எழுதுக.
* விடையின் கீழே கோடிடுமாறு கேட்கப்பட்டிருக்கும்போது சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழே கோடிடுக.
* செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

பக்க இலக்கம்	பெற்ற புள்ளிகள்
2	
3	
4	
5	
6	
7	
8	
மொத்தம் இலக்கத்தில்	
மொத்தம் எழுத்தில்	

	முதலெழுத்தொப்பமும் குறியீட்டு எண்ணும்
முதலாவது பரீட்சகர் புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப் பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன்.	V/I/T
இரண்டாவது பரீட்சகர் முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	V/I/T
மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பிட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	V/I/T/EMF
பிரதான பரீட்சகர் மேற்பார்வை செய்தேன் இறுதிப்புள்ளிகள் சரியாகும்	V/I/T/CH

www.lkedu.lk

[பக். 2 ஐப் பார்க்க

1. பின்வரும் பந்தியை வாசியுங்கள்

முகுந்தனும் அவனது தம்பி பாபுவும் அவர்களின் பெற்றோருடன் ஒரு நாள் மிருகக் காட்சிச்சாலைக்குச் சென்றிருந்தனர். முகுந்தனின் அப்பா நுழைவுச்சீட்டுக்களை வாங்கிக் கொண்டு வந்தார். நுழைவாயிலில் அவற்றைக் கொடுத்துவிட்டு எல்லோரும் உள்ளே நுழைந்தனர். அங்கு அவர்கள் முதலில் கடல் சிங்கத்தைக் கண்டனர். அதன்பின் வண்ண மீன்களையும் பலவகைப் பாம்புகளையும் பார்வையிட்டனர். அதனையடுத்து பலவர்ணக் கிளிகள் உள்ள இடத்துக்குச் சென்றனர். கிளிகளின் அழகைப் பார்த்த மகிழ்ச்சியில் முகுந்தனும் பாபுவும் துள்ளிக் குதித்தனர். அதே மகிழ்ச்சியோடு இன்னும் பல மிருகங்களையும் பறவைகளையும் பார்த்து ரசித்துவிட்டு அங்கிருந்து புறப்பட்டனர். புறப்படும் போது "இதனை ஆறஅமர சுற்றிப் பார்க்க குறைந்தது இரண்டு நாட்களேனும் வேண்டும்" என்று முகுந்தனின் அம்மா கூறினார்.

● பந்தியைத் துணையாகக் கொண்டு விடை எழுதுக.

(i) முகுந்தனும் பாபுவும் யாருடன் மிருகக்காட்சிச்சாலைக்குச் சென்றிருந்தனர்?

.....

(ii) அப்பா எவற்றை வாங்கிக் கொண்டு வந்தார்?

.....

(iii) மிருகக் காட்சிச்சாலைக்குள் நுழைந்தவர்கள் முதலில் அங்கு எதனைக் கண்டனர்?

.....

(iv) இங்கு இடம்பெறும் இணைமொழியை எழுதுக

.....

(v) முகுந்தனும் பாபுவும் துள்ளிக் குதித்தது ஏன்?

.....

(vi) புறப்படும் போது முகுந்தனின் அம்மா கூறியது யாது?

.....

.....

2. அ.ிணை, நிகழ்கால பன்மை வினைச் சொல்லைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

(1) நீந்துகின்றன (2) ஓடுகிறது (3) விளையாடுகிறார்கள்

3. தரப்பட்ட சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியமாக எழுதுக.

போவதனால் / துரிதமாக / மரங்கள் / மண்ணரிப்பு / இடம்பெறுகிறது / இல்லாது

.....

.....

4. பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் எழுவாய் பயனிலைத் தொடர்பு சரியாயின் ✓ எனவும் பிழையாயின் x எனவும் எதிரே உள்ள அடைப்புக் குறிக்குள் அடையாளம் இடுக.

(i) உழவர்கள் வயலில் வேலையைத் தொடங்கினார்கள் (.....)

(ii) மரக்கிளையில் தேனீக்கள் கூட்டினை அமைக்கின்றன (.....)

(iii) யானைகள் பிளிறும் சத்தம் அச்சத்தை ஏற்படுத்துகின்றன (.....)

(iv) ஒவ்வொரு மாணவனின் கையிலும் ஒவ்வொரு புத்தகம் இருந்தன (.....)

www.ikeou.lk

சுட்டெண்:.....

5. பொருத்தமான நிறுத்தக் குறிகளை இடுக.

வகுப்பறைச் சூழலைச் சுத்தமாக வைத்திருக்கப் பழகுங்கள் என்று அதிபர் கூறினார்

6. ஒவ்வொரு வாக்கியத்திலும் உள்ள சரியான எழுத்துக் கூட்டல் உள்ள சொல்லை அடைப்புக் குறியினுள்ளிருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

(i) ஆலும் (வேலும் / வேளும் / வேழும்) பல்லுக்கு உறுதி.

(ii) தோட்டத்தைப் (பராமறிக்கும் / பராமரிக்கும் / பறாமரிக்கும்) பணி மாணவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

7. பின்வரும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான பழமொழியைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.

இளமைத் துடிப்பில் இளையோர் தமது செயல்களின் நன்மை தீமை அறியாமல் செயற்படுவர்.

.....

8. பின்வரும் வாக்கியத்தை இறந்தகால வாக்கியமாக மாற்றி எழுதுக.

மரத்திலிருந்து பழங்கள் விழுகின்றன

.....

9. பின்வரும் சொற்களுக்குரிய கூட்டத்தைக் குறிக்கும் சொல்லைத் தெரிவு செய்து அதன் கீழே கோடிடுக

(i) திராட்சை - (கொத்து / குலை / சீப்பு)

(ii) சனம் - (குழாம் / திரள் / படை)

10. ஒவ்வோர் ஆங்கிலச் சொல்லுக்கும் உரிய **தமிழ்ச் சொல்லை** எழுதுக

(i) River :.....

(ii) Festival :.....


11. கீழே தரப்பட்டுள்ள சொற்களைச் சரியாக ஒழுங்குபடுத்தி, கருத்துள்ள வாக்கியங்களாக்கி எழுதுக.

(i) to / is / bed / She / going :.....

(ii) five / is / It / rupees :.....

12. பின்வரும் ஒவ்வொரு படத்திற்கும் பொருத்தமான சொல்லை, தரப்பட்டுள்ள கட்டத்தினுள் ஆங்கில எழுத்துக்களில் எழுதுக

(i)



W				l			r			w

(ii)



E			l			o		m

13. 'தொளஹ (ඇඹුම)' என்ற சிங்களச் சொல்லுக்குரிய **தமிழ்ச்** சொல்லை எழுதுக.

.....

www.lkedu.lk

14. பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் சொல்லப்படும் விதத்தைத் **தமிழில்** எழுதுக.

இங்கே வாருங்கள் : .....

15. பின்வரும் எண்ணை எழுத்தில் எழுதுக.

96032 : .....

16. பின்வரும் எண்கோலத்தில் அடுத்து வரவேண்டிய இரண்டு எண்களையும் எழுதுக.


57, 65, 73, 81, ..., ...,

17.

3	0
7	4

அடைப்புக்குள் உள்ள எல்லா இலக்கங்களையும் கொண்டு ஆக்கக் கூடிய மிகச் சிறிய எண்ணை எழுதுக

: .....

18. 

உருவில் நிழற்றப்பட்டுள்ள பகுதியை ஒரு தசம எண்ணாக எழுதுக

: .....

19. மிகப் பெரிய எண்ணின் கீழ்க் கோடிடுக

14349, 41115, 40797, 41605, 41056

20. கீழுள்ள அட்டவணையின் வெற்றிடங்களை நிரப்புக

	எண்	இலக்கம்	இலக்கம் அமைந்துள்ள இடம்	இடப் பெறுமானம்	இலக்கத்தினால் வகை குறிக்கப்படும் பெறுமானம்
(i)	42635	.....	நூறினிடம்	100	.....
(ii)	84572	4	.....	1000	.....

21.

3562		2027
	3735	
2127		3492

(i) அடைப்புக்குள் இருக்கும் எவ்விரு எண்களின் கூட்டுத் தொகை 7227 ஆகும்? ....., ...

(ii) அடைப்புக்குள் இருக்கும் எவ்விரு எண்களின் வித்தியாசம் 1435 ஆகும்? ....., ...

22. மாணவர்களுக்கு விநியோகிப்பதற்காக பாடசாலைக்கு ஒருதொகை அப்பியாசக் கொப்பிகள் கொண்டுவரப்பட்டன. அவற்றை ஒரு பிள்ளைக்கு 7 வீதம் 14 பிள்ளைகளுக்கு விநியோகித்த பின்னர் 2 அப்பியாசக் கொப்பிகள் மீதமாக இருந்தன. பாடசாலைக்குக் கொண்டுவரப்பட்ட அப்பியாசக் கொப்பிகள் எத்தனை?

: .....

23. 5 அறைகளில் 760 கதிரைகள் சம எண்ணிக்கைகளில் வைக்கப்பட்டுள்ளன. ஓர் அறையில் வைக்கப்பட்டுள்ள கதிரைகளின் எண்ணிக்கை யாது?

: .....

24. பயணிகள் குழு ஒன்று 53km 150m தூரத்தைப் பேருந்திலும் எஞ்சிய 56km 900m தூரத்தைப் புகையிரதத்திலும் சென்றது. அக்குழு பயணம் செய்த மொத்தத் தூரம் யாது?

:.....km.....m


www.ikedu.lk

25. ஒரு தாங்கியில் 22*l* 650*ml* பால் இருந்தது. அதிலிருந்து 16*l* 750*ml* அளவு பால் விற்கப்பட்டது. எஞ்சிய பாலின் அளவு யாது?

: .....*l*.....*ml*

26. ஒரு வியாபாரி விற்பதற்காக வாங்கிய 4kg 550g மிளகுடன் வீட்டுத் தோட்டத்தில் இருந்து பெற்ற 2kg 750g மிளகையும் சேர்த்தார். தற்போது அவரிடம் உள்ள மிளகின் மொத்த நிறை யாது?

: .....kg.....g

27. 

(i) இந்தத் திண்ம உருவின் பெயர் யாது?

: .....

(ii) இத்திண்மத்திற்கு உள்ள விளிம்புகளின் எண்ணிக்கை யாது?

: .....

28. 24 தோடம்பழங்களின் நான்கில் மூன்று $\left(\frac{3}{4}\right)$ பங்குகளில் எத்தனை தோடம்பழங்கள் உண்டு

: .....

29. விலைச் சுட்டியைப் பார்த்து விடை எழுதுக

பொருள்	1kg இன் விலை	
	ரூபாய்	சதம்
கோதுமை மா	190	00
அரிசி	200	00
பருப்பு	550	00

(i) கோதுமை மா, அரிசி, பருப்பு ஆகிய மூன்றையும் 500 கிராம் வீதம் வாங்குவதற்குத் தேவையான பணம் யாது?

ரூபாய் .....

(ii) இதற்காக 500 ரூபாயைக் கடை உரிமையாளரிடம் வழங்கினால் கிடைக்கும் மீதிப் பணம் யாது?

ரூபாய் .....

● 30 தொடக்கம் 59 வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையைத் தரப்பட்டுள்ள விடைகளில் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

30. குப்பைகளை உக்கச் செய்தல், சூழல் மாற்றத்தை அறிவித்தல், தீங்கான பிராணிகளை அழித்தல் ஆகிய செயற்பாடுகள் மூலம் மனிதருக்கு உதவும் பிராணிகளை முறையே காட்டும் விடை எது?

(1) மண்புழு, ஈசல், கபரகொய்யன்
(2) தவளை, வெளவால், கறையான்
(3) பருந்து, நத்தை, வெளவால்

31. சோயா அவரையில் அதிகம் அடங்கியுள்ள போசணை

(1) காபோவைதரேற்று (2) கொழுப்பு (3) புரதம்

32. வீட்டில் வளர்க்கப்படும் பிராணிகள்

(1) காகம், செண்பகம் (2) பல்லி, சிலந்தி (3) பசு, நாய்

33. மன்னன் தாதுசேனனால் கட்டுவிக்கப்பட்ட குளம்

(1) மின்னேரியாக் குளம் (2) கலாவாவி (3) திசாவாவி

34. ஒரு குறித்த காலத்தில் **அன்றி** வருடம் முழுவதும் பூக்கள் பூக்கும் தாவரம்

(1) ரம்புட்டான் (2) பாலை (3) வாழை

www.ikeau.lk

35. இலங்கை நாணயத் தாள்களில் கையொப்பம் இடுபவர்களுக்குள் **அடங்காதவர்**

(1) இலங்கை மத்திய வங்கி ஆளுநர்
(2) சனாதிபதி
(3) நிதி அமைச்சர்

36. வெடிப்பதன் மூலம் பரவும் ஒரு வித்தையும் நீரின் மூலம் பரவும் ஒரு வித்தையும் முறையே குறிப்பிடும் விடை எது?

(1) நாயுருவி, எருக்கலை (2) காசித்தும்பை, இறப்பர் (3) வெண்டி, கடல்மாங்காய்

37. நீருடன் நன்கு கலக்கக் கூடிய திரவம்

(1) தேங்காய் எண்ணெய் (2) வினாகிரி (3) பெற்றோல்

38. உப்புத்தூள் விரைவாகக் கரைவது

(1) குளிரூட்டிய நீரில் (2) கொதித்தாறிய நீரில் (3) வெந்நீரில்

39. உணவு உண்ணும் போது பின்பற்ற வேண்டிய நற்பழக்கங்களில் ஒன்று

(1) சத்தமிட்டுச் சிரித்தபடி உண்ணுதல்
(2) உண்ணும் போது சப்புக் கொட்டுதல்
(3) உதடுகளை அளவுக்கதிகமாகத் திறக்காமல் உணவை மெல்லுதல்

40. நாம் பின்பற்றக் **கூடாத** ஒரு பழக்கம்

(1) தும்முதல், இருமுதல் போன்ற சந்தர்ப்பங்களில் கைக்குட்டையைப் பயன்படுத்துதல்
(2) தலையணை, படுக்கை விரிப்பு போன்றவற்றை வெய்யிலில் இட்டு உலர்த்துதல்
(3) வாயை நன்றாக அகலத் திறந்து கொட்டாவி விடுதல்

41. தச்சு வேலைத் தலத்தில் பயன்படுத்தப்படும் பொருள் **அல்லாதது**

(1) தூக்குக்குண்டு (2) உளி (3) சீவுளி

42. இலங்கைக்கு மேற்கே காணப்படுவது

(1) தாய்லாந்து (2) ஆபிரிக்க நாடுகள் (3) மலேசியா

43. மருந்துப்பாணி ஒன்றை வாங்கிய ஒருவர் அதை அருந்த முன் அவதானிக்க வேண்டிய ஒரு முக்கிய அம்சம்

(1) பயன்படுத்துவதற்குரிய அறிவுறுத்தல்கள்
(2) முறைப்பாடு தெரிவிப்பதற்காகத் தரப்பட்டுள்ள தகவல்
(3) உற்பத்தியாளரின் பெயரும் முகவரியும்

44. துருவலகைத் தீட்டப் பயன்படுத்தப்படுவது

(1) வாள் (2) உளி (3) அரம்

45. அகத்தித் தாவரத்தின் பின்வரும் எப்பகுதிகள் உணவுக்குப் பயன்படுத்தப்படுகின்றன?

(1) வேரும் காயும் (2) வேரும் பட்டையும் (3) இலையும் பூவும்

46. வளவை நதி கடலில் சேரும் இடம்

(1) அம்பாந்தோட்டை (2) அம்பலாந்தோட்டை (3) திருகோணமலை

47. நோய்க்காவி நுளம்பு தீண்டுவதால் ஏற்படத்தக்க நோய் **அல்லாதது**

(1) கழிச்சல் (2) மலேரியா (3) யானைக்கால்

www.ikdu.lk

48. நீல நிறப் பலகையில் வெள்ளை நிற முக்கோணியினுள்ளே காட்டப்பட்டுள்ள இக்குறியீடு வெளிப்படுத்துவது



(1) வேகமாகப் பாதையைக் கடவுங்கள்
(2) பாதசாரிகள் பாதையைக் கடக்குமிடம்
(3) பாதசாரிகள் பாதையைக் கடக்குமிடம் முன்னால்

49. துளைக்கமராவின் ஊடாகப் பார்க்கப்படும் எந்த ஒரு பொருளும்

(1) கிடையாகத் தோன்றும்
(2) அளவில் பெரிதாகத் தோன்றும்
(3) தலைகீழாகத் தோன்றும்


50. அணிந்திருக்கும் ஆடையில் தீப்பற்றிய ஒருவரைக் காப்பாற்றுவதற்கு உடனடியாகச் செய்ய வேண்டிய நடவடிக்கை


(1) திறந்த வெளியில் ஓடவிடல்
(2) தீப்பிடித்த ஆடையின் பகுதியைக் கிழித்து எறிதல்
(3) நிலத்தில் உருளச் செய்தல்


51. தன்னிறைவும் செழிப்பும் என்பதைக் குறிக்க, இலங்கைத் தேசிய இலச்சினையில் காணப்படுவது

(1) சூரியன் சந்திரன் (2) நெற்கதிர் (3) நிறைகுடம்

52. பாக்குவெட்டியினால் பாக்கினை வெட்ட, பாக்கு வைக்கப்பட வேண்டிய சரியான முறையைக் காட்டுவது


(1)


(2)


(3)


53. 

இங்கு காட்டப்பட்டுள்ள அமைப்பைக் கொண்டுள்ள இலங்கையின் மாகாணம் எது?

(1) கிழக்கு மாகாணம்
(2) தென் மாகாணம்
(3) மத்திய மாகாணம்

54. உலர் கலத்துடன் LED மின்குமிழ்கள் கம்பிகளினால் இணைக்கப்பட்டுள்ள மூன்று சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன. இவற்றுள் LED மின்குமிழ் ஒளிரும் சந்தர்ப்பம் எது?


(1)


(2)


(3)

55. திசைகாட்டி பற்றிய பின்வரும் கூற்றுக்களில் **பிழையானது** எது?

(1) மாலுமிகள், விமானிகள், இராணுவ வீரர்கள் போன்ற பல்வேறு துறைகளைச் சேர்ந்தவர்கள் திசைகளைக் கண்டறிய, திசைகாட்டியைப் பயன்படுத்துகின்றனர்.
(2) திசைகாட்டியின் சுட்டியும் ஒரு காந்தமாகும்.
(3) ஒரு காந்தத்தை ஒரு திசைகாட்டிக்கு அருகில் கொண்டு செல்லும் போது இரு பொருள்களிலும் மாற்றம் எதுவும் நிகழாது.

www.ikedu.lk

56. வீட்டில் நீண்ட நாட்களாகப் பயன்படுத்தப்படாமல் இருந்த தையல் இயந்திரத்தை மீளவும் இயக்க வேண்டிய தேவை அம்மாவுக்கு ஏற்பட்டது. இயந்திரத்தைச் சிறப்பாக இயங்கச் செய்வதற்கு அம்மா முதலில் செய்யக் கூடிய மிக முக்கிய நடவடிக்கை எது?

(1) புதிய தையல் ஊசியைப் பொருத்துதல்
(2) மிருதுவான நைலோன் கயிற்றினால் சில்லுகளை இணைத்தல்
(3) இயந்திரத்தின் சுழலுமிடங்களில் எண்ணெய் இடல்.

57. மள்புளுட்டா எனப்படுவது இலங்கைக்கே உரித்தான


(1) ஒரு நகருயிர் (2) ஒரு முலையூட்டி (3) ஒரு மீனினம்

58. 


இக்குறியீட்டினால் கூறப்படும் தகவல் யாது?

(1) மீள் சுழற்சிக்கு உட்படுத்தலாம்.
(2) மீள் சுழற்சிக்கு உட்படுத்தக் கூடிய கண்ணாடி.
(3) மீள் சுழற்சிக்கு உட்படுத்தக் கூடிய அலுமினியம்.


59. மின்குமிழைத் தேவையான சந்தர்ப்பங்களில் மாத்திரம் ஒளிரச் செய்யக்கூடியவாறு ஆளி ஒன்றினை அமைப்பதற்குரிய பொருத்தமான பொருளைக் கண்டு கொள்வதற்காக மாணவன் ஒருவன் அமைத்த பின்வரும் சுற்றுக்களில் மின்குமிழ் ஒளிரக் கூடிய சுற்று எது?



(1)



(2)



(3)

60. 'பனிப்பொழிவு மிகுந்த காலைப் பொழுது' என்ற தலைப்பில் மூன்று வாக்கியங்கள் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியமும் **ஐந்து** சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும். எழுவாய் பயனிலைத் தொடர்பு, எழுத்துக் கூட்டல் என்பவையும் சரியாக இருத்தல் வேண்டும்)

1. .....
.....
.....

2 .....
.....
.....

3 .....
.....
.....

***

www.ikeotuk.lk

සියලුම හිමිකම් ඇවිරිණි]
(முழுப்பதிப்புரிமையுடையது)
All rights Reserved]

ஆசிரியர்: எம்.ஏ. அபுதாஹிர்

Q First கல்வி நிறுவகம்
முன்னோடி வினாப்பத்திரம் 4 5

மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சைக்கான
முன்னோடி வினாப்பத்திரம் 2024

வினாத்தாள் I

ஒரு மணித்தியாலம்

சுட்டெண்: .....

பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள் :

- உமது **சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.
- **மூன்றாம் பக்கத்தில்** குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக.
- இவ்வினாத்தாளில் **40** வினாக்கள் உள்ளன. எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை **இவ்வினாத்தாளிலேயே எழுதுக.**
- ஒவ்வொரு வினாவிற்கும் **மூன்று** விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றிடையே ஒவ்வொரு வினாவிற்கும் உரிய **சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**
- செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

பக்க இலக்கம்	பெற்ற புள்ளிகள்
2	
3	
4	
5	
6	
7	
8	
மொத்தம் இலக்கத்தில்	
மொத்தம் எழுத்தில்	

	முதலெழுத்தொப்பமும் குறியீட்டு எண்ணும்
முதலாவது பரீட்சகர் புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப் பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன்.	V/I/T
இரண்டாவது பரீட்சகர் முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	V/I/T
மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பீட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	V/I/T/EMF
பிரதான பரீட்சகர் மேற்பார்வை செய்தேன் இறுதிப்புள்ளிகள் சரியாகும்	V/I/T/CH

[பக். 2 ஐப் பார்க்க

www.lkedu.lk

LEARN EASY

- KNOWLEDGE IS POWER -

www.learneasy.lk || www.lkedu.lk


76667-4945

தரம்
02

தமிழ்	செவ்வாய் 7.00 - 8.00 pm வெள்ளி 6.00 - 7.00 pm
கணிதம்	புதன் 6.00 - 7.00 pm சனி 8.00 - 9.00 am
சுற்றாடல்	வியாழன் மற்றும் சனி 6.00 - 7.00 pm
ஆங்கிலம்	ஞாயிறு 6.00 - 7.00 am
Spoken English	திங்கள் 6.00 - 7.00 pm

76667-4945

1. பின்வரும் உருவை அவதானிக்க. அதனைப் பற்றிய சரியான கூற்றைத் தெரிவு செய்க.



(1) ஒரு புத்தக இறாக்கையும் ஒரு பூச்சாடியும் உள்ளன.

(2) ஆசிரியை இல்லாத போதும் பிள்ளைகள் ஆறு பேரும் ஒரு குழுச் செயற்பாட்டில் ஈடுபடுகின்றன.

(3) கரும்பலகையில் எழுதப்பட்டிருப்பதைப் பிள்ளைகள் பார்த்து எழுதிக்கொண்டிருக்கின்றன.

2. தரப்பட்டுள்ள படத்துடன் தொடர்புடைய மூன்று சொற்கள் அடங்கிய விடையைத் தெரிவு செய்க.




(1) நீர், மழை, காலை

(2) வெயில், மழை, பாதுகாப்பு

(3) கடை, நிறம், துணி


3. குறைந்த தொடர்புடைய உருச்சோடி இருக்கும் அடைப்பு எது?



(1)



(2)




(3)

4. கீழே தரப்பட்டுள்ள A, B, C, D, E ஆகிய உருக்களில் ஒத்த இரண்டு உருக்களும் யாவை?



A B C D E

(1) A உம் B உம் (2) B உம் C உம் (3) C உம் E உம்

5. 

தரப்பட்ட உருவில் ஒன்றிலிருந்தொன்று வேறுபட்ட எத்தனை வகை வடிவங்கள் உள்ளன?

(1) 3

(2) 4

(3) 5

www.kedu.lk

சுட்டெண்:.....

● 6, 7 ஆகிய வினாக்களில் வேறுபட்ட உருவினைத் தெரிவு செய்க.

6.



(1)



(2)



(3)

7.



(1)




(2)



(3)

8. வட்ட வடிவ ஓட்டப் பாதை ஒன்று உருவில் தரப்பட்டுள்ளது. இரண்டு பிள்ளைகள் அதன் P என்னும் இடத்திலிருந்து ஒரேயடியாகப் புறப்பட்டு ஒரே திசையில் செல்கின்றன. ஒருவரது கதி, மற்றவரது கதியின் இரண்டு மடங்கு எனின் அப்பிள்ளைகள் இருவரும் மீண்டும் சந்திக்கும் இடம் எது?



(1) P
(2) Q
(3) R


9. உட்பக்கம் தெரியாத பெட்டி ஒன்றில் சிவப்பு, நீலம், கறுப்பு ஆகிய ஒவ்வொரு நிறத்திலும் மூன்று மணிகள் வீதம் இருந்தன. மணிகளைப் பார்க்காமல் சிவப்பு நிறத்திலான ஒரு மணியைத் தவறாமல் பெறுவதற்கு பெட்டியில் இருந்து வெளியே எடுக்கப்பட வேண்டிய மணிகளின் குறைந்தபட்ச எண்ணிக்கை யாது?

(1) 3 (2) 1 (3) 7

10. 300 கிராம் மாவினால் 6 இட்லி அல்லது 8 இடியப்பம் அல்லது 10 பலகாரம் செய்ய முடியும். 5 பலகாரமும் 16 இடியப்பமும் 3 இட்லியும் செய்யத் தேவையான மாவின் அளவு யாது?

(1) 150 கிராம் (2) 600 கிராம் (3) 900 கிராம்

11. அருகே உள்ள உருவில் X, Y, Z ஆகியவற்றால் குறிக்கப்படுவனவற்றை முறையே காட்டும் விடையைத் தெரிவு செய்க.




(1) வாகனங்கள், பேருந்து, புகையிரதம்
(2) மனிதர்கள், ஆண்கள், பெண்கள்
(3) விலங்குகள், தாவரஉண்ணிகள், முயல்

www.ikeda.lk


12. ஒரு குழுவில் உள்ள மாணவர்கள் ஒவ்வொருவரும் அக்குழுவில் இடம்பெறும் ஏனைய ஐந்து மாணவர்களுடனும் கைகுலுக்கிக் கொண்டனர். மொத்தமாக எத்தனை கைக்குலுக்கல்கள் இடம்பெற்றன?

(1) 10 (2) 15 (3) 20

13. பின்வரும் உருக்களில் தரப்பட்டுள்ள பகுதிகளில் மூன்றைப் பொருத்துவதன் மூலம் கோப்பை ஒன்றை ஆக்க முடியும். அம்மூன்று பகுதிகளும் எவை?




(1) A, B, D (2) A, C, E (3) B, D, F

14. 

இந்த உருவில் காணத்தக்க முக்கோணிகளின் எண்ணிக்கை யாது?


(1) 13 (2) 14 (3) 15

15. உருவில் ஒரே அளவான பல சிறிய மரக்குற்றிகளைப் பயன்படுத்தி உருவாக்கிய அமைப்பு காட்டப்பட்டுள்ளது. இந்த அமைப்புக்குப் பயன்படுத்தப்பட்டுள்ள சிறிய மரக்குற்றிகளின் மொத்த எண்ணிக்கை யாது?




(1) 110 (2) 113 (3) 125


● 16, 17 ஆகிய வினாக்களில் உள்ள கோலத்திற்கேற்ப அடுத்துவரும் உருவைத் தெரிவு செய்க.

16. 


.....



(1) (2) (3)

17. 


.....



(1) (2) (3)


www.ikedu.lk

18. ஒவ்வொன்றிலும் நான்கு அடைப்புக்கள் வீதம் உள்ள A, B, C, D எனும் நான்கு உருக்கள் கீழே தரப்பட்டுள்ளன.



A B C D

உரு B இலும் உரு D இலும் இருக்கும் ஆனால் உரு A இலும் உரு C இலும் இல்லாத அடைப்பு எது?



(1) (2) (3)

19. தொடக்கத்தில் தரப்பட்ட உருவைப் பூரணப்படுத்துவதற்குப் பொருத்தமான பகுதியைத் தெரிவு செய்க.



(1) (2) (3)

20. கீழே தரப்பட்டுள்ள நெய்யரியில் கிடையாகவும் கீழ்நோக்கியும் உள்ள நிரைகளிலும் நிரல்களிலும் மற்றும் தடித்த கோடுகளால் வேறுபடுத்திக் காட்டப்பட்டுள்ள நான்கு அடைப்புகள் உள்ள (⊞) ஒவ்வொரு பகுதியிலும் 1, 2, 3, 4 எனும் இலக்கங்கள் இடப்படுமாறு அடைப்புகளை நிரப்புதல் வேண்டும். இதற்கேற்ப a, b ஆகிய அடைப்புகளில் இடப்பட வேண்டிய இலக்கங்கள் முறையே எவை?

	3	4	
2	a		b
			1
	1		

(1) 4, 3
(2) 1, 4
(3) 4, 1


21. A + B = Z
Z + P = T
B + P = 8


மேலே தரப்பட்ட தொடர்புகளுக்கு ஏற்ப, பின்வருவனவற்றுள் எது சரியானது?




(1) A + 8 = T (2) B + P = T (3) A - 8 = T


www.ikedu.lk

● 22, 23 ஆகிய வினாக்களின் வெற்றிடங்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

22.  எனின்  ..... ஆகும்

 (1)  (2)  (3)





23.   எனின்  ..... ஆகும்

 (1)  (2)  (3)

24. முகம் பார்க்கும் கண்ணாடியினூடாகப் பார்க்கும் போது மாற்றமின்றித் தெரியக் கூடிய உரு எது?

 (1)  (2)  (3)


25. தரப்பட்டுள்ள செவ்வக வடிவக் கடதாசியை புள்ளிக் கோடுகள் வழியே மடிக்கும் போது கிடைக்கும் உரு யாது?


  (1)  (2)  (3)


26. ஒக்டோபர் 13 இல் இருந்து நவம்பர் 26 வரை உள்ள நாட்களின் மொத்த எண்ணிக்கையை மே 28 இல் இருந்து ஜூன் 11 வரையுள்ள நாட்களின் மொத்த எண்ணிக்கையால் வகுக்கும் போது கிடைக்கும் விடை யாது?

(1) 3 (2) 4 (3) 5

27. கோலத்திற்கேற்ப ? குறியீட்டுக்குப் பொருந்தும் எண் யாது?








(1) 24 (2) 48 (3) 60

www.lkedu.lk

28. கோலத்திற்கேற்ப ? குறியீட்டுக்குப் பொருந்தும் எண் யாது?



(1) 24
(2) 32
(3) 41

29. யமுனா கல்குலேட்டரைப் பயன்படுத்தி, கணக்கு ஒன்றைச் செய்து கொண்டிருந்தாள். இறுதியில் விடையைக் காண, 6 ஆல் பெருக்க வேண்டி இருந்த ஓர் எண்ணைத் தவறுதலாக 6 உடன் கூட்டி அதன்பின் 6 ஆல் பெருக்கிவிட்டாள். அப்போது அவளுக்கு 66 விடையாகக் கிடைத்தது. அவள் செய்த கணக்கிற்கு உரிய சரியான விடை எது?

(1) 360 (2) 60 (3) 30

30. காரணகாரியத் தொடர்புடன் **அமையாத** சோடி வாக்கியத்தைத் தெரிவு செய்க.

(1) காற்று வீசியது - மரங்கள் அசைந்தன
(2) நன்றாகப் படித்தான் - பரீட்சையில் சித்திபெற்றான்
(3) மரத்தில் ஏறினான் - மாங்காய் பறித்தான்

31. சொற்கள் எழுதப்பட்டுள்ள முறைக்கு ஏற்ப வெற்றிடத்தில் வரவேண்டிய சொல்லைத் தெரிவு செய்க.

உருவம் கடகம் ⟶ வருடம்
மருதம் கமலம் ⟶ தருமம்
சந்ததி வதனம் ⟶ .....

(1) சந்தம் (2) தந்தம் (3) சத்தம்

32. முதலாம் வெற்றிடத்துக்கும் இரண்டாம் வெற்றிடத்துக்கும் முறையே மிகப் பொருத்தமான சோடிச் சொற்களைத் தெரிவு செய்க.

பொலித்தீன், பிளாஸ்டிக் ..... இயலுமானவரைத் தவிர்க்கும் போது எதிர்காலத்தில் ஏற்படும் ..... பிரச்சினையைக் குறைக்க வாய்ப்பு ஏற்படும்.

(1) கழிவுகளை, உற்பத்தி (2) விற்பனையை, வியாபார (3) பாவனையை, சூழல்

33. ஒரு நிகழ்வின் மூன்று சந்தர்ப்பங்கள் சரியான ஒழுங்கு முறையில் எழுதப்பட்டுள்ள விதத்தைக் காட்டும் விடையைத் தெரிவு செய்க.

(1) இடி இடித்தல் ⟶ மழை பொழிதல் ⟶ வானம் இருளுதல்
(2) கடைக்குச் செல்லுதல் ⟶ பொருள்கள் வாங்குதல் ⟶ வீடு திரும்புதல்
(3) பசளை இடல் ⟶ நெல்லை விதைத்தல் ⟶ நிலத்தை உழுதல்

34. **'ஆபத்துக்குப் பாவமில்லை'** என்னும் பழமொழியின் கருத்து


(1) பசு முதலிய விலங்குகளுக்குப் பாவம் உண்டாவதில்லை.
(2) நெருக்கடியான வேளையில் விலக்கான காரியத்தைச் செய்வதும் குற்றமாகாது.
(3) ஆபத்துக் காலத்தில் என்ன செய்தாலும் ஒருவரைப் பாவம் வந்து அடையாது.

www.ikeou.lk

35. மருதானை, அல்வாய், மல்வானை என்னும் சொற்கள் 2843, 2163, 9847 என இலக்கங்களைப் பயன்படுத்தி குறியீடுட்டு முறையாக எழுதப்பட்டிருந்தன. இவற்றுள் 2843 இனால் காட்டப்படுவது எது?

(1) மருதானை (2) அல்வாய் (3) மல்வானை

36. A, B, C எனும் மூன்று எண் அட்டைகளும் அவை ஒவ்வொன்றுக்கும் உரிய X, Y, Z எனும் மூன்று இரகசியக் குறியீட்டு அட்டைகளும் தரப்பட்டுள்ளன.



எண் அட்டையையும் அதற்குரிய இரகசியக் குறியீட்டு அட்டையையும் காட்டும் விடை எது?

(1) A ⟶ Z, B ⟶ X, C ⟶ Y
(2) A ⟶ Z, B ⟶ Y, C ⟶ X
(3) A ⟶ Y, B ⟶ X, C ⟶ Z

● பின்வரும் கவிதையை வாசித்து 37, 38 ஆகிய வினாக்களுக்கு விடை தருக

தலை சீவிப் பள்ளிக்கே ஓடு - நல்
தங்கப் பதுமையாம் தோழர்களோடு!
விலையில்லா மெய்ப்பொருள் கல்வி! - அதை
விரும்பிப் படித்தால் அறிவுண்டாம் செவ்வி!

37. கல்வி எவ்வாறான மெய்ப்பொருள் எனக் கூறப்படுகிறது?

(1) மேன்மைமிக்க (2) விலைமதிப்பற்ற (3) தங்கத்தைஒத்த

38. அறிவைப் பெறச் செய்ய வேண்டியது யாது?

(1) தலை சீவிப் பாடசாலைக்குச் செல்ல வேண்டும்
(2) பாடசாலைத் தோழர்களை மதிக்க வேண்டும்
(3) கல்வியை விருப்போடு கற்க வேண்டும்

39. பாடசாலையில் இடம்பெற்ற கண்காட்சியைப் பார்க்க வந்த பெண்களின் எண்ணிக்கை, அங்கு வந்த ஆண்களின் எண்ணிக்கையின் அரைவாசியாகும். இதன்படி, கண்காட்சியைப் பார்க்க வந்த ஆண்களினதும் பெண்களினதும் மொத்த எண்ணிக்கை யாது?

(1) 1962 (2) 2356 (3) 1655

40. பாடசாலைப் பிள்ளைகளுக்கு வழங்குவதற்காக கொண்டுவரப்பட்ட பல்வேறு நிறப் புத்தகங்கள் பேனைகள் பென்சில்கள் பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

நிறம்	புத்தகங்களின் எண்ணிக்கை	பேனைகளின் எண்ணிக்கை	பென்சில்களின் எண்ணிக்கை
நீலம்	32	16	45
சிவப்பு	27	62	19
பச்சை	28	46	21

இப்பொருள்களில் இருந்து ஒருவருக்கு ஒரே நிறத்திலான ஒரு புத்தகமும் ஒரு பேனையும் ஒரு பென்சிலும் கிடைக்குமாறு அதிகபட்சம் எத்தனை பிள்ளைகளுக்கு வழங்க முடியும்?

(1) 56 (2) 95 (3) 153

***

www.ikedu.lk

සියලුම හිමිකම් ඇවිරිණි]
(முழுப்பதிப்புரிமையுடையது)
All rights Reserved]

ஆசிரியர்: எம்.ஏ. அபுதாஹிர்

Q First கல்வி நிறுவகம்

முன்னோடி வினாப்பத்திரம் 4 5

மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சைக்கான முன்னோடி வினாப்பத்திரம் 2024

வினாத்தாள் II

1 மணித்தியாலம் 15 நிமிடம்

சுட்டெண்: .....

பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்

* உமது **சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.
* **மூன்றாம் பக்கத்தில்** குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக.
* இவ்வினாத்தாளில் **60** வினாக்கள் உள்ளன. சில வினாக்களில் உபபகுதிகளும் உள்ளன.
* எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை **இவ்வினாத்தாளிலேயே** எழுதுக.
* விடைகள் எழுதப்பட வேண்டிய வினாக்களின் விடைகளைப் **புள்ளிக் கோட்டின் மீது** எழுதுக.
* விடையின் கீழே கோடிடுமாறு கேட்கப்பட்டிருக்கும்போது சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழே கோடிடுக.
* செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

பக்க இலக்கம்	பெற்ற புள்ளிகள்
2	
3	
4	
5	
6	
7	
8	
மொத்தம் இலக்கத்தில்	
மொத்தம் எழுத்தில்	

	முதலெழுத்தொப்பமும் குறியீட்டு எண்ணும்
முதலாவது பரீட்சகர் புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப் பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன்.	V/I/T
இரண்டாவது பரீட்சகர் முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	V/I/T
மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பிட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	V/I/T/EMF
பிரதான பரீட்சகர் மேற்பார்வை செய்தேன் இறுதிப்புள்ளிகள் சரியாகும்	V/I/T/CH

[பக். 2 ஐப் பார்க்க

www.ikeou.lk

1. பின்வரும் பந்தியை வாசியுங்கள்

வாரத்தின் வெள்ளிக்கிழமையும் ஞாயிற்றுக்கிழமையும் மாலை நேர வகுப்புக்கள் எதுவும் நடைபெறுவதில்லை என்பதால் குகனும் அவனது வகுப்பு நண்பர்களும் அந்நாட்களில் பாடசாலை மைதானத்திற்குச் சென்று விடுவார்கள். அங்கு கிரிக்கட் அல்லது காற்பந்து விளையாடுவதில் நேரத்தைச் செலவிடுவார்கள். காந்தன், மோகன் ஆகிய இரு நண்பர்கள் மட்டும் நூறு மீற்றர் ஓட்டப் பயிற்சியில் ஈடுபடுவார்கள். அடுத்த இல்ல விளையாட்டுப் போட்டியில் நூறு மீற்றர் ஓட்ட நிகழ்ச்சியில் சாதனை படைக்க வேண்டும் என்பது அவர்களது நோக்கமாகும். குகனும் நண்பர்களும் மைதானத்திற்குச் செல்லும் நாட்களில் உடற்பயிற்சி ஆசிரியரும் அங்கு வருகை தந்து மாணவர்களை மகிழ்ச்சிப்படுத்துதல், அவர்களுக்குப் பயிற்சி அளித்தல் ஆகிய விடயங்களில் தீவிர கவனம் செலுத்துவார்.

● பந்தியைத் துணையாகக் கொண்டு விடை எழுதுக.

(i) குகனுக்கும் அவனது நண்பர்களுக்கும் மாலை நேர வகுப்புக்கள் நடைபெறாத நாட்கள் எவை?

.....

(ii) மாலை நேர வகுப்புக்கள் இல்லாத நாட்களில் குகனும் அவனது நண்பர்களும் எங்கு செல்வார்கள்?

.....

(iii) குகனும் நண்பர்களும் விளையாடும் விளையாட்டுக்களில் ஒன்றை எழுதுக

.....

(iv) காந்தனும் மோகனும் நூறு மீற்றர் ஓட்டப் பயிற்சியில் ஈடுபடுவதன் நோக்கம் யாது?

.....

.....

(v) பந்தியில் இடம்பெறும் அடைமொழிச் சொல்லை எழுதுக

.....

(vi) மைதானத்திற்கு வரும் உடற்பயிற்சி ஆசிரியர் கவனம் செலுத்தும் விடயங்கள் எவை?

.....

2. பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் எழுவாய் பயனிலைத் தொடர்பு சரியாயின் ✓ எனவும் பிழையாயின் × எனவும் எதிரே உள்ள அடைப்புக் குறிக்குள் அடையாளம் இடுக.

(i) தாத்தா அனுப்பி இருந்த விளையாட்டுப் பொருள்கள் இன்று கிடைத்தது (.....)

(ii) பாடசாலை விடுமுறையின் போது சிறுவர்கள் தமது கிராமத்திற்குச் சென்றார்கள் (.....)

(iii) வண்ணத்துப் பூச்சி இலையின் கீழ் முட்டைகளை இட்டது (.....)

(iv) காலிக் கோட்டை பார்ப்பதற்கு கம்பீரமாக இருந்தன (.....)

3. சரியாக எழுத்துக் கூட்டப்பட்ட சொல்லைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக

(i) (1) தொழிலாளி (2) தொளிலாளி (3) தொழிலாழி

(ii) (1) நட்ச்சத்திரம் (2) நட்சத்திரம் (3) நச்சத்திரம்

(iii) (1) இணையம் (2) இணயம் (3) இனையம்

www.lkedu.lk

சுட்டெண்: .....

4. உயர்திணை ஒருமை இறந்தகால வினைச் சொல்லைத் தெரிவு செய்து அதன் கீழே கோடிடுக

(1) உண்டது (2) ஓடினார்கள் (3) புறப்பட்டான்

5. பின்வரும் வாக்கியத்தை நிகழ்கால பன்மை வாக்கியமாக மாற்றி எழுதுக.

உழவன் வயலில் வேலை செய்தான்

.....

6. பின்வரும் பேச்சு வழக்குச் சொற்களை எழுத்து வழக்குச் சொற்களாக மாற்றி எழுதுக.

(i) கைமாறு :..... (ii) கோடாலி :.....

7. பின்வரும் சொற்களுக்குரிய எதிர்க்கருத்துச் சொல்லைப் புள்ளிக் கோட்டில் எழுதுக

(i) ஒற்றுமை :..... (ii) காடு :.....

8. கீழே தரப்பட்ட வாக்கியத்தில் எழுத்துப் பிழையுள்ள சொற்கள் இரண்டு உள்ளன. அந்தச் சொற்கள் இரண்டினையும் தெரிவு செய்து பிழை திருத்தி அவை இரண்டை மாத்திரம் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக

நாங்கல் வேலைகளை விறைவாகச் செய்து முடித்தோம்

(i) ..... (ii) .....

9. ஒவ்வொரு வாக்கியத்தினதும் கருத்துக்குப் பொருத்தமான பழமொழியைப் பின்வரும் அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

(அழுதபிள்ளை பால் குடிக்கும் / வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம் / ஆறின கஞ்சி பழங்கஞ்சி / அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு / கடனில்லாக் கஞ்சி கால்வயிறு போதும்)

(i) மானத்துடன் வாழ வேண்டும்

.....

(ii) முயற்சி செய்தால் வெற்றி கிட்டும்

.....

10. பின்வரும் ஒவ்வொரு படத்திற்கும் பொருத்தமான சொல்லை தரப்பட்டுள்ள கட்டத்தினுள் **ஆங்கில** எழுத்துக்களில் எழுதுக

(i)



(ii)



11. ஒவ்வோர் ஆங்கிலச் சொல்லுக்கும் உரிய **தமிழ்ச் சொல்லை** எழுதுக

(i) Island:..... (ii) Circle :.....

www.ikeduLlk

12. கீழே தரப்பட்டுள்ள சொற்களைச் சரியாக ஒழுங்குபடுத்தி, கருத்துள்ள வாக்கியங்களாக்கி எழுதுக.

(i) my / This / ruler / is :.....

(ii) a / He / bicycle / riding / is :.....

13. 'லேனா (ලේනා)' என்ற சிங்களச் சொல்லுக்குரிய தமிழ்ச் சொல்லை எழுதுக.

.....

14. பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் சொல்லப்படும் விதத்தைத் தமிழில் எழுதுக.


கால் கழுவுங்கள் : .....

15. பின்வரும் எண்ணை எழுத்தில் எழுதுக.

36060 :.....

16. ஒன்றினிடம் 2, பத்தினிடம் 6, நூறினிடம் 1, ஆயிரத்தினிடம் 0, பத்தாயிரத்தினிடம் 5 ஆகவுள்ள எண்ணை இலக்கங்களில் எழுதுக.

: .....

17. 

இந்த எண்சட்டத்தின் நான்கு கோல்களிலும் மணிகளை இட்டு இதில் காட்டக்கூடிய **மிகப் பெரிய எண்ணை** வகை குறிப்பதற்குத் தேவையான மணிகளின் எண்ணிக்கை யாது?

: .....

18. பின்வரும் எண்களை ஏறுவரிசையில் எழுதுக.


1017 , 11070, 10107, 1107 .....

19.

928	431
4427	7516
5017	5936

அடைப்பினுள் உள்ள எண்களில் 4 இனால் மீதமின்றி வகுபடக்கூடிய எண்களைத் தெரிவு செய்து எழுதுக

: .....

20. 


கோடுகள் A , B ஆகிய இரண்டினதும் மொத்த நீளம் யாது? : .....*cm*

21. எண்கோலத்தை இனங்கண்டு வெற்றிடங்களை நிரப்புக

115, 124, ..., 142, 151, ...

22. கவிதா 360 கொய்யாப்பழங்களையும் மீனா 420 கொய்யாப்பழங்களையும் நாதன் 575 கொய்யாப் பழங்களையும் வாங்கினர். கவிதாவும் மீனாவும் வாங்கிய கொய்யாப் பழங்களின் மொத்த எண்ணிக்கைக்குச் சமனாவதற்கு நாதன் மேலும் எத்தனை கொய்யாப்பழங்களை வாங்க வேண்டும்?

: .....

23. 

(i) உருவில் தரப்பட்டுள்ள திண்மப் பொருளின் பெயர் யாது?

: .....

(ii) இத்திண்மத்திற்கு எத்தனை வளைந்த விளிம்புகள் உள்ளன?

: .....

www.ikeau.lk

24. ஒரு விழா மண்டபத்தில் 94 கதிரைகள் இருந்தன.

(i) அக்கதிரைகளை ஒரு மேசைக்கு நான்கு கதிரைகள் வீதம் எத்தனை மேசைகளுக்கு வைக்கலாம்?

: .....

(ii) மீதியாகும் கதிரைகளின் எண்ணிக்கை யாது?

: .....

25. 5km 50m ஐ மீற்றரில் எழுதுக

: .....*m*

26. நேரம் பிற்பகல் இரண்டு மணி இருபது நிமிடம் என்பது இருபத்து நான்கு மணித்தியாலக் கடிகாரத்தில் காட்டப்படும் விதத்தைப் பின்வரும் அடைப்பினுள் எழுதுக.

..... : .....


27. ஒரு பாத்திரத்தில் 3*l* 250*ml* பாலும் இன்னொரு பாத்திரத்தில் 5*l* 900*ml* பாலும் இருந்தன. இரண்டு பாத்திரங்களிலும் இருந்த பாலின் மொத்த அளவு யாது?

: .....*l*.....*ml*

28. ஒரு கிலோகிராம் 200 ரூபாய் வீதம் 2kg 500g கோதுமை மாவையும் 350 ரூபாய்க்கு 1kg அரிசியையும் வாங்கும் போது செலுத்தப்பட வேண்டிய மொத்தப் பணம் எவ்வளவு?

ரூபாய் ..... சதம் .....

29.



ஒரு மணித்தியாலத்தில் வீதி ஒன்றில் சென்ற வாகனங்கள் பற்றிய தகவல்கள் அருகே உள்ள வரைபில் காட்டப்பட்டுள்ளன.

(i) வீதியில் சமமான எண்ணிக்கையில் சென்ற இரு வாகனங்களும் எவை?

: ....., ...

(ii) வீதியில் சென்ற பேருந்துகளின் எண்ணிக்கை வீதியில் சென்ற கார்களின் எண்ணிக்கையைக் காட்டிலும் எவ்வளவு அதிகமானது?

: .....

● 30 தொடக்கம் 59 வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையைத் தரப்பட்டுள்ள விடைகளில் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

30. பின்வருவனவற்றில் இலங்கைக்கே உரித்தான நகருயிர்கள் எவை?

(1) தவளை, முதலை (2) கபரகொய்யன், பல்லி (3) கொம்பு ஓணான், நீர்ப்பாம்பு

31. மகாவலிகங்கை கடலுடன் கலக்குமிடத்துக்கு அண்மையில் உள்ள நகரம் எது?

(1) அம்பலாந்தோட்டை (2) மாத்தறை (3) திருகோணமலை

32. சிவப்பு, கறுப்பு ஆகிய நிறங்களைக் கலந்து பெறப்படும் நிறம் யாது?

(1) ஊதா (2) கபிலம் (3) சாம்பல்

33. ஒரே வடிவ இலைகள் **அல்லாதவை**

(1) கத்தாப்பும் புளியும் (2) பலாவும் கத்தாப்பும் (3) கரும்பும் மூங்கிலும்

www.ikeou.lk

34. காற்றில் பறந்து பரவிப் பெருகுவதற்கு வாய்ப்பாக, சிறகுகள் போன்ற கட்டமைப்பைக் கொண்டுள்ள வித்துக்கள்

(1) எண்ணெய், வேங்கை (2) மகோகனி, இலவம்பஞ்சு (3) குறிஞ்சா, பருத்தி


35. கறையான்கள் பற்றிய பின்வரும் எக்கூற்று சரியானது?

(1) தீங்கான பிராணிகளை அழித்து மனிதனுக்கு உதவுபவை
(2) நிலத்தில் ஒன்று சேரும் பல்வேறு கழிவுப் பொருள்களைச் சிறு துண்டுகளாக்கி அவை உக்குவதற்குத் துணை புரிபவை
(3) பாதுகாப்பிற்காக நிறத்தை மாற்றிக் கொள்ளும் திறன் கொண்டவை

36. தாவர உணவுகளை மாத்திரம் உண்பவை

(1) கோழி, தும்பி (2) முயல், மான் (3) நரி, நாய்

37. கேத்தலின் மூக்கின் ஊடாக வெளிவரும் நீராவி படுமாறு உலோகத் தகடு ஒன்று பிடிக்கப்பட்டுள்ளதைப் படம் காட்டுகிறது. இங்கு உலோகத்தகடு



(1) நீராவியைக் குளிரச் செய்கிறது
(2) நீராவியின் திசையை மாற்றுகிறது
(3) நீரை நீராவியாக மாற்றுகிறது

38. பயிர்ச் செய்கையில் வேப்பம் வித்துச் சாறு பயன்படுத்தப்படுவது

(1) பசளைக்காக
(2) பூச்சிகளைக் கட்டுப்படுத்துவதற்காக
(3) தாவரங்கள் பூப்பதைத் தூண்டுவதற்காக

39. முற்காலத்தில் சேனைப் பயிர்ச் செய்கையில் ஈடுபட்ட எமது முன்னோர், விதைப்புச் செய்து வெளியேறும் தினத்தில் செய்தது

(1) வார்கட்டல்
(2) தீபக் குடிசை அமைத்தல்
(3) காவற்பாடல்கள் பாடுதல்

40. வீட்டுத் தோட்டத்தில் பயன்படுத்தப்படும் உபகரணங்கள் **மாத்திரம்** அடங்கியுள்ள விடை

(1) சீவுளி, மண்வெட்டி (2) முள்ளு, சுத்தியல் (3) முள்ளு, மண்வெட்டி

41. உணவு உண்ட பின்னர் நாம் செய்ய வேண்டிய நற்பழக்கமாக **அமையாதது**

(1) பயன்படுத்திய பாத்திரத்தை கழுவிச் சுத்தம் செய்தல்
(2) கையையும் வாயையும் நன்றாகச் சுத்தம் செய்தல்
(3) உணவு எஞ்சியிருப்பின் அதனை பாத்திரத்தில் அப்படியே வைத்துவிடுதல்

42. தேசிய கீதம் இசைக்கப்படும்போது நாம் கைகளை வைத்திருக்க வேண்டிய சரியான முறை எது?

(1) கைகளை மார்பில் வைத்துக் கட்டிக் கொள்ளுதல்
(2) கைகளை பின்னால் கட்டிக் கொள்ளுதல்
(3) கைவிரல்களை மடித்து, பெருவிரல் நிலத்தை நோக்கி அமையுமாறு உடலுடன் கைகளை ஒட்டி இருக்குமாறு வைத்துக் கொள்ளுதல்

43. உடலை நோயில் இருந்து பாதுகாக்கும் போசணை மிகுந்த உணவு

(1) சோறு (2) நிலக்கடலை (3) வெண்டி

www.lkedu.lk

44. "டெபிற்" அட்டை எனப்படுவது

(1) ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தும் அட்டை
(2) நேரடியாகப் பணத்தைப் பயன்படுத்தாமல் கொடுக்கல் வாங்கல்களுக்காகப் பயன்படுத்தும் அட்டை
(3) கைத்தொலைபேசிப் பயன்பாட்டாளர்களுக்கு வழங்கப்படும் தரப்படுத்தல் அட்டை

45. எம்பக்க தேவாலய செதுக்கல் வேலைப்பாடுகளைக் காட்டும் உரு எது?


(1)


(2)


(3)

46. தண்டுத் துண்டங்களை நாட்டிக் கன்றுகளைப் பெறக்கூடிய தாவரம் எது?

(1) கங்குன் (2) தோடை (3) தக்காளி

47. மின்காந்தம் பயன்படுத்தப்படும் ஓர் உபகரணம்

(1) மின்மணி (2) ஊசித்துளைக்கமரா (3) மின்சூள்

48. சமைப்பதற்காகக் கொண்டுவரப்பட்ட கீரை, மரக்கறி என்பவற்றை வெட்டுவதற்கு முன்னர் அவற்றைக் கழுவ வேண்டியது

(1) குளிரேற்றிய நீரில் (2) உப்பு நீரில் (3) வெந்நீரில்

49. 


மாணவர் ஒருவரால் தயார் செய்யப்பட்ட உடுக்கோல அட்டை அருகே தரப்பட்டுள்ளது. அவ்வட்டையில் காணப்படும் உடுக்கோலம்

(1) தேள்
(2) பெருங்கரடி
33. இலங்கைக்கே உரித்தான முலையூட்டிகள்

(1) புலத்ஹுய்யா, மள்புளுட்டா
(2) கொம்பு ஓணான், நீர்ப்பாம்பு
(3) சுண்டெலி, மரநாய்

34. பயிர்ச்செய்கைக்குச் சாதகமான ஒரு பிராணியும் பாதகமான ஒரு பிராணியும் முறையே எவை?

(1) ஆந்தை, வண்டு (2) தேனீ, குளவி (3) சிற்றுண்ணி, மண்புழு

35. சூழல் நேய பூச்சிக் கட்டுப்பாட்டுத் திரவத்தைத் தயாரிக்கப்பயன்படும் வித்து வகை

(1) ஆமணக்கு வித்து (2) பப்பாசி வித்து (3) வேப்பம் வித்து


36. நாகமரப் பூங்கா, இளஞ்சிவப்புப் படிகக் கல் மலை என்பன காணப்படும் மாவட்டம்

(1) மாத்தறை (2) அநுராதபுரம் (3) பொலன்னறுவை

37. அசுத்த நீரைப் பருகுவதால் ஏற்படத்தக்க நோய் **அல்லாதது**

(1) கண்டமாலை (2) செங்கண்மாரி (3) ஈரலழற்சி (மஞ்சட்காய்ச்சல்)

38. பலகையில் துளையிடப் பொருத்தமான உபகரணம் எது?


(1)


(2)


(3)

39. எது பாதுகாப்பான நடவடிக்கையாகும்?

(1) இடி மின்னல் வேளைகளில் கைத்தொலைபேசியின் இயக்கத்தை நிறுத்தி வைத்தல்.
(2) ஈரமான கைகளுடன் மின்சாரத்துடன் தொடுக்கப்பட்ட உபகரணங்களைத் தொடுதல்.
(3) இடி மின்னல் வேளைகளில் திறந்த வெளிகளில் நிற்றல்.

40. எரிகாயத்துக்கு உள்ளான ஒருவருக்கு முதலுதவி அளிக்கும் போது செய்யக்கூடாதது

(1) எரியுண்ட இடத்தில் வழிந்து செல்லுமாறு தண்ணீரை ஊற்றுதல்
(2) கொஞ்சம் கொஞ்சமாக நீர் அருந்தக் கொடுத்தல்
(3) எரிவின் மேல் களிம்புகளைப் பூசுதல்

41. இலங்கையில், தலா மூன்று மாவட்டங்களைக் கொண்டுள்ள மாகாணங்கள் எத்தனை உள்ளன?

(1) 4 (2) 5 (3) 6

42. இலங்கையின் புகையிரதப் பாதைகள் இணையும் சந்தி **அல்லாதது** எது?

(1) பொல்கஹவெல (2) மாஹோ (3) இரத்தினபுரி


43. வீதி நிறச்சமிக்ஞைக் கம்பத்தில் "பயணிக்க ஆயத்தமாகுக" என்பதைக் குறிக்க ஒளிரும் சமிக்ஞையின் நிறம் எது?

(1) சிவப்பு (2) பச்சை (3) மஞ்சள்

44. தேசப்படங்களில் நதிகள் பெருந்தெருக்கள் ஆகியன காட்டப்படும் நிறங்கள் முறையே எவை?

(1) நீலம், சிவப்பு (2) நீலம், கறுப்பு (3) சிவப்பு, கறுப்பு

www.ikedu.lk

45. 

மின்குமிழை ஒளிரச் செய்வதற்கு கம்பித்துண்டு A வைக்கப்பட வேண்டிய இடத்தைக் குறிக்கும் எழுத்து எது?

(1) B (2) C (3) D

46. சுவரை நிலைக்குத்தாகக் கட்டியெழுப்ப மேசன் பயன்படுத்துவது

(1) வாள் (2) மணியாசு (3) தூக்குக்குண்டு

47. தேசியக் கொடி ஏற்றப்படும் போது நாம் நிற்க வேண்டிய முறையாக **அமையாதது** எது?

(1) தலையைத் தாழ்த்தி நிலத்தைப் பார்த்தபடி நிற்றல்
(2) உடலை நேராக நிமிர்த்தி வைத்தபடி நிற்றல்
(3) கணுக்கால்கள் இரண்டும் அருகில் இருக்குமாறு கால்களைச் சற்று விலக்கி 'V' போல வைத்தபடி நிற்றல்

48. ஊனுண்ணும் விலங்குகள் காட்டில் வாழும் தாவரம் உண்ணும் விலங்குகளை உணவாகக் கொள்வதால் நடைபெறுவது யாது?

(1) தாவரம் உண்ணும் விலங்குகள் அனைத்தும் அழிந்துவிடும்
(2) காட்டில் பிராணிகளின் தொகை கட்டுப்படுத்தப்பட்டுச் சூழல் சமநிலை பேணப்படும்
(3) தாவரம் உண்ணும் விலங்குகள் கொல்லப்படுவதால் காட்டு மரங்கள் அளவுக்கதிகமாகப் பெருகும்

49. விவசாயிகள் நீர்ப் பிசாசைப் பயன்படுத்துவது

(1) பயிர்களுக்கு நீர் பாய்ச்ச
(2) பிராணிகளிடம் இருந்து பயிர்களைப் பாதுகாக்க
(3) வயலில் இருந்து மேலதிக நீரை வெளியேற்ற

50. தண்டுகோதிப் புழுவினால் தாக்கப்படும் தாவரம்

(1) நெல் (2) குரக்கன் (3) புடோல்

51. காலி நகருக்கு அண்மையில் கடலுடன் கலக்கும் நதி

(1) நில்வளகங்கை (2) ஜின்கங்கை (3) களுகங்கை

52. இலங்கை முதன் முதலில் ஒலிம்பிக் பதக்கம் ஒன்றை வென்றது

(1) 1948 இல் (2) 1952 இல் (3) 2000 இல்

53. சரியான மெய்ந்நிலையில் நடக்கும் ஒருவரின் பாதச் சுவடுகளைக் காட்டும் படம் எது?


(1)


(2)


(3)

54. பின்வரும் எந்த இரு மாகாணங்கள் அருகருகே உள்ளன?


(1) வட மாகாணம், தென் மாகாணம்
(2) ஊவா மாகாணம், மத்திய மாகாணம்
(3) வடமத்திய மாகாணம், சப்ரகமுவ மாகாணம்

55. இலங்கை மக்களிடையே தேசாபிமானத்தை வளர்க்கும் வகையில் கவிதை நூல்களை வெளியிட்டு நாட்டுப்பற்றுடன் நாட்டுக்குப் பணியாற்றியவர்


(1) குமாரதுங்க முனிதாஸ (2) ஆனந்த ராஜ கருணா (3) வண.எஸ். மஹிந்த தேரர்

www.kcdl.lk

56.







சூரிய ஒளியில் பல்வேறு நிறங்கள் உள்ளனவா எனப் பார்ப்பதற்குத் தரம் - 3 மாணவர்கள் மேலே உள்ள ஒழுங்கமைப்பைப் பயன்படுத்தி பரிசோதனை ஒன்றை மேற்கொண்டனர். இதில் நீர்ப்பாத்திரத்தில் வைக்கப்பட்டுள்ள பொருள் A யாது?

(1) தடித்த வெள்ளைக் கடதாசி (2) பிளாஸ்ரிக் கீலம் (3) தளவாடி

57. பின்வருவனவற்றில் இலங்கை மின்சார சபையைக் குறிக்கும் உருவக் குறியீடு எது?



(1)



(2)



(3)

58. நுளம்புகள் பெருக வாய்ப்பான இடமாக அமைவது

(1) நீர் வடிந்தோடும் வடிகான்
(2) நீருடன் உப்புக் கட்டிகள் இடப்பட்ட பூச்சாடி
(3) நீர் தேங்கி நிற்கும் தகரப் பேணி

59. பின்வரும் செயற்பாடுகளில் சூழலுக்குத் தீங்கு **விளைவிக்காதது** எது?

(1) வயலுக்குக் கிருமி நாசினி தெளித்தல்
(2) பயன்படுத்தப்பட்ட பொலிதீன்களைத் தீயிலிட்டு எரித்தல்
(3) உக்கும் குப்பை கூளங்களை கூட்டெருவுக்குப் பயன்படுத்தல்

60. காலையில் பாடசாலைக்குள் நுழைந்த தீபன், நுழைவாயிலருகே ஒரு தொகைப் பணத்துடன் கூடிய சிறிய பையொன்றைக் கண்டெடுத்தான். நீங்கள்தான் தீபன் எனக் கருதி அதன் பின் நீங்கள் செய்தவை பற்றி மூன்று வாக்கியங்கள் எழுதுக.
(ஒவ்வொரு வாக்கியமும் **ஐந்து** சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும். எழுவாய் பயனிலைத் தொடர்பு, எழுத்துக் கூட்டல் என்பவையும் சரியாக இருத்தல் வேண்டும்)

1. .....
.....
.....

2 .....
.....
.....

3 .....
.....
.....

***

www.ikeduk

සියලුම හිමිකම් ඇවිරිණි]
(முழுப்பதிப்புரிமையுடையது)
All rights Reserved]

ஆசிரியர்: எம்.ஏ. அபுதாஹிர்

Q First கல்வி நிறுவகம்
முன்னோடி வினாப்பத்திரம் - 7

5

மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சைக்கான முன்னோடி வினாப்பத்திரம் 2024

வினாத்தாள் I

ஒரு மணித்தியாலம்

சுட்டெண்: .....

பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள் :

* உமது **சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.
* **முன்றாம் பக்கத்தில்** குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக.
* இவ்வினாத்தாளில் **40** வினாக்கள் உள்ளன. எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை **இவ்வினாத்தாளிலேயே எழுதுக.**
* ஒவ்வொரு வினாவிற்கும் **மூன்று** விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றிடையே ஒவ்வொரு வினாவிற்கும் உரிய **சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**
* செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

பக்க இலக்கம்	பெற்ற புள்ளிகள்
2	
3	
4	
5	
6	
7	
8	
மொத்தம் இலக்கத்தில்	
மொத்தம் எழுத்தில்	

	முதலெழுத்தொப்பமும் குறியீட்டு எண்ணும்
முதலாவது பரீட்சகர் புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப் பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன்.	V/I/T
இரண்டாவது பரீட்சகர் முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	V/I/T
மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பிட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	V/I/T/EMF
பிரதான பரீட்சகர் மேற்பார்வை செய்தேன் இறுதிப்புள்ளிகள் சரியாகும்	V/I/T/CH

[பக். 2 ஐப் பார்க்க

www.lkedu.lk

LEARN EASY

- KNOWLEDGE IS POWER -

www.learneasy.lk || www.lkedu.lk


76667-4945

தரம் 05

தமிழ்	வியாழன் 7.00 - 8.00 pm சனி 6.15 - 7.15 pm
கணிதம்	சனி மற்றும் ஞாயிறு 6.00 - 7.00 am
சுற்றாடல்	செவ்வாய் மற்றும் வெள்ளி 7.00 - 8.00 pm
ஆங்கிலம்	புதன் 6.00 - 7.00 pm
சிங்களம்	வியாழன் 6.15 -7.15 pm
நுண்ணறிவு	சனி மற்றும் ஞாயிறு 7.15 - 8.15 pm

76667-4945

1. பின்வரும் உருவை அவதானிக்க. அதனைப் பற்றிய சரியான கூற்றைத் தெரிவு செய்க.




(1) பேருந்து நிறுத்துமிடத்துக்கு அருகே பேருந்து ஒன்று நிறுத்தப்பட்டுள்ளது.

(2) பேருந்து நிறுத்துமிடத்தில் ஐந்து பயணிகள் உள்ளனர்.

(3) பேருந்து நிறுத்துமிடத்தில் சிறுவன் உட்பட மூன்று ஆண்களும் ஒரு பெண்ணும் உள்ளனர்.

2. பின்வரும் உருவில்  ஐயும்  ஐயும் குறிப்பதற்குப் பொருத்தமான இடங்கள் முறையே




(1) (E), (B) ஆகும்

(2) (C), (D) ஆகும்


(3) (A), (E) ஆகும்

3. முதலில் உள்ள உருவில் இருக்கும் அம்புக்குறியின் தலை (↗) எதிர்த்திசையில் இருக்குமாறு அரைச்சுற்றுத் திருப்பப்படும்போது காணப்படத்தக்க விதத்தைக் காட்டும் உருவைத் தெரிவு செய்க.



(1) (2) (3)

4. பின்வருவனவற்றுள் எந்த மூன்று வடிவங்களை இணைப்பதனால் சதுரம் ஒன்றைப் பெற முடியும்?



A B C D E

(1) B, D, E (2) A, D, C (3) B, C, E

5. 50 ரூபாய் 10 ரூபாய் ஆகிய நாணயத் தாள்களில் ஏதேனும் ஒரு வகையை அல்லது இரண்டு வகையையும் பயன்படுத்தி 100 ரூபாயைச் செலுத்துவதற்கு வேறுபட்ட எத்தனை விதங்கள் உள்ளன?

(1) 2 (2) 3 (3) 4


www.ikedu.lk

சுட்டெண்:.....

6. சங்கரி, சுந்தரி ஆகிய இருவரிடமும் உள்ள பணத்தின் கூட்டுத்தொகை சுந்தரியிடம் உள்ள பணத்தின் இருமடங்கைக் காட்டிலும் 5 ரூபாயினால் குறைந்ததாகும். சங்கரியிடமும் சுந்தரியிடமும் உள்ள மொத்தப் பணம் 145 ரூபாய் எனின், சங்கரியிடம் உள்ள பணம் எவ்வளவு?


(1) 70 ரூபாய் (2) 75 ரூபாய் (3) 80 ரூபாய்

7. பின்வரும் உருவில் உள்ள வெற்றிடத்துக்குப் பொருத்தமான உருப்பகுதி எது?





(1)



(2)



(3)

8. இலக்கங்களுக்குப் பதிலாக P, Q, R, S ஆகிய எழுத்துக்களைப் பயன்படுத்தி உருவாக்கப் பட்ட ஆறு எண்களில் பெரிய எண், சிறிய எண் பற்றிய தகவல்கள் பின்வருமாறு குறியீடுகள் மூலம் காட்டப்பட்டுள்ளன.

சிறிய எண் → பெரிய எண்
பெரிய எண் ← சிறிய எண்

RP ← QS
PR → SQ
PQ ← RS

மேலுள்ள தகவல்களுக்கேற்ப P, Q, R, S ஆகியவற்றைக் கொண்டு உருவாக்கக் கூடிய மிகச் சிறிய எண்ணைக் காட்டும் விடையைத் தெரிவு செய்க.

(1) QRPS (2) QSPR (3) SPRQ

● எண் ஒன்றில் இலக்கங்கள் அமைந்துள்ள இடங்களை, பின்வரும் குறியீடுகள் குறிக்கின்றன. அதனை விளங்கி 9, 10 ஆகிய வினாக்களுக்கு விடை தருக.



ஆயிரத்தினிடம



நூறினிடம



பத்தினிடம



ஒன்றினிடம்

9. 6475 எனும் எண்ணில் உள்ள இலக்கம் 4 உம் இலக்கம் 5 உம் இடம்பெற வேண்டிய குறியீடுகள் முறையே எவை?




(1)



(2)



(3)

10.  என்பதால் குறிப்பிடப்படும் எண்ணிலிருந்து  என்பதால் குறிப்பிடப்படும் எண்ணைக் கழிக்கும் போது கிடைக்கும் விடை யாது?

(1) 7572 (2) 3906 (3) 4206

11. ஒரு குழுவில் உள்ள 12 பேர்களிடையே, ஆண் தரப்பில் ஒவ்வொருவருடைய கையிலும் 3 கொடிகளும் பெண் தரப்பில் ஒவ்வொருவருடைய கையிலும் 4 கொடிகளும் இருந்தன. கொடிகளின் மொத்த எண்ணிக்கை 41 எனின், குழுவில் உள்ள பெண்களின் எண்ணிக்கை யாது?

(1) 4 (2) 5 (3) 7

www.ikedu.lk

12. ● தற்போது தாயின் வயது மகளின் வயதின் ஏழு மடங்காகும்.
● இன்னும் நான்கு வருடங்களில் தாயின் வயது மகளின் வயதின் ஐந்து மடங்காகும்

இதற்கேற்ப தற்போது தாயினதும் மகளினதும் வயதுகளின் கூட்டுத்தொகை எத்தனை வருடங்கள் ஆகும்?

(1) 16 (2) 48 (3) 64

13. தனது கைக்கடிகாரத்தில் நேரம் 1.30 ஆக இருந்த போது கடிகாரத்தின் நிமிட முள்ளானது மேற்குத் திசையை நோக்கி இருந்ததை சீலன் அவதானித்தான். அவ்வாறெனின், அவனது கடிகாரத்தின் மணிமுள் அப்போது எத்திசையை நோக்கி இருந்திருக்கும்?

(1) தென்கிழக்கு (2) தென்மேற்கு (3) வடமேற்கு


14. 6, 7, 2, 4 ஆகிய இலக்கங்களில் மூன்று இலக்கங்களை மாத்திரம் பயன்படுத்தி ஆக்கப்பட்ட பின்வரும் எண்களில் எந்த எண், அதில் உள்ள இலக்கங்கள் ஒவ்வொன்றினாலும் மீதமின்றி வகுபட **முடியாதது?**

(1) 672 (2) 624 (3) 426


15. மயூரன் 1991 ஆம் வருடம் மே மாதத்தில் பிறந்தான். 2021 இல் மயூரன் அவனது பிறந்த தினத்தைக் கொண்டாடியபோது மயூரனின் வயது அவனது தம்பியின் வயதின் இருமடங்காக இருந்தது. அவ்வாறெனின், மயூரனின் தம்பி பிறந்தது எந்த வருடத்திலாகும்?

(1) 2005 (2) 2006 (3) 2007

16. இவ்வுருவை மடித்து ஒரு பெட்டியைச் செய்யும் போது அது தோற்றும் விதம் யாது?




(1)


(2)


(3)

17. பின்வரும் உரு நிரையில் உள்ள கோலத்திற்கு ஏற்ப இரு வெற்றிடங்களிலும் இருக்க வேண்டிய உருக்கள் முறையே எவை?

..... ✳ ✳ + ✳ ✳ ..... ✳ ✳ + ✳

✳ ✳ (1) + ✳ (2) ✳ + (3)

18. மஞ்சள், நீலம், பச்சை, ஊதா என்ற ஒழுங்கில் நிறமின்குமிழ்கள் மாறி மாறிப் பொருத்தப் பட்டிருந்த தோரணம் ஒன்றில் இருந்த நீல நிற மின்குமிழ்களின் எண்ணிக்கை 10 ஆகும். தோரணத்தில் பொருத்தப்பட்டிருந்த மின்குமிழ்களின் மொத்த எண்ணிக்கை பின்வருவனவற்றில் எது?


(1) 38 (2) 37 (3) 34

19. 3, 5 ஆகிய இரு எண்களினாலும் மீதியின்றி வகுபடக் கூடியனவும் 50 இற்கும் 100 இற்கும் இடையே உள்ளனவுமான எண்களின் எண்ணிக்கை யாது?


(1) 2 (2) 3 (3) 4


www.lkedu.lk


20. கீழே உள்ள அடைப்பினுள் இருக்கும் உருக்களைப் பயன்படுத்தி ஆக்கப்பட்டுள்ள உருக் கோலத்தின் வெற்றிடங்களில் இடம் பெறவேண்டிய உருக்களைத் தெரிவு செய்க.






(1) 

(2) 

(3) 

21. 

இந்த உருவில் உள்ள சதுரங்களின் மொத்த எண்ணிக்கை யாது?

(1) 14 (2) 18 (3) 20


22. பெட்டி ஒன்றில் நான்கு வகை நிறங்களையுடைய 48 பந்துகள் இருந்தன. ஒவ்வொரு நிறத்திலும் உள்ள பந்துகளின் எண்ணிக்கை சமமானதாகும். பந்துகளைப் பார்க்காமல் வெவ்வேறு நிறங்களையுடைய இரண்டு பந்துகளைத் தவறாமல் பெறுவதற்குப் பெட்டியில் இருந்து வெளியே எடுக்கப்படவேண்டிய பந்துகளின் குறைந்தபட்ச எண்ணிக்கை யாது?

(1) 3 (2) 10 (3) 13

23. எண்சட்டம் ஒன்றில் ஒரு குறித்த எண்ணை வகை குறித்துக் காட்டுவதற்கு கோல்களில் இடக்கூடிய 21 எண்ணிகள் பயன்படுத்தப்பட்டன. ஒன்றுகளின் இடத்தில் உள்ள கோலில் இடப்பட்ட எண்ணிகளின் எண்ணிக்கையானது பத்துகளின் இடத்திலுள்ள கோலிலும் நூறுகளின் இடத்திலுள்ள கோலிலும் இடப்பட்ட எண்ணிகளின் கூட்டுத்தொகைக்குச் சமனானதாகும். அதன்படி, எண் சட்டத்தில் வகைகுறித்துக் காட்டப்பட்ட எண், பின்வருவனவற்றுள் எது?

(1) 4377 (2) 2325 (3) 5718

24. படத்தில் அம்புக்குறியினால் காட்டப்படும் வழியின் ஊடாக உள்ளே நுழையும் ஒரு நபர், நுழைந்த அதே வழியால் திரும்பி வராமல் பாதையில் உள்ள தடைகளைத் தவிர்த்து சரியான பாதையில் பயணித்து மற்றொரு வழியால் வெளியேறுகிறார். குறித்த நபர் பயணிக்கும் போது தனது வலப்பக்கத்திற்கும் இடப்பக்கத்திற்கும் திரும்பிய தடவைகள் முறையே எவை?




(1) 6 உம் 5 உம்

(2) 8 உம் 7 உம்

(3) 6 உம் 7 உம்

25. இந்த உருவில் நிறந்தீட்டப்பட்டுள்ளள பகுதி முழு உருவின் என்ன பின்னம்?




(1) $\frac{4}{10}$ (2) $\frac{5}{10}$ (3) $\frac{6}{10}$

www.ikeou.lk

● கீழே தரப்பட்டுள்ள தகவல்களை வாசித்து 26, 27 ஆகிய வினாக்களுக்கு விடை தருக

உருவில் கத்தரி, தக்காளி, மிளகாய் ஆகியன பயிரிடப்பட்ட ஒரு மரக்கறித் தோட்டத்தின் A, B, C, D, E, F என்னும் ஆறு பகுதிகள் காட்டப்பட்டுள்ளன. இப்பகுதிகளில் காய்கறிப் பயிர்கள் பின்வருமாறு பயிரிடப்பட்டிருக்கின்றன.



※ மிளகாய், மூன்று பகுதிகளில் பயிரிடப்பட்டிருப்பினும் அவை எந்தவொரு பொது எல்லையின் இருபக்கங்களிலும் இருக்கும் இருபகுதிகளிலும் இராதவாறு உள்ளன.

※ கத்தரி ஒரே ஒரு பகுதியில் மட்டும் பயிரிடப்பட்டிருக்கும் அதேவேளை அதன் பொது எல்லை ஏனைய ஐந்து பகுதிகளுடனும் தொடர்புறுகிறது.

※ தக்காளி இரு பகுதிகளில் மாத்திரம் பயிரிடப்பட்டுள்ளது.

26. தோட்டத்தின் பகுதி C இல் பயிரிடப்பட்டிருக்கும் மரக்கறிப்பயிர் எது?

(1) மிளகாய் (2) தக்காளி (3) கத்தரி

27. தக்காளி பயிரிடப்பட்டிருக்கும் தோட்டத்தின் பகுதிகள் இரண்டும் எவை?

(1) B உம் E உம் (2) B உம் D உம் (3) A உம் F உம்

28. 31 நாட்களைக் கொண்ட ஒரு மாதத்தின் முதலாம் நாள் திங்கட்கிழமையாகும். அம்மாதத்தில் வரும் திங்கள் முதல் ஞாயிறு வரையுள்ள எந்த நாளுக்குரிய திகதிகளின் மொத்தம் ஏனைய ஒவ்வொரு நாளினதும் திகதிகளுக்குரிய மொத்தத்தைப் பார்க்கிலும் அதிகமாக இருக்கும்?

(1) செவ்வாய்க்கிழமைக்குரிய திகதிகளின் மொத்தம்
(2) புதன்கிழமைக்குரிய திகதிகளின் மொத்தம்
(3) வியாழக்கிழமைக்குரிய திகதிகளின் மொத்தம்

29. குடும்பத்தில் இளைய பிள்ளையான குமாரி ஒரு பெண் பிள்ளையாவாள். அவளின், சகோதரிகளின் எண்ணிக்கை சகோதரர்களின் எண்ணிக்கையைக் காட்டிலும் ஒன்று அதிகமானதாகும். குமாரியின் குடும்பத்தில் உள்ள ஆண் பிள்ளைகளினதும் பெண் பிள்ளைகளினதும் மொத்த எண்ணிக்கை நான்கு எனின், குமாரியின் அண்ணனுக்கு எத்தனை சகோதரிகள் உள்ளனர்?

(1) ஒன்று (2) இரண்டு (3) மூன்று

30. அருந்ததி A என்னும் இடத்திலிருந்து 5m கிழக்கு நோக்கி நடந்து சென்று, பின் தனது இடப்பக்கமாகத் திரும்பி மீண்டும் 3m நடந்து சென்று நிற்கிறாள். பின்னர் தான் நிற்கும் இடத்திலிருந்து, மேற்குத் திசையினதும் தெற்குத் திசையினதும் சரிமத்தியினூடாக அமையும் தென்மேற்குத் திசையினூடாக நடந்து சென்று ஆரம்பத்தில் தான் நடந்து வந்த பாதையின் ஓர் இடத்தை அடைகிறாள். அருந்ததி தான் புறப்பட்ட இடமான A இனைச் சென்றடைய வேண்டுமாயின், அவள் மேலும் நடந்து செல்ல வேண்டி இருப்பது,

(1) மேற்கு நோக்கி 2m தூரத்திற்கு
(2) கிழக்கு நோக்கி 3m தூரத்திற்கு
(3) மேற்கு நோக்கி 3m தூரத்திற்கு

www.ikeou.lk

31. கீதா அமுதாவின் அம்மா. சாந்தனின் அம்மா அமுதா. ரேவதி சாந்தனின் தங்கை. ரேவதி கீதாவுக்கு என்ன உறவு?

(1) அம்மா (2) மகள் (3) பேர்த்தி


32. நேற்றுப் பாடசாலையில் தரப்பட்ட பயிற்சிகளைப் பூர்த்தி செய்து வராததனால் இன்று ஆசிரியை முரளியைக் குறைகூறினார். முரளி இவ்வாறு பயிற்சிகளைப் பூர்த்தி செய்யாததற்கு உரிய நான்கு காரணங்கள் பின்வருமாறு

A. முரளிக்கு அப்பயிற்சிகள் பற்றிய ஞாபகம் இல்லாதிருந்தமை
B. முரளி நேற்றுப் பாடசாலைக்கு வராதிருந்தமை
C. முரளிக்கு அப்பயிற்சிகள் கஷ்டமாக இருந்தமை
D. முரளி இரவு வரை தொலைக்காட்சி பார்த்தமை

இக்காரணங்களிடையே உண்மையில் முரளிக்கு அப்பயிற்சிகளைப் பூர்த்தி செய்ய முடியாமைக்கான காரணங்கள் இடம்பெறும் விடை எது?

(1) ABD (2) ACD (3) ABC

33. உருக்கள் அமைந்துள்ள கோலத்திற்கேற்ப வெற்றுக் கட்டம் (1) இல் இடம்பெற வேண்டிய உருவைத் தெரிவு செய்க



(1) (2) (3)

34.  என்னும் குறியீட்டைப் பயன்படுத்தி சிறகு என்னும் சொல்லும்

 என்னும் குறியீட்டைப் பயன்படுத்தி குருவி என்னும் சொல்லும் எழுதப்பட்டிருந்தன

இதற்கு ஏற்ப, குச்சி என்னும் சொல்லைக் குறியீடுகளால் காட்டும் சரியான முறை எது?

(1) ○△✳ (2) ○☒✳ (3) □○★

35. பழம் நழுவிப் பாலில் விழுந்தாற் போல என்பதன் கருத்தை விளக்கும் கூற்று எது?

(1) செய்ய வேண்டிய செயலைத் தவறவிடல்
(2) காலந்தவறிச் செயற்படுதல்
(3) செய்ய வேண்டிய செயல் சுலபமாக நிறைவேறுதல்

36. எண்கள் எழுதப்பட்டுள்ள கோலத்திற்கேற்ப வெற்றுக் கட்டத்திற்குப் பொருத்தமான விடை எது?




15	18	15	15	15	12	15	9	.....


(1) 15 (2) 12 (3) 6

[பக். 8 ஐப் பார்க்க


www.ikedu.lk

37. வெற்றிட்த்துக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.


 இற்கு  எனின்,  இற்கு ..... ஆகும்



(1)


(2)



(3)

38. பின்வரும் திண்ம உருக்கள் ஒவ்வொன்றிலும் உள்ள விளிம்புகளின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்லும் ஒழுங்கில் அத்திண்ம உருக்கள் வரிசைப்படுத்தப்பட்டுள்ள விடையைத் தெரிவு செய்க.


A


B


C


D

(1) ACDB
(2) CADB
(3) CDAB

39. 
P Q

மேலே உள்ள கோட்டில் P இற்கும் Q இற்கும் இடையே புள்ளி A அமைந்துள்ளது எனின், பின்வருவனவற்றில் எதனை உண்மையானது என உறுதியாகக் கூற முடியும்?

(1) கோடு PA இன் நீளம், கோடு AQ இன் நீளத்திற்குச் சமனாகும்

(2) கோடு PA இன் நீளம், கோடு PQ இன் நீளத்திலிருந்து கோடு AQ இன் நீளத்தைக் கழித்துவரும் நீளத்திற்குச் சமனாகும்

(3) கோடு AQ இன் நீளம், கோடு PA இன் நீளத்தையும் கோடு PQ இன் நீளத்தையும் கூட்டி வரும் நீளத்திற்குச் சமனாகும்.

40. கீதா, சீதா, ராதா ஆகிய பிள்ளைகள் மூவருக்கும் மல்லிகை, ரோசா, தாமரை ஆகிய மலர்களின் மீதும் பலா, மாதுளை, தோடை ஆகிய பழங்களின் மீதும் உள்ள விருப்பம் பற்றித் தரப்பட்டுள்ள பின்வரும் தகவல்களை வாசிக்க

- ராதா பலாப்பழத்தையும் மல்லிகை மலரையும் விரும்பவில்லை
- கீதா, ரோசா மலரை விரும்பிய போதும் மாதுளம் பழத்தை விரும்பவில்லை
- மல்லிகை மலரை விரும்பும் பிள்ளை தோடம்பழத்தை விரும்புகிறது
- ஒரு பிள்ளைக்கு விருப்பமான மலரையோ பழத்தையோ ஏனைய இரு பிள்ளைகளும் விரும்புவதில்லை.

இதன்படி, தாமரை மலரை விரும்பும் பிள்ளைக்கு விருப்பமான பழமாக இருப்பது எது?

(1) தோடை (2) மாதுளை (3) பலா

***

www.ikedu.lk

இவ்வெளியீட்டை ஆசிரியர்]
(முழுப்பதிப்புரிமையுடையது)
All rights Reserved]

ஆசிரியர்: எம்.ஏ. அபுதாஹிர்

Q First கல்வி நிறுவகம்

முன்னோடி வினாப்பத்திரம் 7

5

மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சைக்கான
முன்னோடி வினாப்பத்திரம் 2024

வினாத்தாள் II

1 மணித்தியாலம் 15 நிமிடம்

சுட்டெண்: .....

பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்

* உமது **சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.
* **மூன்றாம் பக்கத்தில்** குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக.
* இவ்வினாத்தாளில் **60** வினாக்கள் உள்ளன. சில வினாக்களில் உபபகுதிகளும் உள்ளன.
* எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை **இவ்வினாத்தாளிலேயே** எழுதுக.
* விடைகள் எழுதப்பட வேண்டிய வினாக்களின் விடைகளைப் **புள்ளிக் கோட்டின் மீது** எழுதுக.
* விடையின் கீழே கோடிடுமாறு கேட்கப்பட்டிருக்கும்போது சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழே கோடிடுக.
* செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

பக்க இலக்கம்	பெற்ற புள்ளிகள்
2	
3	
4	
5	
6	
7	
8	
மொத்தம் இலக்கத்தில்	
மொத்தம் எழுத்தில்	

	முதலெழுத்தொப்பமும் குறியீட்டு எண்ணும்
முதலாவது பரீட்சகர் புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப் பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன்.	V/I/T
இரண்டாவது பரீட்சகர் முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	V/I/T
மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பிட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	V/I/T/EMF
பிரதான பரீட்சகர் மேற்பார்வை செய்தேன் இறுதிப்புள்ளிகள் சரியாகும்	V/I/T/CH

www.ikeda.lk

[பக். 2 ஐப் பார்க்க

1. பின்வரும் பந்தியை வாசியுங்கள்

இன்று காலை குமாரும் கோபியும் அவர்களின் வகுப்புத்தோழன் சுந்தரத்தின் வீட்டுக்குச் சென்றனர். சுந்தரத்தின் வீடு, ஊரின் வயற்பிரதேசத்திற்கு அப்பால் உள்ள குளத்தை அண்டிய பகுதியில் அமைந்திருந்தது. வீட்டுக்கு வந்த சுந்தரத்தின் நண்பர்களுக்கு சுந்தரத்தின் அம்மா தேநீர் பரிமாறினாள். தேநீரைப் பருகிய பின், குமாரும் கோபியும் சுந்தரத்துடன் அவனது வீட்டுத் தோட்டத்தைச் சுற்றிப் பார்த்தனர். அங்கு சுந்தரத்தின் அப்பா தோட்டத்திற்கு நீருற்றிக் கொண்டிருந்தார். குமாரையும் கோபியையும் கண்ட அவர், அவர்கள் இருவரையும் பார்த்து "உங்கள் இருவருக்கும் மாம்பழங்கள் பறித்து வைத்திருக்கிறேன். இன்று மாலையில் வீடு செல்லும் போது அவற்றை எடுத்துச் செல்லுங்கள்" என்று கூறினார். தோட்டத்தைப் பார்த்து முடிந்ததும் சுந்தரத்தின் அண்ணன் மோகன் சுந்தரத்தையும் அவனின் நண்பர்களையும் நீராடுவதற்காகக் குளக்கரைக்கு அழைத்துச் சென்றான்.

● பந்தியைத் துணையாகக் கொண்டு விடை எழுதுக.

(i) சுந்தரத்தின் வீடு எங்கு அமைந்திருந்தது?

.....

.....

(ii) வீட்டுக்கு வந்த சுந்தரத்தின் நண்பர்களுக்கு சுந்தரத்தின் அம்மா யாது செய்தாள்?

.....

(iii) குமாரும் கோபியும் சுந்தரத்துடன் எதனைச் சுற்றிப் பார்த்தனர்?

.....

(iv) குமாருக்கும் கோபிக்கும் வழங்குவதற்காக சுந்தரத்தின் அப்பா பறித்து வைத்திருப்பவை யாவை?

.....

(v) சுந்தரத்தின் வீட்டுக்கு வந்த குமாரும் கோபியும் தங்கள் வீடுகளுக்குச் செல்வது எப்போது?

.....

(vi) சுந்தரத்தின் அண்ணன் மோகன் சுந்தரத்தையும் அவனின் நண்பர்களையும் எங்கு அழைத்துச் சென்றான் என்பதையும் அது எதற்காக என்பதையும் எழுதுக

.....

2. பின்வரும் வாக்கியத்தில் எழுத்துப் பிழையுள்ள சொற்கள் இரண்டு உள்ளன. அச்சொற்களைத் தெரிவு செய்து பிழைதிருத்தி அவற்றை **மாத்திரம்** புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

இன்று தகவல் பரிமாற்ற முறைகள் துறிதமாக முண்னேற்றம் அடைந்து வருகின்றன.

(i) ..... (ii) .....

3. சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியமாக எழுதுக

உள்ள / மீண்டும் / ஆறு / பெய்யும் / குளங்களில் / நீர் / ஆவியாகி / மழையாகப்

.....

.....

4. வெற்றிடத்துக்குப் பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.

(i) 'பறவைகள்' என்பது ..... (பலர்பால் / பலவின்பால்) சொல்லாகும்.

(ii) யானைக்குக் களிறு என்பது போல குரங்குக்கு .....(கடுவன் / மந்தி) ஆகும்.

www.ikeduk

சுட்டெண்: .....

5. (i) பின்வரும் பழமொழியைப் பூர்த்தி செய்யப் பொருத்தமான சொல்லைக் கீறிட்ட இடத்தில் எழுதுக

தவளையும் தன் ..... கெடும்

(ii) பின்வரும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான பழமொழியைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.

போகப் போக எந்த விடயமும் சலிப்புத் தரும்

.....

6. கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் இருக்கும் வெற்றிடத்துக்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

(i) பாதையின் இரு மருங்கிலும் நிழல் ..... (மரம் / மரங்கள்) நடப்பட்டிருந்தன.

(ii) தீமை செய்பவர்கள் ..... (துன்பப்பட்டனர் / துன்பப்படுவர்).

(iii) சீகிரியாவில் பல சுவரோவியங்கள் ..... (காணப்படுகின்றது / காணப்படுகின்றன)

(iv) கள்வர் கூட்டம் தப்பி ..... (ஓடியது / ஓடினர்)

7. பின்வரும் வாக்கியங்களை எழுத்து மொழியாக்கி இறந்தகால வினைச் சொல் சேர்த்து மீண்டும் எழுதுக.

(i) விவசாயிகள் நெலத்தை உழுகின்றனர்.

.....

(ii) அவர்கள் நினச்சது எல்லாம் நடக்கும்.

.....

8. பின்வரும் ஒவ்வொரு தகவலும் அறிவித்தலா? அறிவுறுத்தலா? கட்டளையா? என்பதை அவற்றுக்கு முன்னால் உள்ள புள்ளிக் கோட்டில் எழுதுக.

(i) எல்லோரும் இந்தப் பக்கம் வாருங்கள்: .....

(ii) ஒவ்வொரு சரியான விடைக்கும் ஒரு புள்ளி வீதம் வழங்குக : .....

9. பொருத்தமான நிறுத்தக் குறிகளை இடுக.

(i) அதர்மம் ஒழிக ஒழிக

(ii) பசுமை இல்லம் என்னும் தொலைக்காட்சி நிகழ்ச்சி விவசாயிகளுக்காக ஒளிபரப்பப்படுகிறது

10. பின்வரும் ஒவ்வொரு படத்திற்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை தரப்பட்டுள்ள கட்டத்தினுள் **ஆங்கில** எழுத்துக்களில் எழுதுக.

(i)



(ii)



11. கீழே தரப்பட்டுள்ள சொற்களைச் சரியாக ஒழுங்குபடுத்தி, கருத்துள்ள வாக்கியங்களாக்கி எழுதுக.

(i) is / best / He / friend / my : .....

(ii) like / food / I / spicy : .....

www.ikedu.lk

12. ஒவ்வொரு ஆங்கிலச் சொல்லுக்கும் உரிய **தமிழ்ச் சொல்லை** எழுதுக

(i) Seed :..... (ii) Language :.....

13. 'பதாதர (இඳුඳු)' என்ற சொல்லுக்குரிய **தமிழ்ச்** சொல்லை எழுதுக.

.....

14. பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் சொல்லப்படும் விதத்தைத் **தமிழில்** எழுதுக.

அம்மா இருக்கிறார் : .....

15. 84099 எனும் எண்ணுக்கு

(i) முந்திய எண்ணை இலக்கங்களில் எழுதுக :.....

(ii) பிந்திய எண்ணை எழுத்துக்களில் எழுதுக

.....

16. 36418 எனும் எண்ணில் இலக்கம் 6 இனால் வகைகுறிக்கப்படும் பெறுமானம் யாது?

: .....

17. கீழே தரப்பட்ட மூன்று எண்களையும் இறங்கு வரிசையில் எழுதுக.

86327, 86519, 86137 : ....., ..., ...

18. A,B,C ஆகிய மூன்று களஞ்சியங்களில் வைக்கப்பட்டிருந்த மாச்சாக்குகளின் எண்ணிக்கைகள் முறையே 1715, 2016, 840 ஆகும்.

(i) மூன்று களஞ்சியங்களிலும் வைக்கப்பட்டிருந்த மாச்சாக்குகளின் மொத்த எண்ணிக்கை யாது?

: .....

(ii) களஞ்சியம் C ஐ விட, களஞ்சியம் A இல் கூடுதலாக எத்தனை மாச்சாக்குகள் வைக்கப்பட்டிருந்தன?

: .....

19. பின்வரும் எண்கோலத்தின் வெற்றிடங்களில் வரவேண்டிய எண்களை எழுதுக.

....., 83, 91, 99, ..., 115

20. பாபு ஒரு குவியலில் இருந்த கொய்யாப்பழங்களில் $\frac{3}{4}$ ஐ வாங்கினான். அவன் வாங்கிய கொய்யாப்பழங்கள் 27 எனின், ஆரம்பத்தில் குவியலில் இருந்த கொய்யாப்பழங்களின் எண்ணிக்கை யாது?


: .....

21. ஒரு பெட்டியில் 163 பென்சில்கள் உண்டு. இவ்வாறான மூன்று பெட்டிகளில் உள்ள பென்சில்களின் மொத்த எண்ணிக்கை யாது?

: .....

22. தரப்பட்டுள்ள நேரத்தை கடிகார முகத்தில் குறித்துக் காட்டுக

ஒன்பது கடந்து ஐம்பத்தைந்து நிமிடங்கள்



23. 681 விசுக்கோத்துக்களை ஒரு பிள்ளைக்கு மூன்று விசுக்கோத்துக்கள் வீதம் எத்தனை பிள்ளைகளுக்குக் கொடுக்கலாம்?

: .....

www.ikedu.lk

24. ஒரு மின் இணைப்புத் தொழிலாளி முதலாம் நாள் 6km 700m தூரத்துக்கும் இரண்டாம் நாள் 3km 400m தூரத்துக்கும் மின் கம்பியை இணைத்தார். இரண்டு நாட்களின் இறுதியில் மின்கம்பி இணைக்கப்பட்டிருந்த மொத்தத் தூரம் யாது?

: .....km.....m

25. ஒரு பயிற்சிக் கொப்பியின் விலை 35 ரூபாயும் ஒரு பேனாவின் விலை 16 ரூபாயும் ஆகும். 3 பயிற்சிக் கொப்பிகளையும் 5 பேனாக்களையும் வாங்கத் தேவையான மொத்தப் பணம் எவ்வளவு?


ரூபாய் .....

26. ஒரு வாளியில் 7 லீற்றர் 450 மில்லிலீற்றர் நீர் இடப்படலாம். இப்போது அதில் 3 லீற்றர் 950 மில்லிலீற்றர் நீர் உள்ளது. அதனை நிரப்புவதற்கு இன்னும் எவ்வளவு நீர் தேவை?

: .....*l*.....*ml*


27. 4kg 50g நிலக்கடலை மூன்று சமமான பைக்கற்றுக்களில் அடைக்கப்பட்டது எனின், ஒரு பைக்கற்றின் நிறை கிலோகிராம், கிராம் ஆகியவற்றில் எவ்வளவு?

: .....kg.....g

28. 

இந்த அட்டைத்தாளைப் புள்ளிக்கோடுகள் வழியே மடித்து நிறந்தீட்டப்பட்ட சிறிய கீலங்களைப் பொருத்தமானவாறு மடித்த ஒட்டுவதன் மூலம் திண்மப் பொருள் ஒன்று தயாரிக்கப்பட்டது. தயாரிக்கப்பட்ட திண்மப் பொருளின் பெயர் யாது?

: .....

29. 

பழக்கடை ஒன்றில் ஒரு மணித்தியாலத்தில் விற்கப்பட்ட பழங்களின் எண்ணிக்கையை வரைபு காட்டுகிறது

ஆகக் கூடியளவு விற்கப்பட்ட பழங்களின் எண்ணிக்கைக்கும் மிகக் குறைந்த அளவு விற்கப்பட்ட பழங்களின் எண்ணிக்கைக்கும் இடையிலான வித்தியாசம் யாது?

: .....

● 30 தொடக்கம் 59 வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையைத் தரப்பட்டுள்ள விடைகளில் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

30. உடல், உளச் சுகத்திற்கான மனதை ஒரு நிலைப்படுத்தும் செயற்பாட்டில் ஈடுபடும் ஒரு பிள்ளை, அச்செயற்பாட்டின் மனவுறுதி (திடசித்தம்) எனப்படும் மூன்றாம் படிமுறையில் எண்ணிப் பார்ப்பதற்குப் பரிந்துரைக்கப்படுவது எது?

(1) எனது உள்ளத்தின் அமைதியை எனது நண்பர்களும் உணரட்டும்
(2) நான் பெற்ற அமைதியை எனது நண்பர்களுக்கும் என்னால் பகிர்ந்தளிக்க முடியும்
(3) நான் பெற்ற உள அமைதியை எனது நண்பர்களுக்கும் பகிர்கிறேன்.

31. இலங்கையின் தேசிய இலச்சினையில் சூரியனுக்கும் சந்திரனுக்கும் இடையில் காணப்படுவது

(1) தர்மச் சக்கரம் (2) வாளேந்திய சிங்கம் (3) நிறைகுடம்

32. 'குருதிச்சோகை' நோய் ஏற்படுவதற்கு, பின்வரும் எப்போசாக்கு வகையின் குறைபாடு காரணமாக அமைகிறது?

(1) விற்றமின் C (2) விற்றமின் D (3) இரும்பு

www.ikeedu.lk

33. இலங்கையின் தேசிய அடையாளங்களில் இரண்டு

(1) நீலோற்பலமும் நாகமரமும்
(2) நிறைகுடமும் தர்மச்சக்கரமும்
(3) தாமரை மலரும் தேயிலையும்

34. பிரித்தானியர் இலங்கையை முழுமையாகக் கைப்பற்றிய ஆண்டு எது?

(1) 1948 (2) 1815 (3) 1796

35. உவர் சூழலில் வளரும் தாவரங்களில் அதிகம் அடங்கியுள்ள போசணைக் கூறு எது?

(1) அயடீன் (2) இரும்பு (3) கல்சியம்

36. இலங்கையின் உயர்ந்த நிலத்தையும் தாழ்ந்த நிலத்தையும் காட்டும் படத்தில் உயர்ந்த நிலம் தீட்டப்பட்டிருக்கும் நிறம்

(1) கபிலம் (2) நீலம் (3) பச்சை

37. வித்தையும் அது பரம்பலடையும் விதத்தையும் சரியாகக் காட்டும் விடை

(1) துத்திரி - காற்றின் மூலம்
(2) கத்தாப்பு - நீரின் மூலம்
(3) மகோகனி - விலங்குகளின் மூலம்

38. பயிர்களை விலங்குகளில் இருந்து பாதுகாக்கப் பயன்படுத்தப்படும் உபகரணம் **அல்லாதது**

(1) நீர்வெருளி (2) காற்றுக்கிலிக்கி (3) நீர்ச்சுழலி

39. மண்சரிவு ஏற்படக் காரணமாக அமையும் மனிதச் செயற்பாடு

(1) தாழ் நிலங்களை நிரப்புதல்
(2) மலைப் பகுதிகளில் மண்ணை வெட்டி அப்புறப்படுத்தல்
(3) சதுப்பு நிலங்களில் கட்டுமான வேலைகளை மேற்கொள்ளல்

40. சின்னமுத்து, கொப்பளிப்பான் ஆகிய நோய்கள் பரவுவது

(1) நோய்க்காவி நுளம்பு தீண்டுவதன் மூலம்
(2) நோய்க்காவிகளான ஆட்கள் மூலம்
(3) அசுத்தமான உணவு, நீர் என்பவற்றை உட்கொள்வதன் மூலம்

41. அலுமினியப் பாத்திரத்தில் உணவைத் தயாரிக்கும் போது சேர்க்கக் **கூடாதது**

(1) எலுமிச்சம் புளி (2) இஞ்சி (3) கறிவேப்பிலை

42. அடிப்படைத் தேவைகளுக்குள் அடங்குபவை

(1) தொலைபேசியும் தொலைக்காட்சியும்
(2) வானொலியும் கணினியும்
(3) உணவும் உடையும்

43. மிண்டி வேர்களைக் கொண்டுள்ள தாவரங்களுக்கு உதாரணமாக அமைவன

(1) ஆல், மருதை (2) தாழை, றம்பை (3) தென்னை, கிண்ணை

44. பல்லி, தவளை ஆகியன இரையைப் பிடிப்பதற்குப் பயன்படுத்துவது

(1) கூரிய பற்களை (2) நீண்ட நாக்கை (3) கால் நகங்களை

45. ஆபத்தை உணரும் போது பாதுகாப்பிற்காக, தமது ஓட்டினுள் ஒளிந்து கொள்ளும் பிராணிகள் எவை?

(1) கரப்பான், சிலந்தி (2) பாம்பு, மண்புழு (3) நத்தை, ஆமை

www.ikedu.lk

46. வேர்களினால் தாவரங்களுக்குக் கிடைக்கும் பயன் **அல்லாதது**

(1) நிலத்திலிருந்து நீரையும் பசளையையும் உறிஞ்சுதல்
(2) தாவரத்தை நிலத்துடன் பிணைத்து வைத்திருத்தல்
(3) உணவைத் தயாரித்தல்

47. களனிப் பள்ளத்தாக்குப் புகையிரதப் பாதையானது

(1) கொழும்பிலிருந்து அவிசாவளைக்கான பாதையாகும்.
(2) கொழும்பிலிருந்து மாத்தறைக்கான பாதையாகும்.
(3) கொழும்பிலிருந்து மட்டக்களப்பிற்கான பாதையாகும்.


48. விற்றமின்களும் கனியுப்புக்களும் அடங்கிய உணவுகள்

(1) உடலை நோயிலிருந்து பாதுகாப்பவை ஆகும்
(2) உடல் வளர்ச்சிக்கு உதவுபவை ஆகும்
(3) உடலுக்கு சக்தி தருபவை ஆகும்

49. நிலக்கரி, காற்று ஆகியன பயன்படுத்தப்படும் சந்தர்ப்பங்கள் முறையே எவை?

(1) அனல் மின்னை உற்பத்தி செய்தல், ஈரத்துணிகளை உலர்த்துதல்
(2) போரணைகளில் பாணை வெதுப்புதல், ஞாயிற்றுக் கலங்கள் மூலம் மின் உற்பத்தி செய்தல்
(3) ஈரத்துணிகளை உலர்த்துதல், நெல் தூற்றுதல்

50. பிராணிகள் சிலவற்றின் புற இயல்புகளுக்கு ஏற்ப அவை வகைப்படுத்தப்பட்டுள்ள முறை கீழே தரப்பட்டுள்ளது.



இங்கு A, Q ஆகிய எழுத்துக்கள் குறிக்கும் பிராணிகள் முறையே எவை?

(1) மாடு, மைனா (2) மைனா, மண்புழு (3) மைனா, மீன்

51. 

இந்தத் தாவரத்தின் பெயர் யாது?

(1) நன்னாரி
(2) இருவேரி
(3) சாத்தாவாரி

52. மன்னன் பண்டுகாபயன் கட்டுவித்த குளம்

(1) பசவக் குளம் (2) திஸாவாவி (3) கலாவாவி

53. நிறமூட்டப்பட்ட தேங்காய்த் துருவலைப் பயன்படுத்தி வீட்டு முற்றத்தில் கோலம் இடும் அலங்காரச் செயற்பாட்டினைச் செய்பவர்கள்

(1) சிங்களவர்கள் (2) தமிழர்கள் (3) முஸ்லிம்கள்

54. நீண்டகாலம் பேணுவதற்காக நமது மூதாதையர்கள் மணலினுள் புதைத்து வைத்த பொருள் பின்வருவனவற்றுள் எது?

(1) பலாக்காய் (2) மாங்காய் (3) எலுமிச்சம்பழம்

www.ikedu.lk

55. கண்களின் ஊடாக மாத்திரம் தகவல்களைப் பெறக்கூடிய தொடர்பாடல் ஊடகங்கள்

(1) பத்திரிகை, சுவரொட்டி
(2) வானொலி, தொலைக்காட்சி
(3) தொலைபேசி, தொலைக்காட்சி

56. சிதைவுறாத் கண்ணாடிக் குவளை ஒன்றில் உள்ள நீரினுள் பனிக்கட்டிகள் சிலவற்றை இட்ட பொழுது கண்ணாடிக் குவளையின் வெளிப்புறத்தில் நீர்த்துளிகள் காணப்பட்டன. இதற்கான காரணமாக அமைவது

(1) கண்ணாடிக் குவளையினுள் இருந்த நீர், குவளையினூடாகக் கசிந்து குவளையின் வெளிப்புறத்தே படிந்தமை.
(2) கண்ணாடிக் குவளையைச் சுற்றியுள்ள வளியில் உள்ள நீராவி குளிர்ச்சியடைந்து கண்ணாடிக் குவளையின் வெளிப்புறத்தில் படிந்தமை.
(3) பனிக்கட்டிகளை குவளையினுள் இட்டபொழுது நீர் ஆவியாகி குவளையின் வெளிப்புறத்தில் படிந்தமை.

57. கீழே காட்டப்பட்டது போல் சட்டக்காந்தங்கள் இரண்டு அருகருகே வைக்கப்பட்டால் நிகழ்வது யாது?



(1) காந்தங்கள் இரண்டும் ஒன்றை ஒன்று கவரும்
(2) காந்தங்கள் இரண்டும் ஒன்றை ஒன்று தள்ளும்
(3) எதுவும் நிகழாது

58. உயரத்திலிருந்து விழுந்து விலா எலும்பு உடைந்த ஒருவருக்கு உடனடியாகச் செய்ய வேண்டியது

(1) நபரை அசைக்காமல் சமதள இடத்தில் வைத்திருத்தல்
(2) உடலில் விபத்துக்கு உட்பட்ட இடத்தைத் தூய நீரால் கழுவுதல்
(3) உடலில் விபத்துக்கு உட்பட்ட இடத்தைத் துணியால் கட்டுதல்

59. இலங்கையில் உள்ள 25 மாவட்டங்களில் பரப்பளவில் மிகச் சிறியது எது?

(1) கம்பஹா மாவட்டம் (2) கொழும்பு மாவட்டம் (3) அம்பாறை மாவட்டம்

60. பாடசாலையில் இடம்பெற்ற மரம்நடும் விழாவின் இறுதியில், மரங்களை நடுவதன் அவசியம் என்பது குறித்து அதிபர் உரை நிகழ்த்தினார். அதிபரின் அவ்வுரையில் கூறப்பட்டவை பற்றி மூன்று வாக்கியங்கள் எழுதுக.
(ஒவ்வொரு வாக்கியமும் **ஐந்து** சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும். எழுவாய் பயனிலைத் தொடர்பு, எழுத்துக் கூட்டல் என்பவையும் சரியாக இருத்தல் வேண்டும்)

1. .....
.....
.....

2 .....
.....
.....

3 .....
.....
.....

***

www.ikeduu.lk

සියලුම හිමිකම් ඇවිරිණි]
(முழுப்பதிப்புரிமையுடையது)
All rights Reserved]

ஆசிரியர்: எம்.ஏ. அபுதாஹிர்

Q First கல்வி நிறுவகம்

முன்னோடி வினாப்பத்திரம் 8 **5**

மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சைக்கான முன்னோடி வினாப்பத்திரம் 2024

வினாத்தாள் I

ஒரு மணித்தியாலம்

சுட்டெண்: .....

பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள் :

* உமது **சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.
* **முன்றாம் பக்கத்தில்** குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக.
* இவ்வினாத்தாளில் **40** வினாக்கள் உள்ளன. எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை **இவ்வினாத்தாளிலேயே எழுதுக.**
* ஒவ்வொரு வினாவிற்கும் **மூன்று** விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றிடையே ஒவ்வொரு வினாவிற்கும் **உரிய சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**
* செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

பக்க இலக்கம்	பெற்ற புள்ளிகள்
2	
3	
4	
5	
6	
7	
8	
மொத்தம் இலக்கத்தில்	
மொத்தம் எழுத்தில்	

	முதலெழுத்தொப்பமும் குறியீட்டு எண்ணும்
முதலாவது பரீட்சகர் புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப் பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன்.	V/I/T
இரண்டாவது பரீட்சகர் முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	V/I/T
மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பிட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	V/I/T/EMF
பிரதான பரீட்சகர் மேற்பார்வை செய்தேன் இறுதிப்புள்ளிகள் சரியாகும்	V/I/T/CH

[பக். 2 ஐப் பார்க்க

www.lkedu.lk

LEARN EASY

- KNOWLEDGE IS POWER -

www.learneasy.lk || www.lkedu.lk

76667-4945

கல்வியாண்டு – 2025

1200

Grade 4

திங்கள்	வினாத்தாள் வகுப்பு 7.15 pm - 8.15 pm (பகுதி 1)
புதன்	வினாத்தாள் வகுப்பு 7.15 pm - 8.15 pm (பகுதி 2)
சனி	நுண்ணறிவு 6.15 pm - 7.15 pm
ஞாயிறு	நுண்ணறிவு 6.15 pm - 7.15 pm


புலமைப்பரிசில் வகுப்பு

GRADE 5

1500

திங்கள்	வினாத்தாள் வகுப்பு 7.15 pm (பகுதி 1)
புதன்	வினாத்தாள் வகுப்பு 7.15 pm (பகுதி 2)
சனி	நுண்ணறிவு 7.15 pm - 8.15 pm
ஞாயிறு	நுண்ணறிவு 7.15 pm - 8.15 pm


1. தரப்பட்ட உருக்களிடையே மிக நெருங்கிய தொடர்பை உடைய இரண்டு உருக்களைக் குறிக்கும் எழுத்துக்கள் உள்ள விடை எது?



A B C D E F

(1) A உம் C உம் (2) D உம் E உம் (3) B உம் F உம்


2. கீழே தரப்பட்டுள்ள பொருள்கள் மூன்று கூட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அக்கூட்டங்களைச் சரியாகக் காட்டும் விடை யாது?



A B C D E F


(1) A,B - D,F - C,E (2) A,F - D,E - B,C (3) A,E - B,C - D,F

3. அடைப்புக்குள் உருக்கள் இடப்பட்டுள்ள கோலத்திற்கேற்ப வெற்று அடைப்புகளில் இடம்பெறப் பொருத்தமான உருக்களைக் கொண்ட விடை யாது?




(1) (2) (3)

4. அடைப்புக்குள் குற்றுக்களும் வட்டங்களும் இடப்பட்டிருக்கும் ஒழுங்கிற்கு ஏற்ப, வெறுமையாய் உள்ள அடைப்புகளை நிரப்பும் போது நிறந்தீட்டப்பட்டுள்ள அடைப்பினுள் இடப் பொருத்தமான குற்றினையும் வட்டத்தினையும் கொண்ட விடை யாது?



(1) (2) (3)

5. தரப்பட்டுள்ள A தொடக்கம் E வரையான ஐந்து உருக்களில் ஒன்று ஏனைய நான்கிலும் இருந்து வேறுபடுகிறது. வேறுபடும் உருவைத் தெரிவு செய்க.




A B C D E

(1) A (2) C (3) E


www.ikeotuk

சுட்டெண்:.....

6. வெற்றிடத்திற்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.




எனின்,



..... ஆகும்.



(1)



(2)



(3)

● 7, 8 ஆகிய வினாக்களில் தரப்பட்டுள்ள உருக்கோலத்திற்கு ஏற்ப அடுத்து வரவேண்டிய உருவைத் தெரிவு செய்க.


7.









.....


(1)


(2)


(3)


8.







.....


(1)


(2)


(3)

9. ஆசிரியரின் கட்டளைப்படி நாம் வரிசை ஒன்றில் நின்றிருந்தோம். வரிசையில், எனது இடப்புறத்தில் 5 பேரும் வலப்புறத்தில் 10 பேரும் நின்றனர். இப்போது ஆசிரியர் வரிசையின் நடுவில் வந்து நிற்கிறார். வரிசையில் ஆசிரியர் நிற்பது,

(1) எனது வலப்புறத்திலிருந்து இரண்டாவதாக
(2) எனது இடப்புறத்திலிருந்து மூன்றாவதாக
(3) எனது வலப்புறத்திலிருந்து மூன்றாவதாக

10. அடைப்புகளில் எண்கள் எழுதப்பட்டுள்ள விதத்துக்கு ஏற்ப அடைப்புக்கள் A,B ஆகியவற்றுக்குப் பொருந்தும் எண்கள் முறையே எவை?

2547	⟷	99
6114	⟷	A
7651	⟷	811
B	⟷	118


(1) 210, 5743
(2) 102, 3718
(3) 75, 5617

www.ikedu.lk


11. வனிதா, அனிதா, சரிதா ஆகிய பெயர்கள் மூன்றும் குறியீட்டு முறையில் எழுதப்பட்டுள்ள விடை எது?

(1) PCL, VCL, MPL (2) JCD, HCD, NCD (3) STO, KCO, EGU

12. இந்த உருவில் உள்ள முக்கோணிகளின் எண்ணிக்கை யாது?




(1) 7 (2) 9 (3) 11

13. 

அருகே தரப்பட்டுள்ள வடிவத்தை ஒரு சதுரமாக மாற்றுவதற்கு அதனுடன் சேர்க்கப்பட வேண்டிய அடைப்புகளின் குறைந்தபட்ச எண்ணிக்கை யாது?


(1) 8 (2) 12 (3) 17

14. மடித்து, பின்னர் விரிக்கப்பட்ட ஒரு கடதாசி கீழே உள்ள உருவில் காட்டப்பட்டுள்ளது. கடதாசி மடிக்கப்பட்டதால் உருவான மடிப்புக் கோடுகளின் தடயங்கள், உருவில் முறிந்த கோடுகளால் காட்டப்பட்டுள்ளன. இவ்வாறு மடிப்புக் கோடுகளைப் பெறுவதற்குக் கடதாசி மடிக்கப்படவேண்டிய தடவைகளின் குறைந்தபட்ச எண்ணிக்கை யாது?



(1) 3 (2) 4 (3) 5

15. சீலா, மாலா, கீதா ஆகிய மூவரும் அம்புக்குறி காட்டும் திசையைப் பார்த்தவாறு நடப்பதற்காக நிற்கும் தொடக்கப் புள்ளிகள் உருவில் காட்டப்பட்டுள்ளன. மூவரும் தாம் நிற்கும் இடத்திலிருந்து முன்னோக்கியும் பின்னோக்கியும் பின்வரும் ஒழுங்கில் நடந்து சென்றனர்




- ❊ முதலில் சீலா 10m முன்னோக்கி நடந்து சென்று பின்னர் 3m பின்னோக்கி நடந்து வந்து ஓர் இடத்தில் நிற்கிறாள்.
- ❊ அடுத்து மாலா சீலாவைக் கடந்து 5m முன்னோக்கிச் சென்று பின்னர் 7m பின்னோக்கி நடந்து வந்து ஓர் இடத்தில் நிற்கிறாள்.
- ❊ இறுதியாக கீதா மாலாவைக் கடந்து 5m முன்னோக்கிச் சென்று பின்னர் 3m பின்னோக்கி நடந்து வந்து ஓர் இடத்தில் நிற்கிறாள்

இதன்படி கீழே தரப்பட்ட கூற்றுக்களில் எது சரியானது?

(1) இப்போது, சீலாவும் கீதாவும் தொடக்கப் புள்ளியிலிருந்து சமமான தூரத்தில் நிற்கின்றனர்.
(2) இப்போது, மூவரிலும் தொடக்கப் புள்ளியிலிருந்து ஆகக் கூடிய தூரத்தில் மாலா நிற்கிறாள்
(3) இப்போது, மூவரிலும் தொடக்கப் புள்ளியிலிருந்து ஆகக் குறைந்த தூரத்தில் கீதா நிற்கிறாள்.

16. கீழே தரப்பட்டுள்ள இரண்டு உருக்களும் ஊடுகாட்டும் தாள்கள் இரண்டில் வரையப்பட்டுள்ளன. இரண்டு உருக்களினதும் ▶ அடையாளத்தை ஒன்றன் மீது ஒன்று அமையுமாறு ஒரு தாளின் மீது மற்றைய தாளை வைப்பதால் கிடைக்கும் உரு யாது?





(1) (2) (3)

www.ikedu.lk

- கீழே உள்ள அடைப்புக்களில் இருக்கும் பொருள்கள் ஒவ்வொன்றுக்கும் உரிய விலைகளின் மொத்தம் நிரையாகவும் நிரலாகவும் தரப்பட்டுள்ளன. அதனை விளங்கி 17,18 ஆகிய வினாக்களுக்கு விடை தருக.

பருப்பு 500g	பருப்பு 1kg	பருப்பு 250g	700 ரூபாய்
முட்டை 3	தேங்காய் எண்ணெய் 250ml	தேங்காய் எண்ணெய் 500ml	600 ரூபாய்
தேங்காய் எண்ணெய் 250ml	(X)	பருப்பு 250g	550 ரூபாய்
500 ரூபாய்	850 ரூபாய்	500 ரூபாய்	

17. பருப்பு 1kg இன் விலை யாது?


(1) 350 ரூபாய் (2) 400 ரூபாய் (3) 450 ரூபாய்

18. (X) இடப்பட்டுள்ள அடைப்பிற்குப் பொருத்தமான விடை யாது?

(1) முட்டை 4 (2) முட்டை 5 (3) முட்டை 6

19. மண்டபம் ஒன்றை அலங்கரிப்பதற்காக, ஒன்றில் 5 நீல நிற பலூன்கள் வீதம் உள்ள 10 பலூன் கொத்துக்களும் ஒன்றில் 4 பச்சை நிற பலூன்கள் வீதம் உள்ள 12 பலூன் கொத்துக்களும் ஒன்றில் 6 வெள்ளை நிற பலூன்கள் வீதம் உள்ள 7 பலூன் கொத்துக்களும் கொண்டுவரப்பட்டன. மண்டபத்தை அலங்கரித்து முடித்ததும் ஒவ்வொரு நிற பலூன் கொத்திலும் இரண்டு பலூன் கொத்துக்கள் வீதம் எஞ்சியிருந்தன எனின், அலங்கரிக்கப் பயன்படுத்தப்பட்ட பலூன் கொத்துக்களில் உள்ள பலூன்களின் மொத்த எண்ணிக்கை யாது?


(1) 100 (2) 110 (3) 120

20. 

இந்த எண்சட்டத்தில் உள்ள மணிகளைப் பயன்படுத்தி 3064 எனும் எண்ணை வகைகுறித்துக் காட்டுமாறு ஆசிரியை அமுதாவிடம் கூறினார். அதற்காக, அமுதா செய்ய வேண்டியது யாது?

(1) ஒன்றுகளின் இடத்திலிருந்து இரு மணிகளையும் நூறுகளின் இடத்திலிருந்து ஒரு மணியையும் பத்துகளின் இடத்திற்கு மாற்றுதல்.
(2) ஒன்றுகளின் இடத்திலிருந்து இரு மணிகளை நூறுகளின் இடத்திற்கு மாற்றுதல்.
(3) ஒன்றுகளின் இடத்திலிருந்து ஒரு மணியையும் நூறுகளின் இடத்திலிருந்து ஒரு மணியையும் பத்துகளின் இடத்திற்கு மாற்றுதல்.


21. கீழே உள்ள படத்தில் காட்டப்பட்டபடி மூன்று சதுரங்களை உருவாக்க ஒரு பிள்ளை சமஅளவுடைய 10 ஈர்க்குத் துண்டுகளைப் பயன்படுத்தியது



இதுபோன்ற 8 சதுரங்களை உருவாக்குவதற்குத் தேவைப்படும் சமஅளவுடைய ஈர்க்குத் துண்டுகளின் குறைந்த பட்ச எண்ணிக்கை யாது?

(1) 22 (2) 25 (3) 32

www.ikedu.lk

22. 

தரப்பட்டுள்ள அட்டைத்தாளை மடித்து ஒரு பெட்டியைச் செய்யும் போது பெட்டியின் நான்கு குற்றுக்கள் இடப்பட்ட முகத்திற்கு எதிராக உள்ள முகத்தில் காணப்படும் குற்றுக்கள் எத்தனை?

(1) 6 (2) 5 (3) 3


23. ஒரு கடிகாரத்தின் நிமிட முள்ளானது சுற்றிக் கொண்டிருக்கும் போது பி.ப 3.30 இலிருந்து பி.ப. 7.20 வரை எத்தனை தடவைகள் மணித்தியால முள்ளைச் சந்தித்துச் செல்லும்?

(1) 5 (2) 4 (3) 3

24. ஒரு குறித்த மாதத்தின் இறுதி நாள் திங்கட்கிழமையாகும். அம்மாதத்தின் முதலாவது திங்கட்கிழமைக்கும் கடைசி திங்கட்கிழமைக்கும் உரிய திகதிகளின் மொத்தம் 32 எனின், அம்மாதத்தில் உள்ள நாட்களின் எண்ணிக்கை யாது?

(1) 28 (2) 30 (3) 31

25. உருக்களில் உள்ள எண்கோலத்திற்கேற்ப வெற்றிடத்தில் இருக்க வேண்டிய எண் யாது?



(1) 9
(2) 11
(3) 13

26. பின்வரும் அட்டவணையில் உள்ளவர்களில் வயது குறைந்தவரையும் வயது கூடியவரையும் முறையே தெரிவு செய்க

பெயர்	பிறந்த திகதி
கவின்	2013.03.18
மாதவன்	2014.08.14
சோழு	2013.07.15
தியாகு	2014.04.20

(1) கவின், மாதவன்
(2) தியாகு, சோழு
(3) மாதவன், கவின்

27. பின்னுக்கு வரப்போகும் அபாயத்தை முன்யோசனையோடு தடுக்க முயலவேண்டும் என்னும் கருத்துள்ள பழமொழி

(1) அணை கடந்த வெள்ளம் அழுதாலும் வராது
(2) ஆரியக் கூத்தாடினாலும் காரியத்தில் கண்ணாயிரு
(3) வெள்ளம் வருமுன்னே அணை கோல வேண்டும்

- மூன்று பிள்ளைகள் நூலகத்திற்குச் சென்ற நேரமும் அங்கிருந்து வெளியேறிய நேரமும் கீழே தரப்பட்டுள்ளன. அதனை அவதானித்து 28, 29 ஆகிய வினாக்களுக்கு விடை தருக

காந்தன் - பி.ப 1.30 இற்குச் சென்று பி.ப. 3.15 இற்கு வெளியேறினார்
சங்கவி - பி.ப 3.00 இற்குச் சென்று பி.ப 4.30 இற்கு வெளியேறினார்
தேவி - பி.ப 1.45 இற்குச் சென்று பி.ப. 4.00 இற்கு வெளியேறினார்

28. குறைந்தளவு நேரம் நூலகத்தில் இருந்த பிள்ளையையும் கூடுதலான நேரம் நூலகத்தில் இருந்த பிள்ளையையும் முறையே காட்டும் விடை எது?

(1) காந்தன், தேவி (2) காந்தன், சங்கவி (3) சங்கவி, தேவி

29. மூன்று பிள்ளைகளும் ஒன்றாக நூலகத்தில் இருந்த நேரம் எவ்வளவு?


(1) 15 நிமிடம் (2) 25 நிமிடம் (3) 30 நிமிடம்

www.ikedu.lk

30. "பொய் பேசுபவர்கள், வாழ்க்கையில் முன்னேறமாட்டார்கள்" என்பதை நன்கு விவரிக்கும் கூற்று

(1) வாழ்க்கையில் முன்னேறிய எவரும் பொய் பேசியதில்லை
(2) பொய் பேசுவோருக்கு வாழ்க்கையில் முன்னேற்றமில்லை
(3) வாழ்க்கையில் முன்னேறாதவர்கள் பொய் பேசியோராவர்

31. முதலில் தரப்பட்ட உருவை முகம் பார்க்கும் கண்ணாடியில் பார்க்கும் போது அது தோற்றும் விதத்தைத் தெரிவு செய்க.




32. மனிதன் ஒருவன் படம் ஒன்றைக் காட்டி இவ்வாறு கூறினான்.
'எனக்குச் சகோதரனோ சகோதரியோ இல்லை. இருந்தபோதும் இப்படத்தில் இருப்பவரின் தந்தை எனது தந்தையின் மகன் ஆவார்.'

இம்மனிதன் யாருடைய படத்தைக் காட்டினான்?

(1) தனது தந்தையின் படத்தை (2) தனது படத்தை (3) தனது மகனின் படத்தை

33. உருவில் வெற்றிடத்துக்குப் பொருத்தமான பகுதியைத் தெரிவு செய்க.




34. விமலுக்கு, தொழிலொன்றைத் தொடங்குவதற்காக 50000 ரூபாய் பணம் தேவைப்பட்டது. அதற்காக அவன் தினமும் காலையில் 1000 ரூபாய் வீதம் சேமித்து வந்த அதேவேளை, செலவுக்காக அப்பணத்திலிருந்து அதேதினம் மாலையில் 300 ரூபாய் வீதம் எடுத்து வந்தான். அவனது சேமிப்பில் சேரும் மொத்தப் பணம் முதன் முதலில் 50000 ரூபாயாக இருப்பது எத்தனையாம் நாளில் ஆகும்?

(1) 70 ஆவது (2) 71 ஆவது (3) 72 ஆவது

35. பின்வரும் எதனை எழுதும்போது இலக்கம் 3, ஆறு தடவைகள் இடம்பெறும்?

(1) 30 தொடக்கம் 34 வரை உள்ள எண்களைத் தொடராக எழுதும் போது
(2) 35 தொடக்கம் 39 வரை உள்ள எண்களைத் தொடராக எழுதும் போது
(3) 33 தொடக்கம் 36 வரை உள்ள எண்களைத் தொடராக எழுதும் போது

36.




